உ

கடவுள் துணை.

## சர்வ முகூர்த்த நிர்ணயம்

என்னும்

# கால விதானம்


இதன் ஆசிரியர்கள்

"நாமகள் திருக்கணித பஞ்சாங்கம்" "தென்னாட்டு வாக்கிய பஞ்சாங்கம்" இவைகளின் கணிதரும், பிருஹத்ஜாதகத்தின் பதிப்பாசிரியரும், ஜாதக கணிதத்தின் ஆசிரியரும், இராஜ ஜோதிட கணிதம் என்னும் நவக்கிரக ஸ்புட கணிதத்தின்

ஆசிரியருமாகிய

ஜோதிட பூஷண

C. கோவிந்த ராஜன், என்னும்

(1) **C. G. ராஜன், B. A., (MATHEMATICS)**

அவரின் குமாரராகிய

**C. S.** மணியம் என்னும்

(2) C. சுப்பிரமணியம், B. A., (Honours)



சென்னை, சௌகார்பேட்டை, கிருஷ்ணப்ப நாய்க்கன் குளத்திற்கு அடுத்த ஆயலூர் முத்தைய்யா முதலி தெருவு, 31-வது நெம்பர் வீடு

C. சுப்பிரமணியம் அண்டு பிரதர்ஸ்,

புக்செல்லர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்,

அவர்களால் தமது

"சி. ஜி. யூரேனியா" அச்சியந்திரசாலையில்

அச்சிடப்பட்டது.


[All Rights Reserved] 1947 [illegible]

உ

# "ஆந்திர கேசரி"

## (சர்வமுகூர்த்த சித்தாந்த பஞ்சாங்கம்)

(தெலுங்கில்) (Regd.)

இது ஆந்திர தேசத்தாருக்கும் தென்னாட்டிலுள்ள எல்லா தெலுங்கர்களுக்கும் மிகவும் உபயோகமான தெலுங்கு பஞ்சாங்கம். ஆந்திரர்களும் தெலுங்கர்களும் அனுஷ்டித்துவரும் சித்தாந்த கணன முறைப்படி இதில் திதி, நட்சத்திரம், யோகம், கரணம் முதலியவைகள் கணிக்கப்பட்டிருக்கின்றன. தெலுங்கர்களுடைய பரம்பரை வழக்கம், மதம் முதலியவை அனுசரித்து இவர்களுடைய தர்ம சாஸ்திரம், நிபந்தனக் கிரந்தங்கள் ரீதியாய் விரதாதி பண்டிகை முதலிய விஷயங்களை நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இதில் நாழிகை விநாடிகளுக்குச் சரியான இங்கிலீஷ் கடியாரமணி நிமிஷம் எல்லோரும் சுலபமாய்த் தெரிந்துகொள்ளும்படியாய்க் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதில் கிரஹணம் கிரகஸ்புடம் முதலியவைகளைத் தற்காலத்து துல்லிபமான கணன முறைப்படி துல்லிபமாகக் கணித்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதில் ஜோதிடர்களுக்கும் மற்றவர்களுக்கும் தேவையான அனேக பொது விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. ஆகையால் இது வைதீகர்களுக்கும், ஜோதிடர்களுக்கும் மிகவும் உபயோகமானது. இதிலுள்ள விஷயங்களை நாளுக்கு நாள் அதிகப்படுத்திக்கொண்டு வரப்படும்.

இது கிருஷ்ணாஜில்லா-டிவி, தாலுக்காவிலுள்ள நிம்மகட்டா கிராமத்தில் வசித்திருந்த தெலுங்கு சித்தாந்தி பரம்பரையைச் சேர்ந்த தெலுங்கு சித்தாந்தி (1) வாவிலால கூசின்னா என்னும் சித்தாந்தி; நாமகள் திருக்கணித பஞ்சாங்கம், தென்னாட்டு வாக்கிய பஞ்சாங்கம் ஆகிய இவைகளின் ஆசிரியர்களாகிய (2) C. கோவிந்தராஜ சித்தாந்தி B. A., (Mathematics) (3) சித்தாந்தி C. S. மணியம் என்னும் சித்தாந்தி C. சுப்பிரமண்யம் B. A., (Honours) இவர்களால் கணிக்கப்பட்டும் தயார் செய்யப்பட்டதுமாகும்.

கிடைக்குமிடம் :—C. சுப்ரமண்யம் அண்டு புக்செல்லர்ஸ்
அண்டு பிரதர்ஸ் பப்ளிஷர்ஸ்

நெ 31, ஆயலூர் முத்தையா முதலி தெருவு,
சௌகார்பேட்டை மதராஸ்.

## விஷய அட்டவணை


| விஷயம் | பக்கம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|---|
| திரிஜென்மம் | 1 | அக்னி ஆதானம் | 41 |
| பும்ஸவனம் | 2 | இராஜாவுக்குப் பட்டாபிஷேகம் | 41 |
| ஸீமந்தம் | 2 | பூ பிரவேசம் | 41 |
| விஷ்ணுபலி | 4 | கோண நக்ஷத்திரமாவது | 42 |
| ஸூதிகாகிரக பிரவச வீடு | 4 | அதன் அபவாதம் | 42 |
| புத்திரமுக தரிசனம் | 5 | ஆகாச பாதாளங்கள் | 43 |
| பஞ்சாயுத தாரணம் | 5 | நூதன வஸ்திரந் தரித்தல் | 43 |
| அன்னப்ராசனம் | 6 | வார பலன் | 43 |
| சௌளம் | 6 | நூதன பூஷணந் தரிக்க | 43 |
| பீஜாவாபனம் விதைத்தல் | 7 | ஔடத சேவை | 43 |
| அக்ஷராரம்பம் | 8 | அக்னி சாஸ்திரம் முதலிய வைதியங்களுக்கு | 44 |
| சாகாதிபர் | 9 | வாஸ்து கரும விதி | 44 |
| வர்ணாதிபன் | 9 | கிரக ஆரம்பம் | 44 |
| மேஷாதி லக்னபலன் | 12 | கிரகப் பிரவேசம் முதலியன | 45 |
| நவாம்சமாவது | 13 | வாஸ்து புருஷ லக்ஷணம் | 45 |
| மூன்று ஜன்ம நக்ஷத்திர அபவாதம் | 14 | தானியம் சேகரித்தல் | 46 |
| மாசம் வாரம் நக்ஷத்திரம் லக்னம் | 15 | தேவதா பிரதிஷ்டை | 47 |
| உத்ஸர் ஜனத்துக்கு | 16 | ரோகம் | 47 |
| அதன் அபவாதம் | 20 | ஆரோக்கிய ஸ்நானம் | 48 |
| அபிஜித் முகூர்த்தமாவது | 20 | தைல ஸ்தானம் | 48 |
| கோதூளி லக்கினம் | 20 | மரம், கொடி, செடி, கிழங்கு போட | 48 |
| விவாகச் சக்ரம் | 22 | குளம், கிணறு முதலியவை தோண்டுதல் | 49 |
| ஆசீவிஷ தோஷமாவது | 24 | மஹாளய சிரார்த்தம் | 50 |
| சித்தயோகம் | 25 | பிரேத கார்ய காலம் | 50 |
| அமிர்த யோகம் | 25 | ஷண்ணவதி சிரார்த்த காலம் | 51 |
| லக்ன ராகு | 26 | பிரதம ருது காலம் | 52 |
| மிருத்யு யோகம் | 27 | வார பலன் | 52 |
| முதல். முதல். நாட்டு பெண்ணை அழைக்க | 30 | திதி முதலிய பலன் | 52 |
| யோனி | 34 | ருது லக்ன பலன் | 52 |
| வைரம் | 34 | ருது கால பலன் | 52 |
| ராசி அதிபதி பொருத்தம் | 35 | ருது ஆடை பலன் | 53 |
| வசியப்பொருத்தம் | 36 | ருது ஸ்தான பலன் | 53 |
| ரஜ்ஜு பொருத்தம் | 36 | ருது தரிசன பலன் | 53 |
| ரஜ்ஜுப் பலன் | 37 | விஷ மல மாதங்கள் | 54 |
| வேதை | 37 | ஸம்ஸ்பர்ச அம்ஹஸ்பதி மாதங்கள் | 54 |
| நந்தை, ரிக்தை முதலிய திதிகள் | 39 | | |
| தசபொருத்தங்கள் பலன் | 40 | | |

## விஷய அட்டவணை


| விஷயம் | பக்கம் |
|---|---|
| யாத்திரை | 54 |
| யாத்திரை சகுனம் | 55 |
| கெட்ட சகுனம் | 55 |
| ஸ்திரி யாத்திரை | 56 |
| கோ யாத்திரை | 56 |
| ஜல யாத்திரை | 57 |
| ராஜனது யாத்திரை | 57 |
| யுத்தத்திற்கு யாத்திரை | 57 |
| திரும்பும் பிரயானம் . | 57 |
| யாத்திரைக்கு 21 (ஏகவிம்சதி) மகா தோஷங்கள் | 59 |
| ரஜஸ், தமஸ், சாத்வீக வேளை | 59 |
| ஹோரை | 59 |
| ஹோரையின் பலன் | 60 |
| குளிகன் | 60 |
| குளிகனில் செய்யும் காரியங்கள் | 60 |
| நக்ஷத்திர விஷ கடிகை அல்லது தியாஜ்யம் | 60 |
| விஷ கடிகையில் விலக்க வேண்டியவ | 61 |
| திதி விஷ நாழிகை அல்லது தியாஜ்யம் | 61 |
| வாரத்தியாஜ்யம். | 61 |
| வேறு மாதம் | 61 |
| தியாஜ்ய பலன் | 61 |
| ராசிகளின் விஷம் | 61 |
| திதி சூலை | 61 |
| வார சூலை. | 62 |
| வார சூலை அபவாதம் | 62 |
| வார பலன் | 62 |
| நக்ஷத்திர சூலம் | 62 |
| நட்சத்திர சூலை அபவாதம் | 63 |
| சந்திர கண்டம் | 63 |
| மகா சூலை | 63 |
| அடல பிரமணம் | 63 |
| யாத்திரை பஞ்சகம் | 64 |
| மிருத நட்சத்திரங்கள் | 64 |
| 1 கண், 2 கண், குருட்டு நட்சந்திரங்கள் | 64 |

| விஷயம் | பக்கம் |
|---|---|
| 1 கண், 2 கண் குருட்டுத் திதிகள் | 64 |
| ஊர்த்துவோதய பிருஷ்டோதய ராசிகள் | 64 |
| லக்கினத் தியாஜ்யம் | 65 |
| பகல் குருடு, ராக் குருடு ராசிகள் | 65 |
| யோகினி | 65 |
| ஏகார்களை | 65 |
| தத்தம், ஜ்வாலை, தூபம் | 66 |
| மாச சூன்ய தோஷம் | 66 |
| ஆஷாட சுக்கில பஞ்சமி வார பலன் | 67 |
| ஆடி உத்திராடக் காற்று | 67 |
| ஆஷாட ரோகிணி குறி | 67 |
| ஆஷாட கிருஷ்ண துவாதசி மழைக்குறி | 67 |
| ஆஷாட பௌர்ணமி மழைக் குறி | 67 |
| சுவாதி பார்த்தல் | 68 |
| பெருங்காற்று கிரக யோகம் | 68 |
| கிரகண பலன் | 68 |
| வக்கிர நிர்ணயம் | 68 |
| மகோதய அர்தோதயம் | 71,97 |
| மழை லக்ஷணம | 71 |
| பாநு மத்திமம், புத சுக்கிர சாமீப்பியம் | 72 |
| நட்சத்திர கண்டம் | 73 |
| ஜாதகர் குருடு | 75 |
| பர ஜாதகம் | 75 |
| கிரகம் உச்சம் நீச்சம் | 76 |
| கிரக உச்ச பலன் | 77 |
| சரம் கேந்திரம் முதலியன | 77 |
| உபர்ஜய அபஜெய ராசிகள் | 77 |
| கிரக நட்பு, பகை | 78 |
| கஜகேசரி யோகம் | 80 |
| மங்கள யோகம் | 80 |
| வாசி, வேசி யோகங்கள் | 81 |
| ஷஷ்டியாம்சம் | 81 |
| சந்திராம்சம் | 81 |


மீதி 98-ம் பக்கம் பார்க்க

உ

கடவுள் துணை.

# சர்வ முகூர்த்த நிர்ணயம்

என்னும்

# காலவிதானம்

—:※:—

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்னவதம் த்யாயேத் ஸர்வவிக்னோப சாந்தயே:

ஸ்ரீ மகாலக்ஷ்மியின் முத்திரை மோதிரத்தி லிழைத்திருக்கும் ரத்தினங்க ளொளியால் சிவந்திருப்பதும் பெரியோர்களாலுபவாஸிக்கப்படுவதும் தேவர்களால் சிரோரத்தினமாக வகிக்கப்படுவதும் ஆகிய ஸ்ரீமந்நாராயணனுடைய தாமரை போன்ற பாதங்கள் நமக்கு சுகமளிக்கட்டும் :—

அழிவற்றவரும் சந்திரனை முடியில் தரித்தவரும் பார்வதி மணாளனுமாகிய பரமசிவனை பணிந்து முகூர்த்த சம்பந்தமாகிற புகழ் பிரசித்திபெற காலவிதான மென்னும் நூலை இயற்றுகிறேன். வேதம், ஆகமம் இவைகளால் சொல்லப்பட்ட விதி (கடமை)யை கைகொள்ளுவதும் மந்திரங்கள் மூலிகைகள் புண்ணிய தீர்த்தங்கள் இவைகளால் பிரகாசிப்பதுமான அழகிய பிரதேசங்களில் மனிதருக்கு கோபம் பயமற்று எல்லாம் சித்திபெற வேண்டி நிஷேக (சாந்தி முகூர்த்தம்) விதியானது செய்யத்தக்கது.

## நிஷேகம் திரிஜன்மங்கள்

(1) திருவோணம், ரோகிணி, அஸ்தம், அனுஷம், சுவாதி, ரேவதி, மூலம் உத்திரங்கள் மூன்று, சதையம், நிஷேகத்திற்கு இந்த நக்ஷத்திரங்கள், 11-ம் உத்தமம். பூசம், அவிட்டம், மிருகசீர்டம், அசுவனி, சித்திரை, புனர்பூசம், இந்த நக்ஷத்திரங்கள் 6-ம் மத்திமம். மற்ற 10-நக்ஷத்திரங்கள் அதமமாகையால் தவிர்க்கவும்.

(2) ஷஷ்டி, அஷ்டமி, பூர்ணமை, அமாவாஸை, சதுர்த்தி, சதுர்த்தசி, இந்த 6-திதிகள் நீக்கி மற்ற திதிகளும்.

(3) திங்கள், வியாழன், வெள்ளி, புதன் இந்த 4 வாரங்களும் நன்று.

(4) ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், தனுசு, மீனம், கும்பம், இந்த 9-ராசிகளுள் பலத்துடன்கூடி, எட்டாமிடம் சுத்தமான ராசியிலே முன் சொல்லிய திதி, வார, நக்ஷத்திரங்களில் நிஷேகஞ் செய்யலாம்.

## திரி ஜன்மங்கள்

(5) சிராத்தம், யாத்திரை, சிகித்சை, ஸ்திரீசேர்க்கை, எண்ணெயிடல், சௌளம், உபநயனம், விவாகம், முதலியவை 3 ஜன்ம நக்ஷத்திரங்களிலும் விலக்கத்தக்கவை.

## பும்ஸவனம் (பூ முடித்தல்)

(6) கர்ப்பம் நன்ருகத் தெரிந்த விஷயத்தில் மூன்ரும் மாதத்தில் வளர்பிறையில் பூசம் அல்லது திருவோண நக்ஷத்திரத்தில் கடகம், மிதுனம், கன்னி, இந்த மூன்றும் நீக்கி மற்ற லக்கினத்தில் பும்ஸவனம் செய்க.

## ஸீமந்தம் விஷ்ணுபலி

(7) ஸௌர மானத்தில் நான்காவது, ஆருவது, எட்டாவது, மாதத்தில் சீமந்தமும், எட்டா மாதத்தில் விஷ்ணு பலியுஞ்செய்க.

## ஸீமந்தத்திற்கு

(8) பூசம், அஸ்தம், புனர்ப்பூசம், திருவோணம், மிருகசீர்டம், ரேவ்தி, ரோகிணி, உத்திரம் மூன்று, இந்த 10 நக்ஷத்திரங்களும் சுபம்.

(9) பக்ஷச்சித்ரமும், ரிக்தையும் பௌர்ணமி, அமாவாசை இவை நீக்கி மற்ற திதிகளும்.

(10) சிங்கம், விருச்சிகம் நீக்கி மற்ற லக்கினங்களும், அசுப சம்பந்தமில்லாத லக்னத்தில்.

(11) திங்கள், புதன், வியாழன், வெள்ளி வாரத்தில், எட்டாமிடம் சுத்தியான லக்கினத்தில் ஸீமந்தம் செய்ய உத்தமம்.



(12) திருவோணம், அசுவனி, அஸ்தம், புனர்ப்பூசம், பூசம், மூலம் மிருகசீர்ஷம், இந்த ஏழு நக்ஷத்திரங்களும், ஞாயறு, செவ்வாய் இந்த இரண்டு வாரங்களும், சில ரிஷிகளுக்கு சம்மதம்.

(13) அசுவனி, அனுடம், மூலம், ரோகிணி, இவைகளில் சங்கடமான நிலைமையில் ஸீமந்தம்செய்யலாமென்று சில ரிஷிகள் விதித்திருக்கின்றனர்.

(14) சித்திரை, சுவாதி, மூலம், அசுவனி, அனுடம், சதையம் இந்த ஆறு நக்ஷத்திரங்களிலும் சங்கடமான நிலையில் சீமந்தம் செய்யலாமென்று சில ரிஷிகள் கருத்து.

(15) சந்திரன் பலத்துடனிருந்தால், சதுர்த்தி, சதுர்த்தசி, பௌர்ணமி, இத் திதிகள் ஸீமந்தத்திற்கு நன்றென சில ரிஷிகள் புகழ்ந்துரைக்கின்றனர்.

(16) ராத்திரி, விஷ்டி, குளிகன், ரித்தை, பௌர்ணமி, அஷ்டமி, செவ்வாய், ஞாயிறு, மூன்று ஜன்ம நக்ஷத்திரங்கள் இவையெல்லாம் ஸீமந்தத்திற்கு விலக்கவும்.

## மூன்று ஜன்ம நக்ஷத்திரங்களில் விலக்க வேண்டியவை.

(17) ஆயுத பயிற்சி, உபநயனம், சௌளம், விவாகம், யாத்திரை, பும்ஸவனம், ஸீமந்தம், மருந்துண்ணல், பிதுரு காரியங்கள் க்ஷவரம், ஸ்திரீ சேர்க்கை, யுத்தம், வாத்தியம் வாசித்தல், யானை, குதிரை முதலிய ஏற்றம், எண்ணெயிட்டுக்கொள்ளல் இவை யெல்லாம் தவிர்க்கவும்.

(18) ஸீமந்தத்திற்கு ஏற்படுத்தும் லக்னத்திற்கு ஐந்தாமிடம் எட்டாமிடம் இவைகளில் பாபகிரக மிருந்தாலும் லக்கினத்தில் குரு இருந்தாலும் அந்த கர்ப்பம் அழியும்.

(19) கிரகப் பிரவேசம், ஸீமந்தம், யாகம், பூ முடித்தல், கர்ப்பாதானம், விவாகம், இந்த ஆறு கர்மங்களுக்கும் ஸ்திரீ பிரதானமாக (பெண் நக்ஷத்திர முதல்) பார்க்கவும் புருஷனுக்கு, சந்திர தாராபலன் வேண்டும்.

(20) நாட்கள், குண தோஷங்களுடன் கலந்திருக்கும். தோஷமற்ற நாள் தேவர்களுக்கும் கிட்டாது. ஆகையால், அற்ப தோஷங்களிருந்தாலும், அதிக குணபாகமுள்ள நாளில் சுபங்கள் செய்யவும்.

(21) காலமானது எப்போதும் ஸர்வவியாபி யாகையால் எப்போதும் தோஷமுமில்லை குணமுமில்லை.

(22) இன்ன மாதங்களில் இன்ன கருமம் செய்யவேண்டுமென்று விதித்த கருமங்களுக்கு, குருசுக்ர மூடங்களும், அதிக மாஸாதி தோஷங்களும், இல்லை. மாஸாதி தோஷங்களும் பரிகரிக்க வேண்டாம், கால பலத்தினால் தோஷமில்லை.

(23) யாத்திரை, விவாகம், கிரக, பட்டண, கிராம, பிரவேசங்கள், ஸீமந்தம், ஸமாவர்த்தனம், வைத்தியம், உபநயனம், விருதங்கள் இவை யெல்லாம், ஜன்ம ராசியில் செய்யலாம் :—

(24) லக்னத்திலிருந்து, கேந்திர திரிகோணங்களில் சுபரும் 3-6-11 ல் பாபரும் இருக்கவேணும், சுபகிரகங்களின் (உதய) சர அம்சாதிகள் நன்று, (கேந்திர கோணங்கள்) பாபிகள், 3-6-11 ல் இருக்க நன்று, 8-ல் ஒரு கிரகமும் இருக்கக்கூடாது. ஜன்ம ராசிகளில், விவாகம், ஸீமந்தம், பிரயாணம், வாகன மேறுதல் முடி இறக்கல், மருந்துண்ணல் இவை தவிர்க்கவும்.

(25) லக்னத்திலிருந்து அஷ்டமாதிபதி, கேந்திரத்திலிருந்து சுபரால் பார்க்கப்பட்டிருந்தால் எட்டாமிடத்துக் குண்டான குற்றமெல்லாம் போக்குவர்.

## விஷ்ணு பலி

(26) ரோகிணி, திருவோணம், பூர்வபக்ஷத்து துவாதசி, ஸப்தமி இவைகளில் ஒரு நாளில் சுக்லபக்ஷத்தில் விஷ்ணுபலி செய்யவும். சிரவணம், ரோகிணி, பூசம், துவிதியை, தசமியும் நன்றென சில ரிஷிகள் உரைத்தனர்.

## ஸூதிகா கிரக பிரஸவவீடு விதி

(27) கர்பிணி இராசிக்கு 6-8-12 மிடங்கள் விலக்கத்தக்கன. மற்ற ஒன்பது ராசிகளும் நன்று. பூசம், புனர்பூசம், மிருகசீர்டம், பௌஷ்ண ரேவதி, ஸ்வாதி, ரோகிணி, அனுடம், உத்திரம் மூன்று சித்திரை, அசுவனி, திருவோணம் இந்த 12 நக்ஷத்திரங்களும் விருச்சிகம் கும்பம் தவிர மற்ற ராசிகளும், ரிக்தையில்லாத திதிகளும், திங்கள் புதன் வியாழன் வெள்ளி சனி இந்த வாரங்களிலும் அனுகூலமாய் சுபயுக்தமான ராசிகளிலும் சூதிகாகிரகம் அமைக்க நன்று.



## புத்திர முகதரிசனம்

(28) பிதா, பிதுரு ரிணத்திலிருந்து விடுபடுகிறபடியால் நக்ஷத்திரங்களையும் பாராமல் தத்காலத்தில் தானே ஜாதகருமம் செய்யக் கடவன்.

## பஞ்சாயுத தாரணம்

(29) பிள்ளை பிறந்த ஐந்தாநாள் பாலகிரகதோஷ நிவாரணத்திற்காக பஞ்சாயுத யந்திரரக்ஷை ஒன்று ஒரு கூட்டுப் பொன் அரை ஞாணில் கட்டக் கடவன்.

(30) பிள்ளை பிறந்த 31-வது நாளிலோ அல்லது 2-வது ஜன்ம நக்ஷத்திரத்திலோ, சுப சம்பந்தமுள்ள லக்னத்தில் உபமாதா (வளர்ப்புத்தாய்) வானவள் பாலடையினால் சிசுவின் வாயில் பால்வார்க்கக் கடவள்.

(31) பிள்ளை பிறந்த 10-வது நாளிலோ, 12-வது நாளிலோ, அனுடம், புனர்பூசம், மகம், உத்திரம் மூன்று, சதையம், ஸ்வாதி, அவிட்டம், திருவோணம், ரோகிணி, அசுவனி, மிருகசீர்டம், ரேவதி, அஸ்தம், பூசம், இந்த 16 நக்ஷத்திரங்களிலே ஸ்திர ராசியில், பக்ஷச்சித்திரம், பௌர்ணமி, அமாவாசை, நவமி தவிர மற்ற திதிகளில், வெள்ளி, புதன், வியாழன், திங்கள், சனி, இந்த வாரங்களில் அஷ்டம சுத்தியான லக்னத்தில், நாமகரணம் செய்யக் கடவன்.

(32) 12-வது நாளிலோ, 16-வது நாளிலோ, 6-வது மாதத்திலோ, 8-வது மாதத்திலோ, முற்பகலில் (பூர்வான்னம்) கண்டதிதி கண்ட நக்ஷத்திரங்கள் நீக்கி திருவோணம், திருவாதிரை, அஸ்தம், சித்திரை, மிருகசீர்டம், ரேவதி உத்திரம் மூன்று பூசம், புனர்பூசம், அவிட்டம், இந்த நக்ஷத்திரங்களில் கும்பம், விருச்சிகம், சிங்கம் தவிர மற்ற லக்னங்களில், திங்கள், புதன், வியாழன், வெள்ளி, இந்த வாரங்களில் பௌர்ணமி, அமாவாசை, ரித்தை நீக்கி மற்ற திதிகளில், அஷ்டம சுத்தியான லக்னத்தில் காது குத்தக் கடவன்.

(33) பிள்ளை பிறந்த மூன்றாவது மாதத்தில், சூரியனைப் பார்த்தல், நான்காவது மாதத்தில் சந்திரனைப் பார்த்தல், பசுவையும் பார்த்தல், அன்னப் பிராசனத்துக்கு விதித்த நாளில், குழந்தையை வெளியே புரப்படப் பண்ணவும்.

## அன்னப்ராசனம்

(34) 6-வது மாதம், 8-வது மாதம், 10-வது மாதம், 12-வது மாதம், பூர்வபக்ஷத்தில் புனர்பூசம், பூசம், அவிட்டம், மிருகசீர்டம், அஸ்தம், ஸ்வாதி, அசுவனி, அனுஷம், ரோகிணி, திருஓணம், சதையம், உத்திரங்கள் மூன்று, சித்திரை, ரேவதி, இந்த நக்ஷத்திரங்களில், பக்ஷச் சித்திரையும், நவமி நீக்கி மற்ற திதிகளிலும், வியாழன், வெள்ளி, திங்கள், புதன் இந்த வாரங்களிலும், 9-ம் மிடத்தில் புதனும், 8-ம் மிடத்தில் செவ்வாயும், 7-ம் மிடத்தில் சுக்கிரனும் இல்லாமல் 10-ம் மிடம் சுத்தமான லக்கினத்தில் அன்னப்பிரரசனம் செய்விக்கவும்.

## சௌளம்

(35) மூன்ருவது வருஷம் அல்லது ஐந்தாவது வருஷத்தில் உத்தராயணத்தில் சுக்ல பக்ஷத்தில் குரு, சுக்கிர மூடமில்லாத காலத்தில் புனர்பூசம், மிருகசீர்டம், அவிட்டம், திருவோணம், பூசம் ரேவதி சித்திரை அசுவனி அஸ்தம் இந்த நக்ஷத்திரங்களில் முற்பகலில் ஷஷ்டி, அஷ்டமி, பிரதமை, ரிக்தை நீக்கி மற்ற திதிகளில், திங்கள், புதன், வியாழன், வெள்ளி, இந்த வாரங்களில் இவர்கள் பார்வையுள்ள லக்கினங்களில், கடகம், கன்னி, மிதுனம் மீனம், துலாம், விருஷபம், மகரம், இவை உத்தமம். மேடம், விருச்சிகம், சிங்கம், தனுசு, கும்பம் இவை மத்திமம் சுபதிருஷ்டி நன்று. அதிக குணங்களிருப்பினும் கும்பமாகாது எட்டாமிடம் யாருமில்லாமல் சுத்தியா யிருக்கவேணும். சிலர் சுக்கிரனிருக்கலாமென்று சொல்லி யிருக்கின்றனர். ஏழாமிடத்தில் சுக்கிரன், சூரியன், செவ்வாய் சனி இவர்கள் இருக்கக்கூடாது இவ்விதம் பார்த்து ஒன்பதாமிடம் சுத்தியுள்ள லக்கினத்தில் சௌளம் செய்ய நன்று.

(36) குழந்தைக்குத் தாயார் கர்ப்பிணி ஆனல் ஐந்து வருஷங்கள்வரை சௌளம் செய்யக்கூடாது. ஐந்து வருஷங்களுக்கு மேல் கர்ப்பிணியானுலும் சௌளம் செய்யலாம். க்ஷத்திரிய வைசிய சூத்திருக்கு பணிசெய்யவும், மல்லராகவும், நகமறுக்கவும், இவ்விதமே பார்த்துக்கொள்ளவும்.



## சௌள விதி

(37) அஸ்தம், அசுவனி, திருவோணம், ரேவதி. அவிட்டம், புனர்பூசம், பூசம், மிருகசீர்டம், சித்திரை இந்த 9-நக்ஷத்திரங்களும் உத்தமங்கள்.

(38) சுவாதி, சதையம், ரோகிணி உத்திரம் மூன்று இந்த 6-நக்ஷத்திரங்களும் மத்திமம். மற்ற 12-நக்ஷத்திரங்களும் அதமம் விலக்கத்தக்கவை.

(39) சைவ பாஞ்சராத்ராதி விசேஷகால நிர்வாண தீக்ஷையிலேயும் (தீக்ஷா காலத்திலும்) ராஜாபிஷேகத்திலும், விருத நியமம், முதலிய கர்ம (சடங்கு) ஆரம்பத்திலும் பிரஸவ, பிரேத (ஜனன மரண) சூதிகாந்தங்களில் (தீட்டு முடிவில்) தேவதா பிரதிஷ்டை, அர்ச்சனை ராஜாக்ஞை சிறைவிடுதல், விவாககாலம் இச்சமயங்களில் திதிவார தோஷங்கள் ஒன்றும் பாராமல் க்ஷௌரம் செய்துக்கொள்ளவும் க்ஷௌரத்திற்கு எல்லா காலமும் நன்று. பிரேத காரிய க்ஷவரத்தில் வெள்ளிக்கிழமை தவிர்க்கவும்.

## பீஜாவாபனம் விதைத்தல்

(40) பீஜாபவனம், க்ஷௌரம் வாஸ்து செய்தல், சுபகாரியம் பயிர் இவை இரவில் செய்யக்கூடாது. செய்திடில் சீக்கிரம் அழிவுறும்.

(41) ஜன்ம நக்ஷத்திரம் முதல் 2-4-6-8-9-வது நக்ஷத்திரங்கள் உத்தமம். ஜன்மத்திற்கு 8-மிடத்தில் சந்திரனிருக்கில் க்ஷவரம் செய்தல், ஆயுள் நாசம், 6-8-ல் சந்திரனுள்ள காலம் க்ஷவரத்திற்கு தவிர்க்கவும்.

(42) திங்கள், புதன், வியாழன், வெள்ளி, நன்று. ஞாயிறு, செவ்வாய், சனி ஆகாது.

(43) பாபகிரகங்களின் வாரங்களுள் பிராமணனுக்கு ஞாயிறும், க்ஷத்திரியனுக்கு செவ்வாயும், சூத்திராளுக்கு சனிக்கிழமையும் விசேஷமாக க்ஷவரம் செய்துக்கொள்ளலாம்.

(44) ஸோமவாரம் (திங்கள்) சுக்லபஷத்தில் நன்று கிருஷ்ண பஷத்தில் நீக்கத்தக்கது, புதன் பாபருடன் கூடியிருந்தால் புதவாரம் ஆகாது.

(45) அனுஷம் முதல் க்ஷௌரத்திற்கு ஆகாது. மற்ற காலங்களில் நன்று. கர்ப்பம் முதல் 3-வது வருஷத்திலோ 5-வது வருஷத்திலோ அவ்வருஷத்தை மூன்று பாகமாக்கி முதல் பாகந் தள்ளி மற்ற இரண்டு பாகங்களில் நல்ல நாளில் க்ஷௌரம் செய்யலாம்.

(46) நூதன வஸ்திரந் தரிக்கவும், க்ஷவரம் செய்யவும் மேடம் (லக்னம்) துக்கம் ஸிம்மம் அவமானம், கும்பம் ரோகம், விருச்சகம் தேகபீடை, தனுசு ராஜபீடை என்று அறியவும்.

(47) சதுர்த்தியில் மயிர் கழித்தால் தாய்க்கும் சதுர்தசி சகோதரிக்கும் ஷஷ்டி சகோதரனுக்கும் பௌர்ணமி பிதாவுக்கும் ஆகாது நவமி தனதானிய நாசம் அஷ்டமி ஸ்திரீ ஹானி.

(48) கர்ப்பவதியாய் 90 நாளைக்கு மேல் பர்த்தாமயிர் கழிக்கக்கூடாது. குழந்தை பிறந்த 10-ம் நாள்தான் பண்ணிக்கொள்ள வேண்டியது.

(49) க்ஷௌரவம் பீஜாவாபனம் பிரதிஷ்டை உர்ச்சவம் மலை ஏறுதல் இந்த ஐந்தும் கர்ப்பிணியின் கணவன் நீக்கவேண்டியது.

(50) மயிர்கழித்தல் சவத்தின் பின்போகுதல் நகமறுத்தல் சிராத்தம் புசித்தல் வீடு கட்டுதல் தூரயாத்திரை விவாகஸ் செய்தல் சமுத்திர ஜலம்தொடல் இவைகளை கர்ப்பிணி நாயகன் நீக்கவும் அப்படிச் செய்யில் ஆயுட் குறையும்.

(51) பயிர்த்தொழில் பிரயாணம் மயிர் கழித்தல் விவாகம் அன்னப்பிராசனம் நூதன வஸ்திரந்தரித்தல் வாகன மேறுதல் இவை ஜன்ம நக்ஷத்திரத்தில் செய்யலாம்.

(52) சௌளத்திற்குப் பிறகும் உபநயனத்திற்குப் பிறகும் ஆறுமாதம் மயிர் கழிக்கக்கூடாது. பிரமசாரிக்கு மத்தியில் உபாகர்மநாள் வந்தால் மயிர் கழிக்கலாம்.

## அக்ஷராரம்பம்

(53) கர்ப்பத்துக்கு ஐந்தாம் வயதில் . உத்தராயணத்தில் மாசிமாதந் தவிர மற்ற ஐந்து மாதங்களில் சுக்ல பக்ஷத்தில் தேவதா நமஸ்காரத்தை முன்னிட்டு, ஸரஸ்வதிபூஜை செய்து, அஸ்தம் புனர்ப்பூசம், ஸ்வாதி, அனுஷம், திருவாதிரை, ரேவதி அசுவனி, சித்திரை திருவோணம் இந்த நக்ஷத்திரங்களில் செவ்வாய்



சனி இவர்கள் வாரங்களையும் இவர்கள் லக்னங்களையும் தள்ளிவிட்டு சர ராசியிலோ உபயராசியிலோ பலத்துடன்கூடிய லக்னத்தில்-பிரதமை-ரித்தை அஷ்டமி தவிர மற்ற திதிகளில் அஷ்டம சுத்தியுள்ள லக்னத்தில் அக்ஷராப்பியாஸம் செய்ய நன்று.

(54) வித்தியா ஆரம்பத்தில் ஷஷ்டி நன்று. ஞாயிறு வியாழன் வெள்ளி இந்த மூன்று வாரங்களிலும் மூடனுனும் நல்ல புத்தியுண்டாகும். திங்கள் புதன் இந்த இரண்டு வாரங்களும் பாவக்ஷயங்கள் (குறைவு) செவ்வாய் தடை, சனி வித்தைநாசம்.

(55) 8-ம் மிடத்தை ஒரு கிரகமும் பார்க்கக்கூடாது. புதித் ஸ்தானத்தில் புதன் குரு சுக்கிரன் இருக்கலாம்.

(56) பிரம க்ஷத்திரிய வைசியர் மூன்று ஜாதிகளும் தங்களுக்குச் சொல்லிய வருஷங்களில் ருதுக்களில் சுக்ல பக்ஷத்தில் ஜன்ம லக்னத்துக்காவது சந்திர லக்னத்துக்காவது, 2-11-7-ல் குரு இருக்குங் காலத்தில் குரு சுக்ர அஸ்தமன நீசமில்லாத சமயத்தில் தன் சாகாதிபன் பலவானுயிருக்கும்போது மிருகசிர்டம் புனர்பூசம் உத்திரம் மூன்று அசுவனி திருவோணம் அவிட்டம் சுவாதி சித்திரை ரேவதி, அஸ்தம் அனுஷம் ரோகிணி, பூசம் இந்த 15 நக்ஷத்திரங்களில் ரித்தை பௌர்ணமி அமாவாசை பிரதமை நவமி தவிர மற்ற திதிகளில் ரிஷபம், தனுசு, மீனம், கன்னி கடகம் துலாம் மிதுனம் இந்த 7 லக்னங்களில், 8-ம் மிடம் சுத்தியான லக்னத்தில் சுபாம்சங்களில் உபநயனம் செய்ய நன்று.

## சாகாதிபர்

(57) ருக்வேதத்துக்கு குரு, யஜுர் வேதத்துக்கு சுக்கிரன், சாம வேதத்துக்கு செவ்வாய், அதர்வண வேதத்துக்கு புதன்.

## வர்ணுதிபன்

(58) பிராமணனுக்கு சுக்கிரன், க்ஷத்திரியனுக்கு குரு, வைசியருக்கு புதன், சூத்திரருக்கு சனி.

(59) சாகாதிபதியின் வாரமும் சாகாதிபதியின் லக்னமும் அச் சாகாதிபன் பலமும், சாகாதிபன் அமிசமும்கூடில், எல்லா தோஷங்களையும் போக்குவர்.

(60) மீனம், தனுசு, கடகம், இவைகளில் குரு இருந்தால் அவர் அசுப கோசரத்திலிருந்தாலும், விவாகம், உபநயனம் முதலியவைகளுக்குச் சுபராவர்.

(61) குரு, சுக்கிரர், நீச சத்ரு கிரகத்திலிருந்தாலும் பிதுரு ஸ்தானத்திலிருந்தாலும் பராஜிதராயினும் அந்த முகூர்த்தத்தில் உபநயனம் பண்ணிக்கொண்டவர் வேதபாகியனுய் கர்ம (கடமை) பஹிஷ்கிருதனுவான் (ஒதுக்கப்பட்டவன்).

(62) உபநயனம், ஸமாவர்த்தனம், (கோதானம்) விவாகம், யாகம் முதலிய கிரியைகளும் குரு பிரபலமுடையவராகில் இம் முகூர்த்தம் புண்ணியவான்களுக்கு சித்திக்கும்.

(63) ஜன்ம நக்ஷத்திரத்திற்கு 7-5ம் நக்ஷத்திரங்களும், சந்திராஷ்டமும் 27-வது நக்ஷத்திரமும் வைநாசிகளும் மூன்று ஜன்ம நக்ஷத்திரங்களும் உபநயனத்திற்கு விலக்கத்தக்கது.

(64) பிரயாணத்திற்கு பிரத்யரத்தாரை (5-வது ஜன்ம நக்ஷத்திரம் 3-க்கும் 5-வது நக்ஷத்திரம்) நன்று. மௌஞ்சீகர்மம் (உபநயனத்திற்கு) ஜன்ம நக்ஷத்திரத்திற்கு 3-க்கும் மூன்ருவது நக்ஷத்திரமும் விவாகத்திற்கு ஐந்தாவது நக்ஷத்திரமும் சுபமென்று சில ரிஷிகள் கருத்து.

(65) சிராத்தம், விவாகம், மயிர்கழித்தல், பிரயாணம் பிறந்தநாள் உபநயனம் இவைகளில் 27-வது நக்ஷத்திரம் நீக்கவும் இல்லாவிடில் மரணம் தரும்.

(66) இருபத்தேழாவது நக்ஷத்திரம் வேறு ராசியிலிருந்தால் எல்லா சுப கர்மங்களும் விலக்கவும், ஒரே ராசியாகில் தோஷமில்லை.

(67) அஸ்தம், சுவாதி, ரோகிணி, மிருகசீர்டம், திருவோணம், ரேவதி, உத்திரம் உத்திராடம், அவிட்டம், புனர்ப்பூசம் சித்திரை, இந்த 11-நக்ஷத்திரங்களும், 27-வது நக்ஷத்திரமாய் பின்னராசியினுலும் சுபம் தோஷமில்லை.

(68) 27-வது நக்ஷத்திரம் பின்ன ராசியிலானுலும் பொன் எள் பழ தானங்களால் தோஷ பரிகாரம்.

(69) வைநாசிகமாவது - ஜன்ம நட்சத்திரத்தின் 88-வது பாதம்-அதில் எல்லா சுபகர்மாக்களும் விலக்கவும் அந்த பாதத்துடன்கூடிய நட்சத்திரமும் விலக்கவும் இது சில ரிஷிகள் சம்மதம்.



(70) பிராமணர் உபநயனத்தில் செவ்வாய் சனி வாரங்களும் கிருஷ்ண பட்சத்தில் திங்களும் அஸ்தமனமடைந்த புதன் வாரமும் விலக்கத்தக்கது.

(71) சனி, செவ்வாய், சூரியன் இவர்கள் வாரங்கள் லக்கினங்கள் அமிசங்கள் திரேக்காண ஹோரை முதலியன இவர்கள் பார்வை இவைகளில் உபநயனஞ் செய்யில் வித்தை, ஞானம், புத்தி, ஆயுள், செல்வம் இவை யெல்லாம் நஷ்டமாகும்.

(72) உபநயனத்தில் மூலம் எப்போதும் விலக்கத்தக்கது சோணம் (திருஓணம்) முதல் மூன்று நட்சத்திரங்கள் மத்திமம் விவாகத்தில் திருவோணம், அவிட்டம், சதையம் புனர்பூசம் பூசம் அசுவனி சித்திரை இந்த 7-ம் எப்போதும் விலக்கத்தக்கது. எல்லா கர்மாக்களுக்கும் தினப்பொருத்தமும் சந்திர பலமும் பார்க்கவும்

(73) ஜன்ம நட்சத்திரம் முதல் சந்திர நட்சத்திரம் வரை ஆக எண்ணில் ஜன்ம நட்சத்திரம், ஜன்மம், 2-வது ஸம்பத்து 3-வது விபத்து 4-வது க்ஷேமம் 5-வது பிரத்தியரம் 6-வது ஸாதகம் 7-வது வதம் 8-வது மைத்திரம் 9-வது பரம மைத்திரம் இவ்விதமே ஒன்பது ஒன்பதாக 3-பரியாயம் எண்ணிக்கொள்ளவும் ஸம்பத்து - க்ஷேமம்-ஸாதகம்-மைத்திரம் ஸகல கர்மாக்களுக்கும் நன்று, ஜன்மம்-விபத்து, பிரத்தியரம்-வதம் இவை ஒரு கர்மாவுக்கும் ஆகாது, விபத்திலே உபநயனம்செய்யலாம், பிரத்தியரத்திலே யாத்திரையும் விவாகமும் செய்யலாம். மூன்று ஜன்மங்களிலே சில கர்மாக்கள் செய்யலாம், வதத்திலே ஒரு கர்மாவும் பண்ணக்கூடாது.

(74) முதல் பரியாயத்தில் விபத்து-பிரத்தியர-நைதனங்கள் விலக்கத்தக்கது இரண்டாவது பரியாயத்தில் அம்சங்கள் (7-3-5) நீக்கி மற்றவை சுபம். மூன்ருவது பரியாயத்தில் எல்லாம் சுபம்.

(75) இரண்டாவதில் அம்சம் நீக்கி என்பது இரண்டாவது பரியாயத்தில் விபத்தில் முதல் பாதம் பிரத்தியரத்தில் 4-வது பாதம் வதத்திலே மூன்ருவது பாதம் நீக்கி மற்ற பாதங்கள் சுபமென்று கருத்து.

(76) ஜன்ம லக்கினம் தேகம், சந்திர லக்கினம் ஜீவிதம் (பிராணன்) இந்த இரண்டு லக்கினங்களுக்கும் குரு அனுகூலமாயிருந்தால் உபநயனம் செய்யவும்.

(77) ருதுவின் அந்தம் (கடை பாகம்) மாசத்தின் அந்தம் நட்சத்திரத்தின் கடைபாகம் விஷ நாழிகை-வருஷத்தின் கடைசி-திதியின் கடைசி-ஷடசீதி ஆரம்பம் வியாகாதம் வஜ்ஜிரம் விஷ்கம்பம் பரிகம் வைதிருதி வியதீபாதம் - சூலம்-கண்டம் அதிகண்டம் மரித்த நட்சத்திரம் பிற்பகல் இரவு இரு சந்தியா காலங்கள் கண்ட நட்சத்திரம் அதிக மாதம் மல மாதம் இவைகளில் கவனியாமல் உபநயனஞ் செய்யில் தனம் தானியம் வித்தை, பொருள் ஆயுள் குறையும்.

(78) வருஷமுடிவு, அட்சய வருஷத்தில் 15-நாட்கள், பங்குனி மாதத்தில் 3-நாள், ருதுவின் முடிவில் ஒருநாள் நட்சத்திர முடிவிலும் திதி முடிவிலும் கடைசியில் இரண்டு நாழிகை விலக்கத் தக்கன யோகத்தின் முடிவில் இரண்டு நாழிகையும், வியாகாதாதிகளில் முடிவில் 6 நாழிகையும் விலக்கத்தக்கது. மாதப் பிறப்பிற்கு முன்னும் பின்னும் 30-நாழிகை நீக்கவும்.

(79) மாதப் பிறப்பிற்கு முன் 30 நாழிகையும் பின் 30 நாழிகையும் எல்லா சுபங்களுக்கும் நீக்கவும். அற்பசி விஷுவுக்கு முன் 60 நாழிகையும் பின் 60 நாழிகையும் நீக்கவும். ஆடி அயனத்திற்கும் சித்திரை விஷுவிற்கும் மகர சங்கிராந்திக்கும் முன் 3 நாளும் பின் 3 நாளும் விலக்கவும்.

## மேஷாதி லக்ன பலன்

(80) மேஷத்தில்-மூடனுவான், ரிஷபத்தில்-தனவான் வித்தையுண்டாம், மிதுனத்தில்-வேதசீலன், கடகத்தில்-ஷடங்க வித்துவான், சிம்மத்தில்-சிற்பி, கன்னி-வித்துவான், துலாத்தில்-வியாபாரி, விருச்சிகத்தில் - விறகு தலையன், தனுசு - எல்லோராலும் மதிக்கத்தக்கவன், மகரம் - சூத்திர ஆசாரமுடையான், கும்பத்தில் சேக்குத்தொழில், மீனத்தில்-சகல சாஸ்திர யாரங்கதன்.

(81) 8-ம் மிடத்தில் ஒரு கிரகமும் இருக்கலாகாது சுப கிரகமிருந்தால் ஆசாரியனுக்கு தோஷம் பாபகிரக மிருந்தால் சீடனுக்கு தோஷம்.



(82) ஜன்ம நட்சத்திரத்திற்கு 10-வது கர்ம நட்சத்திரம் 16-வது ஸாங்காதிகம் 18-வது ஸாமுதாயிகம் 23-வது வைநாசிகம் 25-வது மானசம் இவைகளில் சுப கர்மாக்கள் செய்யக் கூடாது.

(83) 12-ம் இடத்தில் சூரியனும் செவ்வாயும் பலவானுகப் பார்த்தாலும், 12-ல் சூரியனிருந்து செவ்வாய் பார்த்தாலும் ஆசாரியனுக்கு அந்தகனுதல் (குருடனுவான்) 12-லுள்ள சூரியனை குஜன் பல ஈனனுய் பார்த்தானுகில் சிறிது நாளில் குருடனுவான் சனி பார்த்தால் சீடனுக்கு வித்தை நாசம்.

(84) சூரியாம்சத்தில் சந்திரனிருக்க உபநயனம் பண்ணுல் சத்துருபீடை சந்திரன் தன் அம்சத்திலிருக்கும்போது பண்ணுல் ஜாதி பிரஷ்டம் செய்வான்.

(85) திருவோணம் புனர்பூசம் இவைகளில் கடகாம்சத்தில் சந்திரனிருக்கும்போது பண்ணிணுல் அச்சிசுவுக்கு க்ஷயரோகம் எப்போதும் பாதிக்கும்-அழியும்.

(86) குஜாம்சத்தில் சந்திரனிருக்கும் பாபிஷ்டனும் புதாம்சத்திலாகில் தனவானும் வித்துவானும் குரு அம்சமாகில் பிரசித்த வித்வானுய் தன தானியாதி நிறைந்தவனும் உலகப் பிரசித்தனும் சுக்ராம்சமாகில் சதாசரமுடையவனும் ஞானியும் வித்துவானும் சனி அம்சத்திலாகில் சரீரத்தில் க்ஷயரோகமும் பண்ணுவர்.

## நவாம்சமாவது

(87) 1. மேஷ விருச்சிகத்திற்கு செவ்வாய், 2. ரிஷப துலாத்துக்கு சுக்கிரன், 3. மிதுன கன்னிக்கு புதன், 4. கடகத்திற்கு சந்திரன், 5. சிம்மத்திற்கு சூரியன், 6. தனுசு மீனம் குரு, 7. மகர கும்பத்துக்கு சனி, இவர்கள் நவாமிசாதிபர் அசுவனி முதல்பாதம் மேஷாமிசம் முதலாக கிருத்திகை நான்காம்பாத மளவாக மீன குரு அந்தமாக எண்ணிக்கொள்ளவும் ரோகிணி முதல் மூன்று மூன்று நட்சத்திரம் வீதம் ரேவதி வரையில் எண்ணி அமிச மறியவும்.

அசுவனி முதல் பாதம் மேஷச் செவ்வாய், 2-ம் பாதம் ரிஷப சுக்கிரன், 3-ம் பாதம் மிதுன புதன், 4-ம் பாதம் கடக சந்திரன், பரணி 1-ம்பாதம் சிம்மரவி, 2-ம் பாதம் கன்னி புதன்,

3-ம் பாதம் துலா சுக்ரன், 4-ம் பாதம் விருச்சிகச் செவ்வாய் கார்த்திகை 1-ம் பாதம் தனுர் குரு, 2-ம் பாதம் மகர சனி, 3-ம் பாதம் கும்ப சனி, 4-ம் பாதம் மீனகுரு, இவ்விதம் ரேவதி வரையில் எண்ணி அறியவும்.

(88) அமிசாதிபதி பாபியாய் ஸ்வக்ஷேத்திரத்திலோ தன்னுச்சித்திலோ இருந்தால் பாபாம்சமானாலும் தோஷமில்லை.

(89) பால சந்திரனாகிலும் க்ஷீண சந்திரனாகிலும் லக்னத்திலிருக்கில் ராசிக்கு சந்திரோதய தோஷமில்லை என்று நாரதர் சொல்லுகிறார்.

## மூன்று ஜன்ம நக்ஷத்திர அபவாதம்

(90) தேவதா பிரதிஷ்டை தானியம் சேகரித்தல் பயிர்த்தொழில் வியாபாரம் அக்ரஹாயனம் ஸ்வாமி (எஜமான்) தரிசனம் தீர்த்த யாத்திரை தானம் ஜபம் ஹோமம் முதலியன நூதன வஸ்திரந் தரித்தல் வாவி கிணர் ஆரம்பம் ராஜாபிஷேகம் ஆண்டு நிறைவு சாந்தி கர்மங்கள் தீட்சை உபநயனம் விவாகம் இவை சங்கட விஷயத்தில் (செய்ய நேரில்) மூன்று ஜன்ம நட்சத்திரங்களில் செய்யலாம்.

(91) எஜமான் சிநேகர் இவர்களை காணவும் நூதன வஸ்திரந் தரித்தல், நூதன விருந்து வித்தை ஆரம்பம் விதை விதைக்க மூன்று ஜன்ம நட்சத்திரங்களும் நன்று.

(92) தேவதா பிரதிஷ்டை நூதன வஸ்திரம் பூஷணம் தரிக்க தானியம் சேகரிக்க தேவதா விருதங்களிருக்க சைவ பாஞ்சராத்திர தீக்ஷை ஏற்க அக்னி கிரகிக்க அக்னி சந்தானம் கிரகப்பிரவேசம் கிராமப் பிரவேசம் ராஜாபிஷேகம் விஷ்ணுபலி அங்குரார்ப்பணம் கிரக யக்கியம் மகாதானம் ஜாத கர்மம் நாமகரணம் இந்த 15 கர்மங்களும் திரிஜன்மங்களில் செய்யலாம்.

(93) கிரகப்பிரவேசம் கிரகாரம்பம் பூஷண தாரணம் பயிர்த்தொழில் வித்தை ஆரம்பம் நூதன வஸ்திரந்தரித்தல் இவை எல்லாம் திரிஜன்மங்களில் செய்யலாம்.

(94) பெண் ஜன்ம நட்சத்திரத்திலும் பிள்ளைக்கு அனுஜன்மங்களிலும் விவாகம் செய்யலாம்.



(95) மூத்த புத்திரனுடையவும் மூத்த புத்திரியினுடையவும் ஜன்ம நட்சத்திரம் ஜன்மவாரம் ஆனி மாசம் இவைகளில் சுப கர்மாக்கள் செய்யக்கூடாது.

## மாசம் வாரம் நக்ஷத்திரம் லக்னம்

(96) ஜன்ம மாசாதிகளில் முதல் கர்பத்துக்கு சுப கர்மாக்களொன்றும் பண்ணக்கூடாது இதராளுக்கு செய்யலாம்.

(97) ஜேஷ்ட (ஆனி) மாசம் சாபவாதம் ஜேஷ்ட மாசாதிபன் புதன் சுபருடன் கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தால் ஜேஷ்ட (மூத்தவ)னுக்கும் ஆனி மாசத்தில் சுபகர்மம் செய்யலாம்.

(98) சூரியன் மிதுனத்திலிருந்து குரு சுக்கிரரால் பார்க்கப்பட்டால் மூத்த பிள்ளைக்கும் ஆனிமாத தோஷமில்லை.

(99) ஜன்ம மாசாதிபன் மித்திர க்ஷேத்திரத்திலோ தன்னுச்சத்திலோ சுபரால் பார்க்கப்பட்டோ இருந்தால் ஜன்ம மாச ஜன்மவார ஜன்ம நட்சத்திரங்களில் மூத்தவனுக்கு சுப கர்மா செய்யலாம்.

(100) எந்த கிரகமாயினும் அஸ்தங்கதமாயினும் நீச சத்ரு ராசிகளிலிருந்தாலும் பராஜிதமாய் (தோல்வியுற்றிருந்தாலும்) அசுரோத்தியனுக்கு (பாத்திரமில்லாத யிடத்தில்) தானஞ் செய்தது போல் தன் பலன்களை தரமாட்டார்கள்.

(101) ஜன்ம லக்னம் சரீரமும் சந்திர லக்கினம் பிராணனுமாகையால் இவை இரண்டிற்கும் குரு அனுகூலமான காலத்தில் உபநயனஞ் செய்யவும்.

(102) திரியோதசி சதுர்தசி பௌர்ணமி அமாவாசை ஸப்தமி அஷ்டமி நவமி சதுர்த்தி இந்த எட்டும் கள கிரகயோகமென்று பெயர். இதில் உபநயனஞ் செய்யலாகாது.

(103) உபநயன நாளுக்கு முந்தியநாள். அநத்தியனமானாலும் மறுநாள் அநத்தியயனமானாலும் அந்த நாளில் உபநயனஞ் செய்தால் புனருப்னஸனம் (மறுபடி உபநயனம்) செய்யவேணும்.

(104) சித்திரை வைகாசியில் சுக்லபட்ச திரிதியையும் மாசி பங்குனியில் ஸப்தமியும் இந்த மாதங்களில் கிருஷ்ண பஞ்சமியும்

உபநயனத்தில் சுபங்களென்று பரத்துவாஜால் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் பொருள் சித்திரையில் அட்சதிரிதியை மாக மாதத்தில் ரதஸப்தமி இவை யுகாதியானுலும் மேஷத்தில் (சித்திரை) விசேஷ விதிபலத்தால் ஆதிக்யத்தால் உபநயனஞ் செய்யலாம்.

(105) ஸித்தயோகம் 100 தோஷங்களைப் போக்கும். அமிருத யோகம் 300 தோஷங்களைப் போக்கும் சுதா யோகம் 1000 தோஷங்களைப் போக்கும் என்று பார்க்கவர் சொல்லியிருக்கிருர்.

(106) உத்திரம் மூன்று அஸ்தம் சுவாதி மிருகசீர்ஷம் அனுஷம் இந்த 7 நட்சத்திரங்களுக்கும் விபத் பிரத்யரம் வதம் தாண பல தோஷங்கள் பார்க்கவேண்டாம் இருந்தாலும் தோஷமில்லை.

(107) முதல் பரியாயத்தில் விபத்து தாரைக்குக் பூமி தானமும் பிரத்தியரத்திற்கு பல (பழ) தானமும் வதத்திற்கு பதில் பொன் (எள்ளு) தானமும் பண்ணிடில் தோஷமில்லை.

(108) ஆவணி பௌர்ணமியிலும் புரட்டாசி அஸ்த நக்ஷத்திரத்திலும் தன் கிருஹயத்தில் சொல்லியபடி உபாகர்ம தர்ப்பணுதி செய்வித்து சாகைகளுடன் நான்கு வேதங்களையும் அத்தியயனம் செய்விக்கக் கடவன்.

உத்ஸர் ஜனத்துக்கு

(109) அஸ்தம் அசுவனி திருவோணம் பூசம் ஸ்வாதி அனுடம் சித்திரை புனர்ப்பூசம் திருவாதிரை சதையம் இவை உத்தமம். உத்திரம் மூன்று ரோகிணி ரேவதி இவை 5-ம் மத்திமம். இந்த நட்சத்திரங்களில் இருத்தை அஷ்டமி பௌர்ணமி அமாவாசை இவை நீக்கி மற்ற திதிகளில் புதன் வியாழன் வெள்ளி வாரங்களில் உபய ராசிகளில் அஷ்டம சுத்தியான லக்னத்தில் எல்லா வித்தை ஸமாப்தி (முடிவு) செய்யவும்.

(110) சௌளத்திற்கு சொன்ன தினங்களில் விருதங்களெல்லாம் செய்வித்து கோதான பரிசுத்தனும் (கோதானம்-மயிர் வெட்டி கோதானஞ் செய்தல்) ஆசாரியன் அனுக்ஞையால் ஸமாவர்த்தனஞ் செய்யக் கடவன்.



(111) பூசம் புனர்ப்பூசம் மிருகசீர்ட்ம் ரேவதி அஸ்தம், அனுஷம் உத்திரம் மூன்று ரோகிணி திருவோணம் இந்த நட்சத்திரங்களில் திங்கள், ஞாயிறு, வியாழன், புதன், வெள்ளி இந்த வாரங்களில் மேடம் விருச்சிகம் சிங்கம் இந்த மூன்று ராசி தவிர மற்ற ராசிகளில் அஷ்டம சுத்தியான லக்னத்தில் ரித்தை பௌர்ணமி அமாவாசை அஷ்டமி பிரதமை தவிர மற்ற திதிகளில் மத்தியான (நடுப்பகல்) காலத்தில் ஸமாவர்த்தனஞ் செய்யவேணும் 4-நாள் 5-நாள் இருக்கும்போது செய்தால் தோஷமுண்டு.

(112) ஸமாவர்த்தனம் (ஸ்நான கர்மம்) பண்ணிய பின்பு மூன்று தினங்களுக்குமேல் அங்கு வசிக்கக்கூடாது வசித்திடில் மறுபடியும் ஸமாவர்த்தனம் செய்யவும்.

(113) தம்பதிகளுக்கு பொருத்த நிமித்தம் பார்த்துக்கொண்டு விவாகம் செய்யுங்காலத்தில் கும்ப (மாசி) மாதம் நீக்கி குரு சுக்கிரர் அஸ்தமில்லாத காலத்தில் ரித்தையில்லாத திதியில் ரோகிணி உத்திரம் மூன்று ரேவதி மகம் ஸ்வாதி அனுஷம் மிருகசீர்டம் அஸ்தம் மூலம் இந்த பதினொன்று நட்சத்திரங்களில் செவ்வாய் சனி ஞாயிறு இம்மூன்று நீக்கி மற்ற வாரங்களில் துலாம் மிதுனம் கன்னி கும்பம் தனுசு ரிஷபம் கடகம் சிம்மம் இந்த எட்டு ராசிகளும் உத்தமம் மற்ற நான்கு ராசிகளில் சுப சம்பந்தமுள்ள ராசியும் ஊர்த்துவமுக ராசியும் சுபர்கள் 2-5-11 1-4-7 லிலும் 3-6-11 ல் பாபர்களுடைய ராசியும் சுபமென்று சிலர் கொள்கை சனி செவ்வாய் வெள்ளி 7-மிடத்தில் எப்போதுமிருக்கக்கூடாது. 7-மிடம் சுத்தமாயிருக்கும் லக்னத்தில் விவாகம் செய்யவும்.

(114) செவ்வாய் சனி வாரங்களில் ஆயிரம் குணங்கள் கூடினும் சுப கர்மாக்கள் தவிர்க்கவேண்டும்.

(115) க்ஷீண சந்திரன் வியதீபாதம் ஜன்ம நட்சத்திரம் அஷ்டமி ஷஷ்டி செவ்வாய்கிழமை மத்தியானம் (நடுப்பகல்)க்கு மேற்படில் சுபம் தோஷமில்லை சுபகர்மங்கள் செய்யலாம்.

(116) சுபதிதி வாரங்கள் நட்சத்திரங்கள்கூடிய செவ்வாய் சனி வாரங்களில் விவாகாதி செய்யலாம். இரவில் வார தோஷமில்லை அந்த வாராதிபன் சுபருடன்கூடில் எல்லா கர்மாக்களும் செய்யலாம்.

(117) அவிஹிதமாவது இந்த கர்மத்துக்கு இந்த வாரம் இன்ன நட்சத்திரம் இன்ன லக்னமென்று வசனங்களில் சொல்லப் பட்டது. விஹிதங்கள் அப்படி இல்லாதது அவிஹிதங்கள் கோடி குணங்களுடைய அவிஹிதங்களைக் காட்டிலும் குறைந்த குணங்களுள்ள விஹிதங்களே உத்தமம். எவ்விதமெனில் பதிவிருதை ஸ்திரிகளுக்கு ஸகல பாக்யங்களுமுடைய அயலானைக் காட்டிலும் தரித்திரனாகிலும் தன் புருஷனே உயர்ந்து காட்டுவது போல்.

(118) உதய காலத்தில் திதி தோஷமில்லை. அபிஜித்திலே நட்சத்திர தோஷமில்லை. அஸ்தமனத்தில் லக்ன தோஷமில்லை ராத்திரியில் வார தோஷமில்லை.

(119) விவாகத்திற்கு எடுக்காத திதி வாரங்களானாலும் சந்திர தாரா பலனில்லாவிடினும் மிருகசீர்ஷம், அனுடம், மகம், சுவாதி, இந்த 4 நட்சத்திரங்களில் வெகு தோஷங்களுண்டாயினும் பாராமல் விவாகஞ் செய்யலாம்.

(120) ஸ்வாதி, மிருகசீர்ஷம், அனுஷம், மகம், இந்த 4-ம் தம்பதிகளுக்கு ஜன்ம நட்சத்திரமாயினும் வைநாசிகமானாலும் ஸப்தவிம்சதி யானாலும் விபத்து பிரத்தியரத்தாரை யாயினும் தோஷமில்லை விவாகஞ் செய்யலாம்.

(121) திதியைக் காட்டிலும் வாரம் பலமுடையது வாரத்தைக் காட்டிலும் நட்சத்திரம் பலமுடையது நட்சத்திரத்தைக் காட்டிலும் லக்னம் பலமுடையது லக்னத்தில் குருவாகிலும் சுக்கிரனாயினு மிருந்தால் எல்லா தோஷங்களையும் போக்குவர்.

(122) லக்னத்தில் சுக்ரனிருந்தால் ஆயிரம் தோஷங்கள் போக்குவர் புதன் நூறு தோஷங்களைப் போக்குவர் குரு லக்ஷம் தோஷங்களை போக்குவர்.

(123) சகல லக்னத்திற்கும் 11-மிடத்தில் பகலில் சூரியனும் இரவில் சந்திரனும் இருக்கில் கோடி தோஷங்கள் தீர்ப்பார்.

(124) புதன் லக்கினத்திலாவது கேந்திரத்திலாவதிலிருந்து அஸ்தமடையாமலிருக்கில் 300 தோஷங்கள் போக்குவர். சுக்ரன் அவ்விதமிருக்கில் அதிலேர்ப்பட்ட எல்லா தோஷங்களையும் போக்குவர். அவ்விதம் குரு இருக்கில் லக்கின குரு பதினாயிரம் தோஷங்கள் போககுவர் என்று கார்க்கியரிஷி சொன்னர்.



(125) குரு மாத்திரம் கேந்திரங்களிலிருந்தாலும் சூரியனைக் கண்ட இருள்போல் சகல தோஷங்களும் அழியும்.

(126) குரு புத சுக்கிரருள் யாராயினுமொருவர் கேந்திரத்திலிருக்கில் சிங்கத்தைக் கண்ட யானைபோல் சகல தோஷங்களுமழியும்.

(127) லக்னத்தில் குரு புத சுக்கிரருள் யாராயினுமிருக்கில் பஞ்சுப் பொதியில்பட்ட நெருப்புபோல் தோஷங்களெல்லாமழியும்.

(128) குரு புத சுக்கிரருள் யாராயினுமொருவர் கேந்திர கோணங்களிலிருக்கில் விஷ்ணு ஸ்மரணத்தால் எல்லா பாபங்களும்போல் தோஷங்கள் எல்லாம் அழியும்.

(129) கேது தோஷத்தை ராகு போக்குவர். இவ்விருவர் தோஷத்தையும் சனி போக்குவர் அம்மூவர் தோஷங்களை செவ்வாய் போக்குவர் அந்நால்வர் தோஷங்களை சூரியன் போக்குவர் அவ்வைவர் தோஷங்களை புதன் போக்குவர் அவ்வறுவர் தோஷங்களைச் சந்திரன் போக்குவர் அவ்வெழுவர் தோஷங்களை சுக்ரன் போக்குவர் எல்லார் தோஷங்களையும் குரு போக்குவர்.

(130) எல்லா கிரகங்களாலும் உண்டான தோஷங்களை எல்லாம் குருவானவர் விஷ்ணு ஸேவையினால் பாவங்கள் அழிவதுபோல் எல்லாவித தோஷங்களையும் போக்குவர்.

(131) லக்கினத்திற்கு பாபாம்சம் பாபர் பார்வை முதலிய தோஷங்களிருப்பினும் தேத்தான்விதை நீரை தெளிவிக்குமாப்போல் லக்னத்தில் குரு சம்பந்தம் எல்லாம் போக்கும்.

(132) திதி வாரம் நட்சத்திர யோக கரணங்களுக்கு சிற்சில தோஷங்களுண்டு அவை யெல்லாம் சுக்கிரன் லக்கினத்தில் பலத்துடன் இருக்கில் அல்லது உச்சத்திலிருக்கில் விஷ்ணுபாத ஸ்மரணத்தால் எல்லாவித பாபங்களும் அழியும்.

(133) குரு சுக்ரன் 11-9-5 4-10 லக்னம் இவைகளிலிருந்தாலும் சுக்ரனே குருவோ சந்திரனுடன்கூடி லக்னத்திலிருந்தாலும் திதி வார கரணம் முதலிய தோஷங்களெல்லாம் பகவத்கீதை படித்தால் பாபங்கள் அழியுமாப்போல் தோஷங்கள் அழியும்.

(134) எல்லாவித தோஷங்களின் அபவாதங்களும் சுபர் பலத்தால் பிராயச் சித்தங்களால் பாபங்கள் அழிவுறும்.

(135) லக்னத்திற்கு 8-ல் செவ்வாய் அல்லது 6-ல் சுக்கிரன் அல்லது 6-8-12-லக்கினத்தில் சந்திரன் இருக்க விவாகத்திற்கு முகூர்த்தம் வைத்தவன் யமதூதனுவான்.

## அதன் அபவாதம்

(136) 6-ல் சுக்கிரன் 8-ல் செவ்வாய் அல்லது 6-8-12 1-ல் சந்திரன் இருந்தால் அத்தோஷத்தை லக்னத்திற்கு 11-ல் சூரிய னிருந்தாலும் லக்கினத்திற்கு கேந்திர திரிகோணங்களில் குரு இருந்தாலும் அத்தோஷங்கள் போகும்.

(137) மத்தியான்ன (நடுப்பகல்) லக்னமானது (அபிஜித்) எவ்வளவு அவகுண தோஷங்களாயினும் லக்ஷகோடி பிரதோஷங்க ளானுலும் பதனுயிரம், பத்துலக்ஷ தோஷங்களானுலும் பூமி சங்கை முதலிய தோஷங்களேயும் குஜன் ரவி சந்திர தோஷத்தையும் சனி ராகு தோஷத்தையும் புதன் குரு சுக்கிரன் இவர்கள் தோஷங்களே யும் போக்கும்.

## அபிஜித் முகூர்த்தமாவது

(138) சூரியன் நடுப்பகலில் உச்சியிலிருக்கும் பொழுது (15 நாழிகை வேளே) அபிஜித் முகூர்த்தம் எல்லா தேசங்களுக்கும் ஏற்கத்தக்கது ஆகையால் அபிஜித் முகூர்த்தத்திலே சௌளம் உபநயனம் மாத்திரம் நீக்கி மற்ற எல்லாவித சுபகர்மாக்களும் செய்யலாம்.

## கோதூளி லக்கினம்

(139) கோதூளி லக்கினத்திற்கு திதிவார நட்சத்திரயோக கரணம் முதலிய கிரகங்களாலேற்படும் தோஷங்களொன்றும் பார்க்கவேண்டாம் சூரிய உதய காலத்திற்கும் அஸ்தமன காலத் திற்கும் கோதூளி லக்னமென்று பெயர்.

(140) குரு லக்ன கேந்திர உச்ச ஸ்தானத்திலிருந்தால் ஸகல தோஷங்களேயும் விஷ்ணுபக்தி பாபங்களேப் போக்குமாப்போல் போக்குவர்.

(141) குரு பலத்துடன் லக்ன கேந்திர கோணங்களிலிருந் தால் லக்ஷ தோஷங்களே போக்குவர் சுக்ரனும் புதனும் அவ்வித



மிருக்கில் அதில் பாதி தோஷங்களே போக்குவர் சந்திரன் ரிஷப கடகங்களில் அவ்வித மிருந்தால் எல்லா தோஷங்களேயும் போக்கு வர்.

(142) சந்திரனுடன் ரோகிணி கூடியிருக்கில் திதி வாரம் முதலிய தோஷங்களேயும் குளிகன் முதலிய தோஷங்களேயும் போக்குவர்.

(143) குரு 9-5 கேந்திரங்களி லிருந்தாலும் ஸ்வக்ஷேத்திரம் மித்திர க்ஷேத்திரம் உச்ச ஸ்தானத்திலிருந்தாலும் பக்ஷ திதிவார யோககரண நட்சத்திரம் முதலிய தோஷங்களே போக்குவர்.

(144) சௌளம் உபநயனம் விவாகம் நூதன வஸ்திர பூஷ ணம் தரித்தல் இவைகளுக்கு லக்னத்திலோ 7-ம் மிடத்திலோ ராகு கேதுக்களிருக்கில் தோஷமில்லே.

(145) பெயரிடுதலுக்கு 12-ம் மிடம் சுத்தி சிராத்தத்திற்கு 11-ம் மிடம் அன்னப் பிராசனத்திற்கு 10-ம் மிடம் சௌளத் திற்கு 9-ம் மிடம் உபநயனத்திற்கு 8-ம் மிடமும் விவாகத்திற்கு 7-ம் மிடமும் நூதன வஸ்திரந்தரிக்க 6-ம் மிடமும் பிரயாணத் திற்கு 5-ம் மிடமும் வித்தியாரம்பத்திற்கு 4-ம் மிடமும் இருஷி ஆரம்பத்திற்கு 3-ம் மிடமும் கிரகப்பிரவேசத்திற்கு 2-ம் மிடமும் நிஷேகத்திற்கு லக்கின சுத்தியும் இருக்கவேணும்.

(146) நிஷேகம் பயிர்தொழில் வைத்தியம் வித்தை யாத் திரை நவவஸ்திரம் விவாகம் மௌஞ்சியந்தம் சூடம் நாமகரணம் சிரார்த்தம் கிரகப்பிரவேசம் இவை 12-ம் லக்னம் முதலாக 12 ராசிகளும் சுத்தமா யிக்கவேணும்.

(147) குரு லக்னத்திலிருந்தாலும் சந்திரன் 6-8-12-லிருந் தாலும் பிறந்தவன் ஜீவித்திருக்கமாட்டான் விவாகஞ் செய்யில் ஸ்திரீ மலடியாவாள் யாத்திரை காரியசித்தி இல்லே பயிர், வியா பாரம் பலன் தராது.

(148) மேஷத்தில் விவாகம் ரிஷபத்தில் சிராத்தம் மிதுனத் தில் யாத்திரை கடகத்தில் தோப்புவைக்க ஸிம்மத்தில் பெண் பார்க்க கன்னியில் நிஷேகம் துலாத்தில் கிருஷி விருச்சிகத்தில் வித்தியாரம்பம் இவை யெல்லாம் ஆகாது.

## விவாக சக்ரம்

(149) விவாக சக்ரம் என்பது ஒன்பது அறைகள் ஏற்படும் படி கோடுகள் வரைந்து நடு அரையில் சூரியனிற்கும் நட்சத்திரம் முதல் மூன்று நட்சத்திரங்களும் வைத்து அதற்கு வலது புறமாக மூன்று மூன்று நட்சத்திரங்கள் வைக்கவும் இவ்விதம் 27 நட்சத்திரங்களையும் வைக்கவும் விவாக நட்சத்திரம் நடு அறையில் உள்ள நட்சத்திரம்-இரு குலமும் நாசம், கிழக்கு மூன்றும்-செல்வம், அக்கினி-ஸ்திரீ குலத்திற்கு தோஷம், தெற்கு தரித்திரம் விதவைத்தனம்-நிருதி, எல்லா சவுபாக்யமும்-மேற்கு விதவை வாயு, விபசாரி-வடக்கு அஷ்டபுத்திர வெகுதனம், ஈசானம்-பார்வதிக்குச் சமானம், சூரிய நட்சத்திரம் முதலாக பிரதக்ஷிணமாக மும்மூன்று நட்சத்திரங்கள் வைத்து வந்து முகூர்த்த நட்சத்திரம் எந்த அறையில் வருகிறதோ அந்த அறையின் திசைக்குள்ள பலனை மேற்சொல்லியபடி கவனித்து முகூர்த்தத்திற்கு நாள் வைக்க வேண்டியது.

(150) விவாகத்திற்கு 21 மகா தோஷங்கள் உண்டு : என்று நாரதர் சொல்லி யிருக்கிறார். பஞ்சாங்க சுத்தியில்லாதது, (1) லக்னத்திற்கு 7-ம் மிடம் சுத்தியில்லாதது, (2) சூரிய சங்கிரமம் (மாதப் பிறப்பு), (3) பாபஷட்வர்க்கம், (4) சுக்ரன் 6-ம் மிடம், (5) செவ்வாய் 8-ம் மிடம், (6) கண்டாந்தம், (7) கர்த்தரி யோகம், (8) (லக்னத்திற் முன்பும் பின்னும் பாபகிரக மிருத்தல்), 6-12ல் சந்திரனிருத்தல், (9) தம்பதிகளுக்கு முகூர்த்த லக்னம் 8-ஆவது (10) விஷகடிகை (11) தோஷமுள்ள முகூர்த்தம், (12) வாரதோஷம், (13) ஒரே கணம், (14) கிரகணம்பிடித்த நட்சத்திரம், (15) உத்பாதம் கண்ட நட்சத்திரம், (16) பாபகிரக வேதை (17) பாபாக்கிராந்தம், (18) பாபாம்சம், (19) மகா வியதீபாதம், (20) மகா வைதிருதி, (21) இந்த 21 தோஷங்களையும் நீக்கவும்.

(151) சூரியன் விட்ட நட்சத்திரம் முதல் மூன்று நட்சத்திரம் குருடு அதற்குமேல் (9) நட்சத்திரங்கள் ஒற்றைக் கண்ணுடையன அதற்குமேல் (12) நட்சத்திரங்கள் இரண்டு கண்களுடையன இதற்கு பலன் குருடு நட்சத்திரத்தில் விவாகஞ் செய்யில் மலடியாயும் விதவையாயு மாவாள் ஒற்றை கண்ணில் செய்யில் சந்ததி எல்லாம் அழியும் இரட்டைக் கண்களாகில் ஐசுவரியம் புத்திராதி பாக்கியமுமுண்டு கடைசி மூன்று நட்சத்திரங்களும் செவிடு அதில் விவாகஞ் செய்யில், மலடியா யிருப்பாள்.



(152) லக்னத்திற்கு 12-ல் சூரியன், 6-ல் சந்திரன், 9-ல் செவ்வாய், 10-ல் புதன், 6-ல் குரு, 7-ல் சுக்ரன், 5-ல் சனி-குரு-சந்திரன், பாபர். 8-ல், லக்னத்திற்கு முன்னும் பின்னும் பாபரிருக்க அந்த லக்னத்தில் விவாகஞ் செய்யக்கூடாது.

(153) சுத்தி ஸ்தானங்களிலே புதன் குரு சுக்கிரனிருந்தால் தோஷமில்லை மற்ற கிரகங்களிருந்தால் தோஷமுண்டு.

(154) விவாக காலத்தில் 7-மிடத்தில் புத குரு சுக்கிரரிருந்தாலும் சுக்கிலபக்ஷத்து சந்திரனிருந்தாலும் தோஷமில்லை எந்த தோஷ மிருப்பினும் இவர்கள் நீக்குவர்.

(155) சந்திரன் பலவானாய் சுபாம்சத்திலிருப்பினும் கேந்திர திரிகோணங்களி லிருந்தாலும் விஷ்ணு பக்தரை ஆதரித்து பாபங்களை போக்கி நன்மை செய்யுமாப்போல் தோஷங்களை நீக்கிச் சுபங்களைச் செய்வர்.

(156) விஷ்டி, வியதீபாத தோஷங்களையும் கிரக உத்பாதாதி தோஷங்களையும் அபிஜித் முகூர்த்தம் போக்கும்.

(157) அபிஜித் முகூர்த்தத்திற்கு சௌளம் உபநயனம் இரண்டும் நீக்கத்தக்கது மற்ற சுப கர்மாக்கள் செய்யலாம்.

(158) 11-ம் மிடத்தில் சுபகிரகம் பாபகிரகம் எது இருந்தாலும் நன்று. 12-ம் மிடம் புத-குரு, சுக்கிரர் தவிர மற்றவர் இருந்தால் பயமளிப்பர் புத குரு சுக்கிரர் இருக்கலாம்.

(159) கிரகங்கள் குரூரோம்சத்தி லிருந்தாலும் குரூரருடன் கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தாலும் குரூர பலத்தைக் கொடுப்பார்.

லக்னத்தில் இருக்கும் சுபகிரகங்களுக்கு அந்த லக்னம் நீசஸ்தானமானாலும் சத்துரு க்ஷேத்திரமானாலும் அஸ்தங்கதனாகிலும் இருக்கில் அவர்களும் பாபகிரகமாவர்.

(160) ராஜஸேவை முதலியவை தன் லக்னத்திற்கு அஷ்டம லக்னத்தில் ஜன்ம ராசியிலிலேயும் விருந்துண்ண அரச சேவை செய்ய வித்தார்ஜனம் செய்ய, யுத்தம் செய்ய, தேர், குதிரை-யானை

ஏற, அஸ்திராப்பியாசம் செய்ய நலம். இவை நீக்கி மற்ற சுபங்கள் செய்யக்கூடாது.

(161) சந்திரன் குருவின் அம்சத்திலிருந்து குருவினல் பார்க்கப்பட்டால் சிங்கம் கொழுத்த யாணையை அடிப்பதுபோல் ஆசிவிஷம் அல்லது லக்ன தியாஜ்யாதி தோஷத்தை போக்குவர்.

## ஆசிவிஷ தோஷமாவது

(162) தியாஜ்ய தோஷம் லக்னத்திற்கு முதலில் தியாச்சியம் வந்தால் தியாச்சியத்திற்குமேல் சுபகர்மங்கள் செய்யலாம் லக்னத்திற்கு கடைசியில் தியாச்சியம் வந்தால் அந்த லக்னத்தையே நீக்கவேண்டும்.

(163) சுரயோகம், பத்மயோகம், ஜீவயோகம், சிரகயோகம், தைவயோகம், துந்துபியோகம், புஷ்கரயோகம், ஸ்ரீமுக யோகம், மன்மதயோகம், வைஷ்ணவயோகம், இந்த சுபயோகங்களில் சுப கர்மங்களெல்லாம் செய்யலாம்.

(164) நரயோகம், லக்னத்தில் சப்தமத்தில், சந்திர சூரியரும், 3-6-11-ல் பாபரிருக்க 6-8-12-ல் சுபரில்லாமலிருந்தால் நர யோகம்.

(165) பத்ம யோகம் சுக்கிர க்ஷேத்திரலாவது புத க்ஷேத்திரத்திலாவது குரு விருக்க 3-6-11-ல் பாபரிருந்தால் பத்மயோகம்.

(166) ஜீவயோகம் 3-ல் சுக்கிரனும் 5-ல் குருவும் 11-ல் மற்ற கிரகங்களுமிருந்தால் ஜீவயோகம்.

(167) லக்னத்தில் குருவும் 4-ல் சுக்ரனும் 11-ல் பாப கிரகங்களுமிருந்தால் தைவயோகம்.

(168) சுக்கிரனும் குருவும் பலத்துடன் லக்னத்தில் கூடியிருக்கில் ஸ்தாவரயோகம், விவாகாதிகளுக்கு இவை நன்று.

(169) எல்லா கிரகங்களும் 10-ம் மிடத்தில் புதனிருந்தால் புஷ்கர யோகம் ஜனங்களுக்கு சந்தோஷமளிக்கும்.

(170) சித்திரை மாதத்திலோ வைகாசியிலோ சந்திரன் புதாம்சத்திலிருக்கில் காலமறிந்தவர் மாகேந்திர யோகமென்கின்றனர்.

(171) லக்னத்தில் செவ்வாயும் 10-ல் குருவும் 7-ல் சுக்ரனும் இருக்கில் பர்வதயோகம்.



(172) லக்னத்தில் குருவும் 7-ல் சுக்ரனும் மத்தியில் குஜனுமிருக்க மேருயோகம்,

(173) மேஷத்தில் சுக்ரனும் (சிரம்) மகரத்தில் குருவும் (முழங்கால்) துலாத்தில் சூரியனும (முது) இருந்தால் மந்தார யோகம்.

(174) கால புருஷனுக்கு மேஷம் சிரம்-ரிஷபம் முகம்-மிதுனம் மார்பு, கடகம் - இருதயம், சிங்கம் - வயிறு, கன்னி-அரை (இடை) துலாம் முதுகு, விருச்சிகம்-குறி, தனுசு துடை மகரம் முழங்கால், கும்பம் கணுக்கால், மீனம பாதங்கள், இப்படியே காலத்திற்கு இந்த 12 ராசிகளையும் மேஷாதியாக சிரம் முதலியது அறியவும்.

(175) இந்த சுப யோகங்களில் சோபனமான கர்மங்கள் செய்யலாம்.

## சித்த யோகம்

(176) ஞாயிறு-அஸ்தம், வியாழன்-பூசம், புதன்-அனுஷம், சனி-ரோகிணி, திங்கள்-மிருகசீரஷம், வெள்ளி-ரேவதி, செவ்வாய் அசுவனி இவை சித்தயோகம்.

## அமிர்த யோகம்

(177) ஞாயிறு-மூலம், திங்கள்-திருவோணம், வியாழன்-புனர்வசு, வெள்ளி-பூரம், செவ்வாய்-உத்திரம், சனி-சுவாதி, புதன் கிருத்திகை இவைகூடில் அமிர்தயோகம்.

(178) இஷ்டானிஷ்டயோகம், சகடயோகம், மிருத்யுயோகம், துக்க, அதுக்கயோகங்கள், அதர்மிகயோகம், காலயோகம், பித்ராஸ்யயோகம், கேடயோகம் இந்த தோஷங்களில் ஆயுள் விருத்தி விரும்புகிறவன் சுபகர்மங்களை நீக்கவும்.

(179) லக்னத்தில் குருவும் 7-ல் சந்திரனும் இருந்தாலும், இவர்கள் மாறி இருந்தாலும் இஷ்டாநிஷ்ட யோகம்.

(180) குருவுக்கு 6-8-12-ல் இருக்கும் சந்திரன், சுபன் சம்பந்தம் பெற்றிடினும் எல்லாவித சுபகர்மங்களும் விலக்கத்தக்க சகடயோகமென்று பெரியோர் சொல்லி இருக்கின்றனர்.

(181) இதற்கு அபவாதம் சந்திரன் உச்சனுயிருந்தாலும் ஸ்வக்ஷேத்திரத்தி லிருந்தாலும், சுபருடன்கூடி பார்க்கப்பட்டு

இருந்தாலும் கிருஷ்ணன் சகடாசுரனை அழித்தாப்போல் சங்கட தோஷத்தைப் போக்குவர்.

(182) 5-ல் சனி, 7-ல் சுக்ரன், 6-ல் குரு, 9-ல் செவ்வாய், 10-ல் புதன், 6-ல் சந்திரன், 12-ல் சூரியன், ராகு கேதுவுடன் கூடியிருப்பினும் இவைகளில் ஒரு கிரகமிருந்தாலும் மிருத்யு யோகம் எல்லா கார்யங்களிலும் மரண பயமளிக்குமென்று பெரியோர் சொல்லுகின்றனர். இவை விலக்கத்தக்கன.

(183) 4-ல் பாபரும் சுபமிருந்தாலும், திரிகோணத்தில் சுக்ரனிருந்தாலும் துக்கா துக்கயோகம், கர்த்தாவுக்கு மரணம் தரும்.

(184) 6-ல் சுபரிருக்க 8-ல் சந்திரனிருக்க 5-ல் மற்ற கிரகங்களிருந்தால் அதார்மிக யோகம்.

(185) 4-ல் பாபரிருக்க 8-ல் சந்திரன் பலவானாயிருந்தால் காலயோகம், எல்லா சுப கர்மங்களையும் அழிக்கும்.

(186) சூரியன் நிற்கும் நக்ஷத்திரம் முதல் சந்திரன் வரையில் எண்ணினால் 9-3-4-5 இந்த நாலும் கசர யோகம் இவைகளில் சுபகர்மம் செய்யில் உபநயனத்தில் வடுநாசம் ஸீமந்தத்தில் சிசுநாசம் விவாகத்தில் வைதவ்யம் பிரயாணத்தில் மரணம் இவை நிச்சயம், (9-9 ஆக எண்ணவும்).

## லக்ன ராகு

(187) ராகு கேதுக்கள் இருக்கும் லக்னத்தில் விவாகம் செய்தால் தம்பதிகள் மரணம்.

(188) சௌளம், உபநயனம், விவாகம், நூதன வஸ்திரம், ஆபரணமணிய இவைகளுக்கு லக்னத்தில் அல்லது ஸப்தமத்தில் ராகு கேதுக்களிருந்தாலும் தோஷம் செய்யமாட்டார்கள்.

(189) சந்திரன் லக்னத்திலிருந்து சந்திரனுக்கு 7-ல் செவ்வாயிருந்தால் விவாகமான 8 வருஷத்திற்குள் பதிநாசம்.

(190) லக்னத்தில் குரு அல்லது சுக்ரனிருந்தாலும் அவர்கள் பார்வை யிருந்தாலும் திதி வார நட்சத்திர தோஷங்கள் நீங்கும்.

(191) குண தோஷங்களை விசாரித்து குணம் அதிகமானால் பண்ணலாம் தோஷம் அதிகமாகில் நீக்கவும்.



(192) சந்திரன் சுபனாய் 10-லிருந்து குருவால் பார்க்கப்பட்டால் கருடன் விஷத்தை அழிப்பதுபோல் விஷகடிகை தோஷத்தை நீக்குவர்.

(193) வெந்நீரை குளிர்ந்த நீரால் விளாவுவதுபோல் சுப கிரகங்களால் பார்க்கப்பட்டால் குரூரக்கிரகங்களும் குணம் தரும்.

(194) அமாவாஸை முதல் அமாவாஸை வரையில் சாந்திரமான மாதம். மாதப் பிறப்பு முதல் மாதப்பிறப்பு வரையில் ஸௌரமான மாதம் கணக்கிட்டு 30 நாட்கள் ஸாவந மாதம். அசுவனி முதல் ரேவதி வரையில் ஒரு மாதம் நக்ஷத்திரமாதம்.

(195) இரண்டு பருவம், இரண்டு அமாவாசை வந்த மாசத்தில் விவாகம் முதலிய சுபங்களொன்றும் செய்யக்கூடாது. சித்திரை வையாசி மாசங்களுக்கு இந்த தோஷமில்லை.

(196) ஞாயரில் பஞ்சமியும் அஸ்தமும், திங்களில் ஷஷ்டியும் திருவோணமும், செவ்வாயில் சப்தமியும் அசுவனியும், புதனில் அஷ்டமியும் அனுஷமும், வியாழனில் திருதியையும் பூசமும், வெள்ளியில் நவமியும் ரேவதியும், சனியில் ஏகாதசியும் ரோகிணியும் விஷ யோகங்கள் எனப்படும்.

## மிருத்யு யோகம்

(197) ஞாயரில்-அனுஷம், திங்கள்-உத்திராடம், செவ்வாயில்-சதையம், புதன்-அசுவனி, வியாழன்-மிருகசீர்டம், வெள்ளி ஆயில்யம், சனியில்-அஸ்தம், இவை மிருத்யு யோகங்கள்.

(198) திங்களில் ஷஷ்டி, வெள்ளியில் நவமி, ஞாயரில் சதுர்த்தி, வியாழனில் அஷ்டமி, சனி செவ்வாயில் சப்தமி, புதனில் துவிதியை, இவைகுலநாச விஷயோகங்கள்.

(199) வெள்ளியில் பூசம், வியாழனில் உத்திரம், ஞாயரில், விசாகம், சனியில் ரேவதி, புதனில் அவிட்டம், திங்களில் கிருத்திகை, செவ்வாயில் ஆயில்யம் இவை வினாச யோகங்கள்.

(200) புதனில் துதியை, செவ்வாய் பஞ்சமி, வியாழன் ஷஷ்டி, வெள்ளி அஷ்டமி, திங்கள் ஏகாதசி, சனி நவமி, ஞாயறு துவாதசி, இவை தக்தயோகங்கள்.

(201) ஞாயறு - விவாசம், திங்கள் - பூராடம், செவ்வாய்-அவிட்டம், புதன்-ரேவதி, வியாழன்-ரோகிணி, வெள்ளி-பூசம், சனி-உத்திரம், இவை உத்பாத யோகங்கள்.

(202) தக்த யோகத்திற்கு ஆரம்பத்தில் 6-நாழிகை விலக்கவும் ஜ்வாலாமுகிக்கு 8-நாழிகை விலக்குக, உத்பாத யோகத்திற்கும் மிருத்யு யோகத்திற்கும் 9-நாழிகை விலக்கு, இவ்விதமாக முதல் பாகத்தில் நீக்கி பிறகு சுபகர்மங்கள் செய்யலாம்.

(203) ரோகிணி-திருவோணம், அஸ்தம்-மிருகசீர்டம், அனுடம் பூசம் உத்திரம் மூன்று இந்த "9"க்கும் ஆசிவிஷதோஷமிலலை அகமாசங்களில் கிரகம் உச்சமாகில் சுபகர்மம் செய்யலாம்.

(204) கர்பாதானம் பும்ஸவனம் ஸீமந்தம் விவாகம் சௌளம் இவைகளுக்கு ஆசிவிஷ தோஷமில்லை.

(205) பாபகிரகங்கள் லக்னத்திற்கு 3-6-11-ல் இருந்தால் வார லக்ன அம்ச தோஷங்களைப் போக்குவர்.

(206) வார நக்ஷத்திர தோஷம் வங்க தேசத்திலும், திதி வாராதி தோஷம் மாளவ தேசத்திலும், அம்சக தோஷம் களிங்க தேசத்திலும் விஷ்கம்பாதி தோஷம் அவந்தி தேசத்திலும் கிரக தோஷங்கள் எல்லா தேசங்களிலேயும் விலக்கத்தக்கன, எவ்வித சுபத்திற்குமாகாது.

(207) நக்ஷத்திர லக்னாதிகளுக்குப் பங்கு (நொண்டி) அந்தகம் (குருடு) காணம் என்னும் தோஷங்கள் திதி வாராதி சூனியங்கள் கௌட, மாகத, தேசங்களில் மாத்திரம் விலக்கத்தக்கன மற்ற தேசங்களுக்குத் தோஷமில்லை.

(208) சந்திர சூரிய தோஷம் சூனிய யோகம் ஏகார்க்களம் அதிக மாசம் இந்த தோஷங்கள் சோண நதிக்கு தெற்கு தேசங்களில்லை, சோண நதிக்கு வடக்கே இந்த தோஷங்களிலே சுபகர்மங்கள் விலக்கத்தக்கவை.

(209) சமஸ்த சுப கர்மங்களிலும் ஸமஸ்த ஸம்ஸ்கார கர்மங்களில் புஷ்டி முதலிய விருத்திக்காக அங்குரார்ப்பணம் பண்ணக்கடவன்.



(210) பும்சவனம், சீமந்தம், ஜாதகர்மம், அன்னப்ராசனம் உபநிஷ்கிரமணம், விருதம் இவைகளில் அங்குரார்ப்பணம் பண்ண வேண்டாம்.

(211) அங்குரார்ப்பண மில்லாத கர்மங்களெல்லாம் அழிவடையும். பும்சவன சீமந்த கர்மங்களில் அங்குரார்ப்பணம் பண்ணவேணுமென்று சிறிது பேர் சொன்னார்கள்.

(212) ஒரே முகூர்த்தத்தில் ஏகோதா (ஒரு தாய் வயிற்றில் பிறந்த) கன்னிகைகளுக்கு விவாகம் செய்யக்கூடாது (ஒருவருக்கு மேல்) செய்யில் ஒரு வருஷத்தில் விதவை யாவாள் ஆற்றுக்கு இரு கரைகளில் இருவருக்கு விவாகம் செய்யலாம், தோஷமில்லை.

(213) ஒரு தாய்க்குப் பிறந்த பிள்ளைகளுக்கு ஒரு வருஷத்திற்குள் முந்தி விவாகம் பிந்தி உபநயனம், அதன்பின் சௌளம் செய்யக்கூடாது. முந்தி சௌளம், பின் உபநயனம், பின் விவாகம் செய்யலாம்.

(214) முண்டனம் என்பது உபநயனம், மண்டனம் என்பது விவாகம் உபநயனத்திற்குப் பிறகு விவாகம் செய்யலாம். விவாகத்திற்குப் பின் உபநயனம் செய்யக்கூடாது.

(215) தமையன் தம்பிக்கு விவாகம் செய்த பிறகு, ஆறு மாதம் தங்கை தமக்கைகளுக்கு விவாகம் செய்யக்கூடாது. முந்தி பெண்ணுக்கு விவாகம் செய்து, பிறகு பிள்ளைக்குச் செய்யலாம்.

ஒரே தாய் விஷயத்தில் பிள்ளைக்கு விவாகமான ஆறு மாதத்திற்குள் பெண்ணுக்கு விவாகம் செய்யக்கூடாது. முந்தி பெண்ணுக்கு விவாகம் செய்து பிறகு பிள்ளைக்கு விவாகமானால் தோஷமில்லை, அப்படியே விவாகம் உபநயனம் சௌளம் என்ற முறையில் செய்யக்கூடாது, சௌளம் உபநயனம் விவாகம் என்ற கிரமத்தில் செய்யலாம்.

(216) ஒரு முகூர்த்தத்தில் இரண்டு பெண்களை விவாகம் செய்விக்கக்கூடாது. 90 நாளைக்கு மேல் ஒருவருக்கு செய்த பிறகு விவாகம் செய்யலாம். அவசியமாய் 90 நாளைக்குள் இருவருக்கு விவாகம் செய்ய நேரில் இரண்டு கிருகங்களில் இரண்டு உபாத்தியாயரைக்கொண்டு பண்ணிவைத்து தனித்தனி விவாகம் செய்யலாம். தம்பிக்கும் தமையனுக்கும் ஒரு லக்கினத்திலாகில்

உபநயனமும் விவாசமும் செய்யலாம். அப்படியே ஒரே லக்னத்தில் பெண்ணையும் வாழ்க்கைப்படுத்தி பிள்ளைக்கும் விவாகம் செய்யலாம்.

(217) பங்குனி மாசத்திலே பிள்ளைக்கு விவாகம் செய்து சித்திரையில் பெண்ணுக்கு வாழ்க்கை படுத்தக்கூடாது. 90 நாளைக்கு மேல் செய்யலாம். பங்குனியில் பிள்ளைக்கு விவாகம் செய்து சித்திரையில் அவன் தம்பிக்கு உபநயனம் செய்யலாம். வருஷ பேதமாகையால் 6 மாதம் கழிய வேண்டாம்.

(218) மனைவி மறித்த தினம் முதலாக ஒரு வருஷத்திற்குள்ளேதான் ஆவர்த்தனம் செய்துகொள்ளவேணும் (மறு விவாகம்) இரண்டாவது வருஷத்தில் செய்துகொள்ளலாகாது. அதற்குமேல் ஒற்றைப் ட்ட வருஷத்தில் பண்ணிக்கொள்ளலாம். இரட்டித்த வருஷத்தில் செய்துக்கொள்ளக்கூடாது.

## முதல் முதல் முதல் நாட்டுப் பெண்ணை அழைக்க

(219) விவாகம் செய்த நாள்முதல் 16 நாட்களுள் இரட்டித்த நாளில் மாட்டுப் பெண்ணை அழைக்கவேணும், அதற்கு மேல் ஒரு வருஷ பரியந்தம் வேண்டியபோது அழைக்கலாம். அதற்குமேல் 3-வது வருஷத்திலாவது 5-வது வருஷத்திலாவது தான் அழைக்கவேணும், 5 வருஷங்களுக்கு மேற்படில் எப்போதாவது அழைக்கலாம்.

(220) சம்பந்தம் செய்யவேணுமாகில் 3,ம். 3,ம். ஆகாது 4-ம் 5-ம் உத்தமம். 4-ம் 4-ம் செய்யலாம்.

(221) சில பண்டிதர் 3-ம் 4-ம் செய்யலா மென்கின்றனர். தலைச்சன் பிள்ளைக்குத் தலைச்சன் பெண்ணை விவாகம் செய்விக்கக் கூடாது. ஒன்று தலைச்சனும் மற்றொன்று வேறாகில் ஆனியிலும் செய்யலாம்.

(222) இரண்டும் தலைச்சனாகில் ஆனியில் விவாகம் செய்யலாகாது. ஒன்று தலைச்சனாகில் ஆனி மாசத்தில் மத்திமம். இரண்டும் தலைச்சனில்லாவிடில் ஆனிமாதம் விவாகம் செய்ய உத்தமம்.

(223) ஒரே தாய் விஷயத்தில் சௌளாதி ஆகாமல் 2 சுபங்கள் ஆகவேணுமானால் வருஷ பேதத்திலேயும், 90 நாளைக்குமேல் செய்யவேணும்.



## தசப் பொருத்தம்

(224) தினம், கணம், மாகேந்திரம் ஸ்திரீ தீர்க்கம், யோனி ராசி, ராசி அதிபதி, வசியம், ரஜ்ஜு, வேதை, என்பன பத்து.

(225) தினமாவது :—ஸ்திரீ நக்ஷத்திரம் முதல் வரன் (புருஷன்) நக்ஷத்திரம்வரை எண்ணி 9-9 ஆக சழித்து, 1 ஜன்மம், 2-சம்பத்து, 3-விபத்து, 4-க்ஷேமம், 5-பிரத்தியரம், 6-சாதகம், 7-வதம், 8-மைத்திரம், 9-பரம மைத்திரமென்று 3 தடவை எண்ணவும்.

(226) ஸ்திரீ நக்ஷத்திர முதல் புருஷ நக்ஷத்திரம் 2-4-6-8-9 ஆகில் உத்தமம், தினப் பொருத்தமுண்டு.

(227) ஓராவது பரியாயத்தில் 3-5-7 இந்த மூன்று தாரையும் நீக்கவும், இரண்டாவது பரியாயத்தில் இந்த மூன்றுக்கும் அம்சகம் (பாதம்) நீக்கிக்கொள்ளவும், 3-வது பரியாயத்தில் வதம் வைநாசிகம் நீக்கி மற்றவை நன்று.

(228) 27-வது நட்சத்திரம் வேறு ராசியாகில் நீக்கவும், ஒரே ராசியாகில் உத்தமம்.

வத வைநாசிகமாவது :—ஸ்திரீ நட்சத்திரத்திற்கு 7-வது புருஷ நட்சத்திரமாகில் வதம் புருஷ நட்சத்திரத்திற்கு 22-வது ஸ்திரீ நட்சத்திரமாகில் வைநாசிகம்.

(229) வத வைநாசிகயோகங்களுக்கு பலன் காசியபரால் சொல்லப்பட்டது.

(230) கிருத்திகைக்கும் ஆயில்யத்திற்கும், சுவாதிக்கும் சித்திரைக்கும், பூராடத்திற்கும் அனுஷத்திற்கும், அவிட்டத்திற்கும் பரணிக்கும், சதையத்திற்கும் கிருத்திகைக்கும், ஆகில் வமிசநர்சம் இதில் வதவை நாசிகம்கூடில் தம்பதி மரணம்.

(231) மிருக சீர்ஷத்திற்கும் பூசத்திற்கும், அஸ்தத்திற்கும் மூலத்திற்கும், தரித்திரம் ரோகிணிக்கும் மகத்திற்கும், பூரட்டாதிக்கும் ரோகிணிக்கும் ஸந்தான விருத்தி.

(232) அசுவனிக்கும் புனர்வசுக்கும் சுவாதிக்கும் உத்திராடத்திற்கும், பெண் மகவு விருத்தி. ரேவதி திருவாதிரை, மிருகசீர்டம் பூரத்திற்கு தம்பதிகளுக்குள் வைரம்.

(233) மகம்-விசாகம், பிள்ளையில்லை. விசாகம், திருவோணம் சக்களத்தி வருவாள், திருவோணம் அசுவனி பிறிவு, உத்திரம் மிருகசீர்ஷம் வைதவ்யம்.

(234) உத்திராடம், ரேவதி போக பாக்கியங்கள், மூலம் பூரட்டாதி ஐசுவர்யம், பூராடம் உத்திரட்டாதி அதிநேசம் பரணி பூசம் சௌபாக்கியம், விருத்தி, இந்தப்படி வத வைநாசி பார்த்து சுப பலனெல்லாம் கூட்டிக்கொண்டு அசுப பலனெல்லாம் நீக்கிக்கொள்ளவும்.

(235) ரோகிணி, திருவாதிரை, மகம், விசாகம், அஸ்தம், திருவோணம், ரேவதி, உத்திரட்டாதி இந்த எட்டு நட்சத்திரங்களும் ஏக நட்சத்திரமானால் உத்தமம

(236) பூரம், உத்திரம், பூசம், சித்திரை, புனர்பூசம், அசுவனி, கார்த்திகை, உத்திராடம், பூராடம், அனுஷம் இந்த பத்து நட்சத்திரங்களும் ஏக நட்சத்திரமாகில் மத்திமம்.

(237) பரணி சுவாதி கேட்டை மூலம் சதையம் அவிட்டம் பூரட்டாதி இந்த ஏழும் ஒரே நட்சத்திரமாகில் விலக்கவும்.

(238) பூராடம் பரணி ஆயில்யம் அஸ்தம் மிருகசீரம் சதையம் இந்த ஆறும் ஒரே நட்சத்திரமாகில் விவாகஞ் செய்யில் சுபம்.

(239) இரண்டு ராசிகள் கூடிய நட்சத்திரத்தில் ஒரே நட்சத்திரமாகில் பிள்ளையின் நட்சத்திரம் முன்னும் பெண்ணினது பின்னுமாகில் சுபம். பெண் ராசி முன் ராசியும் பிள்ளை ராசி பின்னிலும் வந்தால் நீக்கவும்.

(240) ஏகாதசியில் ஸ்திரீ புருஷ நட்சத்திரங்கள்வரப் புருஷனது முன்னும் பெண்ணினது பின்னுமாகில் சுபம். பெண்ணுடையது முன்னும் பிள்ளையினது பின்னுமாகில் ஆகாது.

(241) ஒரே ராசியில் பரணியும் கிருத்திகையும் அவிட்டமும் சதையமும் பூசமும் ஆயில்யமும இவைகளில் பிள்ளை நட்சத்திரம் முன்வரில் நீக்கவும்.

(242) சதையம், அசுவனி, அஸ்தம், சுவாதி, கிருத்திகை, பூராடம், ரோகிணி மகம் இந்த 8-ம் ஏகராசியில் ஸ்திரீ முன் வந்தால் செய்யலாம்.



(243) பாத பேதமறியாவிடில் திரிபாத (3 பாத) நட்சத்திரங்களில் ஸ்திரீயினுடையது கால் பாதத்துள்ளும் புருஷனது முக்காலுக்குள்ளும் அறியவும் எவ்விதமெனில் கிருத்திகை, உத்திரம், உத்திராடம் இந்த மூன்றிலாகில் பெண்ணினுடையது முதல் பாதமென்றும் பிள்ளையினது குறை முக்காலுக்குள்ளென்றும் அறியவும், மிருகசீர்டம், சித்திரை, அவிட்டம் இம்மூன்றிலாகில் பூர்வார்த்தம் (முன் பாதி புருஷனும் பின் பாதி பெண்ணுமென்று பார்த்துக்கொள்ளவும் இம்மாதிரி பார்த்துக்கொள்ளவும்.

(244 பாதபேத மறியாவிடில் இவ்விதமே பார்த்துக்கொள்ளவும்.

(245) சுவாதி, மிருகசிரம், மகம், அனுடம் இந்த 4-க்குள் புருஷ நட்சத்திரம் கூடினாலும், பெண் நட்சத்திரம் கூடினாலும், தசப்பொருத்தத்தில் ஒன்றுமில்லாவிட்டாலும் இந்த நாலுக்கும் பொருத்தம் பார்க்கவேண்டாம், நட்சத்திராதிகயத்தில் விவாகம் செய்யலாம்.

(246) கணப் பொருத்தம் :—அசுவனி, மிருகசிரம், பூசம், புனர்வசு, சுவாதி அஸ்தம், அனுஷம், திருவோணம், ரேவதி இந்த 9-ம் தேவகணம்.

(247) ரோகிணி-பூரம், பூராடம்-பூரட்டாதி, பரணி-திருவாதிரை, உத்திரம்-உத்திராடம், உத்திரட்டாதி இந்த 9-ம் மனுஷ கணம்.

(248) கிருத்திகை, மகம், விசாகம், ஆயல்யம், சதையம், அவிட்டம், சித்திரை, கேட்டை, மூலம் இந்த 9-ம் ராக்ஷஸ கணங்கள்.

(249) தம்பதிகள் ஒரேகணமாகில் நல்லது. தேவகணமும் மனுஷ கணமும் மத்திமம் ராக்ஷஸகணமும், தேவகணமுமாகில் அதமம், மனுஷகணமும் ராக்ஷஸகணமும் மரணம்.

(250) ஸ்திரீ ராக்ஷஸகணம் புருஷ நட்சத்திரத்திற்கு 14 நட்சத்திரத்திற்கு யேற்படில் பாதகமில்லை யென்று சிலர் மதம். புருஷன் மனுஷகணமும் ஸ்திரீ ராக்ஷஸகணமாகில் நீக்கவும், புருஷன் ராக்ஷஸகணமும் ஸ்திரீ மனுஷகணமானால் தோஷமில்லை.

(251) ஏகாதிபத்யமானாலும் அதிபதிக்கு மைத்ரமுண்டாகிலும் ஸம சப்தமமானாலும் ரஜ்ஜு தோஷம், கண தோஷம் வேதை தோஷம், ராசி தோஷங்களுண்டானாலும் விவாகஞ் செய்யலாம்.

(252) ஷஷ்டாஷ்டம மானாலும் நவபஞ்சம மானாலும் 2-12 ஆனாலும் ஸ்திரீ ராக்ஷஸமானாலும், இந்த நான்கு தோஷங்களும், ஏகாதிபத்யமானாலும் அதிபதி மைத்திரமானாலும் தோஷமில்லை.

(253) மாகேந்திரம் :—பெண் நட்சத்திரம் முதல் புருஷ நட்சத்திரம் வரை எண்ணுகையில் 4-7-10-13-16-19-22-25-வது நட்சத்திரம் சுபம். மாகேந்திரம் மற்றவைக்கு இல்லை.

(254) ஸ்திரீ தீர்க்கம் :—பெண் நட்சத்திரம் முதல் புருஷ நட்சத்திரம்வரை எண்ணுகையில் 13 நட்சத்திற்குமேல் புருஷ நட்சத்திரம் வரில் ஸ்திரீ தீர்க்கமுண்டென்றும் 7-க்கு மேற்பட்டாலும் உண்டென்று சிலர் மதம்.

## யோனி

(255) அசுவனி-சதையம், குதிரை. பரணி, ரேவதி, யானை. பூசம்-கிருத்திகை, ஆடு. ரோகிணி-மிருகசிரம், பாம்பு. ஆயில்யம்-புனர்பூசம், பூனை. மகம்-பூரம், எலி. உத்திரம்-உத்திராடம், பசு. ஸ்வாதி-அஸ்தம், எருமை. விசாகம்-சித்திரை, புலி. உத்திராடம், கீரி. அனுடம்-கேட்டை, மான். மூலம்-திருவாதிரை, நாய். பூராடம்-திருவோணம், குரங்கு. அவிட்டம்-பூரட்டாதி, சிங்கம். இப்படி யோனிப் பொருத்தம் அறியவும்.

## வைரம்

(256) யானைக்கு-சிங்கம்: குதிரை-எருமை: குரங்கு-ஆடு: நாய்-மான்: பாம்பு-கீரி: பசு-புலி: எலி-பூனை: இவை ஒன்றுக்கொன்று மகா வைரம் இப்படி கூடில் யோனிப் பொருத்தமில்லை.

(257) இரண்டு பேரும் ஒரே யோனியாகில் உத்தமம். பின்ன வைரமில்லாத யோனியாகிலும் மத்திமம், செய்யலாம். சத்துரு வைர யோனியாகில் நீக்கவும்.

(258) ராசிப் பொருத்தம் :—பெண் ராசிக்குப் பிள்ளை ராசி 2-ஆவது ராசியாகில் மரணம். பிள்ளை ராசிக்கு பெண் ராசி



2-ஆனால் தீர்க்காயுள். பெண் ராசிக்கு 3-வது ராசி பிள்ளை ராசியாகில் துக்கம். பிள்ளைக்கு 3-வது பெண் ராசியாகில் சுகம். பெண் ராசிக்கு 4-வது ராசி பிள்ளைராசியாகில் தரித்திரம். பிள்ளைக்கு 4-வது ராசி பெண்ணாகில் தனலாபம், பெண்ணுக்கு 5-வது ராசியாகில் விதவை. பிள்ளைக்கு 5-வது பெண்ராசியாகில் தீர்க்க மாங்கலியம், பெண்ணுக்கு 6-வது ராசியாகில் புத்ர நாசம், பிள்ளைக்கு 6-வது பெண் ராசியாகில் புத்ர லாபம். பிள்ளை ராசியும் பெண் ராசியும் ஒன்றுக்கொன்று 7-வதாகில் உத்தமோத்தமம்.

(259) பெண் ராசிமுதல் மீனம், மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், இந்த அடவில் 12-வதும் 2-வது மானாலும் தோஷமில்லை. மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் இந்த அடவில் 2-12 ஆகாது.

(260) மேஷத்துக்கு - சிம்மம், கடகத்திற்கு - விருச்சிகம், இவைக்கு பஞ்சம நவம தோஷமில்லை. கும்பத்திற்கும் சிம்மத்திற்கும் கடகததிற்கும் மகரத்திற்கும் ஸம சப்தகமானாலும் தோஷமுண்டு, செய்யலாகாது.

(261) மேஷத்தோடு கன்னிக்கும் தனுசுடன் ரிஷபத்திற்கும், துலாத்துடன் மீனத்திற்கும், கும்பத்துடன் கடகத்திற்கும், மிதுனத்துடன் விருச்சிகத்திற்கும், ஷஷ்டாஷ்டம (6-8) தோஷமில்லை.

## ராசி அதிபதி பொருத்தம்

(262) மேஷ, விருச்சிகத்திற்கு அதிபதி செவ்வாய், அவருக்கு சுக்கிரனும் புதனும் மித்திரர் மீதி 5-பேரும் சத்துருக்கள் ரிஷப துலாத்திற்கு அதிபதி சுக்கிரன், அவருக்கு சத்துருக்கள் சந்திரனும் சூரியனும், மற்ற 5-பேர் மித்திரர். மிதுனத்துக்கும் கன்னிக்கும் அதிபதி புதன் அவருக்கு சூரியன் சத்துரு மற்ற 6-பேர் மித்திரர்கள், கடகத்திற்கு அதிபதி சந்திரன் அவருக்கு புதனும் குருவும் மித்திரர் மற்ற 5-பேர் சத்துருக்கள். சிம்மத்திற்கு அதிபதி சூரியன் அவருக்கு குரு மித்திரர் மற்ற 6-பேர் சத்துருக்கள். தனுசுக்கும் மீனத்திற்கும் அதிபதி குரு அவருக்கு சத்துரு செவ்வாய் மற்ற 6-பேர் மித்திரர்கள். மகரத்திற்கும் கும்பத்திற்கும்

அதிபதி சனி அவருக்கு சத்துரு குரு மற்ற 6-பேர் மித்திரர்கள். இந்த அடவிலே ராசி அதிபதி பொருத்தம் பார்க்க வேண்டியது.

(263) வசியப் பொருத்தம்:—ஸ்திரீ ராசி முதலாக பார்க்கையில் பெண் ராசி மேஷமானால் புருஷ ராசி சிங்கம் அல்லது விருச்சகமாகில் வசியம், பெண் ரிஷபமானால் புருஷன் கடக துலாமாகில் வசியம், பெண் மிதுனமாகில் புருஷன் கன்னியாகில் வசியம் பெண் கடகமாகிப் புருஷன் தனுசு விருச்சிகமாகில் வசியம், பெண் சிங்கமாகிப் புருஷன் துலாமாகில் வசியம். கன்னிக்கு மிதுனமீனம் வசியம். துலாத்துக்கு மகரம் வசியம். விருச்சிகத்திற்குக் கடக கன்னி வசியம். தனுசுக்கு மீனம் வசியம். மகரத்திற்கு மேஷ கும்பம் வசியம். கும்பத்திற்கு மேஷம் வசியம். மீனத்திற்கு மகரம் வசியம் இவ்விதம் கூடாவிடில் வசியப் பொருத்தமில்லை.

(264) ரஜ்ஜு பொருத்தம் :—அசுவனி, கேட்டை மூலம், ஆயில்யம், மகம், ரேவதி இந்த 6-ம் பாதரஜ்ஜுவில் ஏகரஜ்ஜு ஆகும்.

பூசம்-பூராடம், உத்திரட்டாதி-பூரம், பரணி-அனுஷம், இந்த 6-ம் ஊரு (துடை)வில் ஏகரஜ்ஜு.

விசாகம் - கிருத்திகை, உத்திராடம் - புனர்பூசம், உத்திரம்-பூரட்டாதி, இந்த 6-ம் நாபியில் ஏகரஜ்ஜு.

சதையம்-அஸ்தம், சுவாதி, ரோகிணி-திருஓணம், திருவாதிரை இந்த 6-ம் கண்டம் (கழுத்து) ரஜ்ஜில் ஏகரஜ்ஜு.

மிருகசீர்டம்-சித்திரை, அவிட்டம் இந்த 3-ம் சிரசில் ஏக ரஜ்ஜு.

வதூவரள் 2-பேர் நக்ஷத்திரமும் ஒரே கோட்டில் கூடினால் ரஜ்ஜு தட்டுகிறது. ரஜ்ஜுப் பொருத்தமில்லை. 9 பொருத்தமுண்டானாலும் ரஜ்ஜு தட்டினால் விவாகம் செய்யக்கூடாது.

(265) இவ்விதமே 6-6. நக்ஷத்திரங்களுக்கு ரஜ்ஜுவில்லை. 2-2-களுக்கு வேதையில்லை. அது எவ்விதமெனில் அசுவனி கேட்டைக்கும், மூலம் ஆயில்யத்திற்கும், மகம் புனர்பூசத்திற்கும், உத்திரம் பூரட்டாதிக்கும், சதையம் அஸ்தத்திற்கும், ரோகிணி சுவாதிக்கும், திருவோணம் திருவாதிரைக்கும் 2-க்கும் 2-க்கும் வேதை பொருத்தமில்லை.



(266) ஒரே ரேகை விழாமல் 2-ம் 2-ம் ஆரோக ரஜ்ஜுவானால் மிகவும் உத்தமம். இரண்டும் (வதூவர நக்ஷத்திரம்) அவரோகமானால் ஸ்திரீ நாசம். ஒன்று ஆரோகத்திலும் மற்றொன்று அவரோகத்திலு மிருந்தால் நலம். இந்த 3 பக்ஷத்திலும் வதூவரர் நக்ஷத்திரம் ஒரே ரேகையில் கூடாமலிருக்கவேணும்.

(267) ரஜ்ஜு பலன் :—சிரோ ரஜ்ஜுவில் கூடினால் கணவன் மரணம், கண்டரஜ்ஜ ஸ்திரீ மரணம், நாபி ரஜ்ஜு சந்ததி நாசம், ஊரு ரஜ்ஜு தனக்ஷயம், பாத ரஜ்ஜு தேசாந்திர வாசம், ஆகையால் ஏக ரஜ்ஜு ஆகாது.

(268) தினம், கணம், யோனி, ராசி ரஜ்ஜு இந்த 5-ம் கூடில் ஐசுவரியம், இவை அவசியம் இருக்கவேணும். இவைகளிலும் தினமும், ரஜ்ஜுவும் மிக முக்கியம்.

(269) வேதை :—கேட்டை அசுவனிக்கு 18-வது, அனுடம் பாணிக்கு 16-வது வேதை. கிருத்திகைக்கு 14-வது விசாகம் வேதை. ரோகணிக்கு 12-வது சுவாதி வேதை. மிருகசீர்டம், சித்திரை அவிட்டம் இந்த 3-ம் ஒன்றுக்கொன்று வேதை, திருவாதிரை முதல் 4-க்கும் அசுவணி முதல் 4 போல் 18-16-14-12-வது நக்ஷத்திரஙகள் வேதை, மகம் முதல் 4-க்கும் அப்படியே. சுவாதி முதல் 4-க்கும், சதையம் முதல் 4-க்கும் அப்படியே 18-16-14-12-வது நக்ஷத்திரங்கள் வேதை. இவ்விதம் வேதை அறிந்து இப்படி கூடினால் வேதைப் பொருத்தமில்லை கூடாவிடில் உண்டு.

(270) பிராமணனுக்குத் தினம் பொருத்தமும் க்ஷத்திரியனுக்கு கணப் பொருத்தமும் வைசியருக்கு ராசிப் பொருத்தமும் சூத்திரருக்கு யோனிப் பொருத்தமும் முக்கிய பொருத்தங்கள்.

(271) இந்த பத்து பொருத்தங்களுக்குள் 5-க்கு மேல் கூடில் விவாகம் செய்யலாம். 5 பொருத்த முண்டாகில் சகுனம் பார்த்துச் செய்யவேண்டும் என்றறியவும்.

(272) மனப் பொருத்தம் முந்தியதும் பிறகு தசப்பொருத்தமும், பிறகு சகுன நிமித்தங்களும் பார்த்துக்கொண்டு விவாகம் செய்யவேண்டும்.

(273) உத்திரங்கள், 3-அஸ்தம், மிருகசீர்டம், ஸ்வாதி, மகம், அனுஷம், இந்த எட்டுக்கும் விபத் பிரத்தியர தாரை தோஷங்களும் ஸ்திரீ பூர்வ தோஷமுமில்லை.

(274) பெண் நக்ஷத்திரம் 4-பாதம் (முழு நக்ஷத்திரம்) ஆனல் அசுவனி முதல் 3 பர்வத்தில் (விரற்கணு) எண்ணவேணும் முக்கால் நக்ஷத்திரமானல் கிருத்திகை முதல் 4 பருவத்தில் எண்ணவேணும். அர்த்த நக்ஷத்திரம் (பாதி 2 பாதத்தில் முடிவது) ஆனல் மிருகசீர்ஷம் முதல் 5 பருவதத்தில் எண்ணவேணும். இரண்டு நக்ஷத்திரங்களும் ஒரே வரையில் கூடினல் நாடிப் பொருத்தமில்லை.

(275) இதன் பலன்:—மத்தியநாடி புருஷனுக்கு தோஷம், பார்சுவநாடி ஸ்திரீக்குத் தோஷம், அதுவும் முதல் பரியாயமாகில் ஒரு வருஷத்திற்குள்ளும் அதற்கு மேல் 3 வருஷத்திற்குள்ளும் தோஷம்.

(276) புருஷனுக்கு புருஷ நக்ஷத்திரமும், பெண்ணுக்கு ஸ்திரீ நக்ஷத்திரமுமாகில் உத்தமம். வித்தியாசமானல் அதமம். நபும்சகமானல் மத்திமம்.

(277) கடகம், மீனம், விருச்சிகம் இந்த 3-ம் பிராமண ராசிகள், சிம்மம், தனுசு, துலாம், இந்த மூனும் க்ஷத்திரிய ராசிகள், ரிஷபம், கன்னி, கும்பம் இந்த 3-ம் வைசிய ராசிகள், மேஷம், மிதுனம், மகரம், இந்த 3-ம் சூத்திர ராசிகள்.

(278) மூலம், கேட்டை, ஆயில்யம், விசாகம், இந்த 4-ம் பிள்ளை நக்ஷத்திரமாகில் விவாகத்தில் தோஷமில்லை. ஸ்திரி நக்ஷத்திரமாகில் தோஷமுண்டு அததவிதமெனில்,

(279) பெண் நக்ஷத்திரம் மூலமானல் மாமனருக்கு தோஷம்.

(280) ஆயில்யம், மாமியாருக்கும் கேட்டை, மூத்த சகோதரனுக்கும் விவாசம் இளைய மைத்துனனுக்கும் தோஷம்.

(281) எல்லோருக்கும் ஜன்ம ராசிக்கு 8-வது ராசியில் சந்திரன் வந்தால் அது சந்திராஷ்டமம். அதில் எல்லா சுப கர்மங்களும் விலக்கவும், இல்லாவிடில் தோஷம் வரும்.

(282) சந்திராஷ்டமத்தில் 6 வகையுண்டு. (1) சாதக சந்திராஷ்டமம், (2) மைத்திர சந்திராஷ்டமம், (3) பாமமைத்திர சந்திராஷ்டமம் இவை தோஷமில்லை. (4) பிரத்தியர சந்திராஷ்டமமும், (5) வத சந்திராஷ்டமும், (6) ஜன்ம சந்திராஷ்டமும் நீக்கவும். சாதக சந்திராஷ்டமம் சுத்தம், மைத்ர சந்திராஷ்டமம் சோபனம், பரமமைத்திர சந்திராஷ்டமம், மங்களம், இவைகளில் சுப கர்மங்



கள் செய்யலாம் பிரத்தியர சந்திராஷ்டமம் அசோபனம், சந்திதவ ராஷ்டமம் அநாயுஷ்யம் ஜன்ம சந்திராஷ்டமம் அக்ஷேமம் இவைகளில் சுப கருமங்கள் செய்யக்கூடாது.

(283) கிருஷ்ண பக்ஷத்தில் தாரை பலமுள்ளது. சுக்ல பக்ஷத்தில் சந்திரன் பலமுள்ளவன். ஆகையால் சந்திர தாரா பலமுள்ள தினத்தில் சர்வ கர்மங்களையுஞ் செய்யவும்.

(284) அஸ்தம், புனர்பூசம், திருவோணம் அபிஜித்து, பூசம்' அனுஷம், அசுவனி, பூரட்டாதி, உத்திரட்டாதி இந்த 9-ம் புருஷ நக்ஷத்திரங்கள். மூலம், மிருகசிர்ஷம், சதையம் இந்த 3-ம் நபும்சக நக்ஷத்திரங்கள். மற்ற 16 ஸ்திரீ நக்ஷத்திரங்கள்.

(285) இரட்டித்த திதிகளுள் துவிதியையும் தசமியும் நீக்கி சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, துவாதசி, சதுர்தசி இந்த 5-க்கும் இரண்டு பக்ஷமும் பக்ஷச் சித்திரம் என்று பெயர்.

## நந்தை, ரிக்தை முதலிய திதிகள்

(286) பிரதமை-நந்தை: துதிதிவிய-பத்ரை: திருதியை-ஜயை: சதுர்தசி-ரிக்தை: பஞ்சமி-பூர்ணை: இவ்விதமே ஷஷ்டி முதலாகவும் ஏகாதசி முதலாகவும் இரண்டு பக்ஷங்களிலும் வரிசையாக நந்தை, ரிக்தை முதலியன ஆகும்.

(287) திருவோணம், அவிட்டம், சதையம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ரோகிணி, பூசம், திருவாதிரை, இந்த 9-ம் ஊர்த்துவமுகம். கிருத்திகை, விசாகம், ஆயில்யம், பரணி, மூலம், மகம், பூரம், பூராடம், பூரட்டாதி இந்த 9-ம் அதோமுகம். சுவுனிதி மிருகசிரம், புனர்பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், கேட்டை, ரேவதி இந்த 9-ம் திர்யக்குமுகம்.

(288) அதோமுகம் கரும (காரிய) நாசம் பண்ணும், திர்யக்குமுகம் தனதானிய நாசம்செய்யும் ஊர்த்துவ முகத்தில் சகல கர்மங்களும் செய்யலாம்.

(289) அதோமுக நக்ஷத்திரங்களில் துறவு, கிணறு, ஏரி, அகழி முதலியன வெட்டவும், கணிதமெண்ணவும் சூதாடவும் கிழங்கு நடவும் நலம்.

(290) திரியக் முக நக்ஷத்திரங்களில் யானை குதிரை முதலான நாற்கால் ஜீவன் கொள்ளவும், காட் மேய்க்க ஏற்றம்போட

தோப்புவைக்க பட்டாபிஷேகம் செய்ய நலம் வாசக்கால் தூண் முதலியன நாட்டவும் நலம்.

(291) ஊர்த்துவமுக நக்ஷத்திரத்தில் மேல்தளம், மதில் துவஜம், யானை, குதிரை, ஏறி கோட்டை கட்ட தோப்புவைக்க, பட்டாபிஷேகம் செய்ய இவை ஈள் முதலியவைகளுக்கு நன்று.

(292) மேஷம்-முதல், மேஷம்-சரராசி, ரிஷபம்-ஸ்திரராசி, மிதுனம்-உபயராசி இவ்விதம் திரும்பவும் மூன்று மூன்று ராசியாக பார்க்கவும். மீனம்-முதலாக, மீனம்-கர்ப்பம், மேஷம்-துவாரம், ரிஷபம், பாக்யகம் என்று திரும்பவும், 3-3 ராசியாக கும்பம் வரையில் பார்த்துக்கொள்ளவும்.

(293) சூரியனுக்கு சர ராசியில் 5-ஆம் பாகமும், ஸ்திர ராசியில் 7-ஆம் பாகமும், உபய ராசியில் 9-ஆம் பாகமும ஷடசீதி அம்சாதி என்றுபெயர் அதற்குநாழிகை 60 என்றும் அதிலே சுப கர்மங்கள் தவிர்க்கப்படும். ஒரு ராசியை 30 பாகம் செய்து அதில் சரத்திற்கு 5-ஆம் பாகமும் ஸ்திரத்திற்கு 7-ஆம் பாகமும் உபயத்திற்கு 9-ஆம் பாகமும் ஷடசீதி அம்சாதி ஆகும். சித்திரைமீ 5-ஆம் தேதி வையாசி 7-ஆம் தேதி ஆனி 9-ஆம் தேதி திரும்பவும் இந்த அடவிலே அறிந்துகொள்ளவும்.

(294) தசப் பொருத்தங்கள் பலன் :—தினப் பொருத்தத்தில் ஆயுள் ஆரோக்கியம், கணப்பொருத்தத்தில் சோபனகரம், மாகேந்திரத்தில் புத்திர விருத்தி. ஸ்திரீ தீர்க்கத்தில் சர்வ சம்பத்கரம், யோனிப் பொருத்தத்தில் அன்னியோன்னிய நேசம், ராசிப் பொருத்தத்தில் வமிசவிருத்தி, ராசியதிபதி பொருத்தத்தில் சந்தான விருத்தி, வசியப் பொருத்தத்தில் அன்னியோன்ய வசியம் ரஜ்ஜுப் பொருத்தத்தில் மாங்கலிய விருத்தி, வேதைப் பொருத்தத்தில் சோகவினாசம் என்றறியவும்.

(295) சூரியன் குரு இவர்கள் உபசயத்திலிருக்க இல்லாவிடில் சுக்கிரனாவது சந்திரனாவது கேந்திரங்களிலாவது கோணங்களிலாவது இருக்க விபத்து பிரத்தியரம் வதம் நக்ஷத்திர திரி ஜன்ம தோஷங்கள் இவையை போக்கும்.

(296) ஜன்மத்திலே 10 நாழிகை நீக்கவும். அனு ஜன்மத்தில் 7 நாழிகை நீக்கவும். ஆதான லக்னத்தில் 8 நாழிகை நீக்கவும்.



(297) ஜன்ம திரயங் (3 ஜன்மங்) களுக்குள் (வெல்லம்) தானம், விபத்துக்கு ஆடுதானம் பிரத்தியரத்திற்கு உப்புதானம், வதத்திற்கு பொன் தானம் செய்தால் தோஷ பரிகாரம்.

(298) 3 ஜன்மங்களில் தேவதா பிரதிஷ்டை செய்யலாகாது, விபத் பிரத்தியர நைதனங்களானாலும் சுபம்.

(299) 3 உத்திரங்கள் அஸ்தம், ஸ்வாதி மிருகசீர்ஷம், அனுஷம் இந்த 7 நக்ஷத்திரங்களுக்கும் விபத் பிரத்தியர வத தோஷங்களில்லை.

(300) விபத்தாரைக்கு பூமிதானம் பிரத்தியரத்தாரையில் பல தானம் வதத்தில் பொன் திலதானம் செய்தால் பரிகாரமாகும்.

(301) ஜன்ம நக்ஷத்திரம் வதூவரர் இருவருக்கும் தெரிந்தால் பார்த்து விவாகம் செய்வது நலம், தெரியாவிட்டால் இரண்டுக்கும் நாம நக்ஷத்திரம் பார்க்கவும்.

(302) வரன் ஜனன நக்ஷத்திரமும் ஸ்திரி நாம நக்ஷத்திரமும் பார்க்கலாம், பெண் ஜன்ம நக்ஷத்திரத்திற்கும் வரன் நாம நக்ஷத்திற்கும் பொருத்தம் பார்க்கலாகாது.

## அக்னி ஆதானம்

(303) ரோகிணி, கேட்டை, ரேவதி உத்திரங்கள் 3, கிருத்திகை விசாகம் மிருகசீர்ஷம் இந்த நக்ஷத்திரங்களில் ரிக்தை, மகரம், கும்பம், மீனம், செவ்வாய் சனி இவர்கள் வாரங்களையும் தள்ளிவிட்டு குரு குஜ சந்திரர்கள் ஸ்வ க்ஷேத்திர மித்திர க்ஷேத்திர உச்ச க்ஷேத்திரங்கலிருக்க அஷ்டம சுத்தியுண்டான லக்னத்தில் அக்னி ஆதானம் செய்யக்கடவன்.

## இராஜாவுக்குப் பட்டாபிஷேகம்

(304) கேட்டை, உத்திரம் மூன்று ரேவதி, அனுஷம், அஸ்தம் ரோகிணி, பூசம், திருவோணம் இந்த நக்ஷத்திரங்களிலே சுக்கிரன், குரு, புதன், சந்திரன் இவர்கள் ஹோரை அம்சகம் வாரம் லக்னம் இவைகளில் ரித்தை பூர்ணிமை தவிர மற்ற திதிகளில் கன்னி, துலாம், மகரம் விருச்சிகம் இவை தவிர்த்து மற்ற லக்கினங்களில் அஷ்டமசுத்தி யுண்டான லக்னத்தில் சுத்த தினத்தில் ராஜாவுக்கு பட்டாபிஷேகம் செய்யக் கடவன்.

## பூ பிரவேசம்

(305) பூசம் மூன்று உத்திரம் ஸ்வாதி திருவாதிரை மகம் அனுஷம் சித்திரை அஸ்தம இந்த நக்ஷத்திரங்களில் ரிஷபம் கடகம் விருச்சிகம் இந்த லக்னங்களில் பக்ஷச் சித்திரையும் நவமி யும் தவிர மற்ற திதிகளில் குஜன், குரு, சந்திரன், புதன் இவர்கள் வார லக்னமிசாதிகளில் பூப்பிரவேசம் செய்யக் கடவன்.

(306) ரேவதி, புனர்பூசம், உத்திரம் 3 அஸ்தம் மூலம், பூசம் ரோகிணி இந்த நக்ஷத்திரங்களில் புதன், குரு, சுக்கிரன், சந்திரன் இவர்கள் வார லக்னமிகாதிகளிலே ரிக்தையும், பக்ஷச் சித்திரை யும், 2 பர்வங்களையும் தள்ளி மிகுந்த திதிகளில் பூர்வ பட்சத்தில், மீனம், ரிஷபம், மகரம், மிதுனம், கடகம், இந்த லக்னங்களில் 4-மிடம் சுத்தியான லக்னத்தில் கோணமில்லாத நட்சத்திரங்களில் பொன்னேர்படி பூமிதேவியை, பலம், புஷ்பம், ஜலம் முதலியவைக ளால் பூஜித்து தானும்கூட இருந்து ஸ்நானம் செய்து சுத்தனு யிருந்து கிருஷி ஆரம்பஞ் செய்யக் கடவன்.

## கோண நக்ஷத்திரமாவது

(307) சூரியன் விட்ட நட்சத்திரம் முதலாக 8 திசைகளிலும் 3-3-3-5-3-5-3-2 இந்த கிரமத்தில் ஈசானியம் முதல் ஆரம்பித்து எண்ணிப்பார்த்து இதற்கு 4 மூலைகளிலும் விழுந்த நக்ஷத்திரங்கள் கோணங்கள் மற்ற 4 திசைகளில் விழுந்த நட்சத்திரங்கள் கோண நட்சத்திரங்கள் அல்ல என்று அறியவும், கோண நட்சத்திரங்கள் கிருஷி (பயிர்) நாசம், மற்றவை அதிக லாபம்.

## அதன் அபவாதம்

(308) ஸ்வாதி, அனுஷம், திருவோணம் மூலம், அசுவனி, அஸ்தம், பூசம் இந்த 7 நட்சத்திரங்களுக்கும் கோண தோஷமில்லை என்றறிக

(309) அஸ்தம், சுவாதி, ரோகிணி மூலம், மகம், திருவோ ணம், அனுஷம், ரேவதி, பூசம், விசாகம் சதையும் மூன்று உத்திரம் இந்த நக்ஷத்திரங்களில் மேஷம், கன்னி, தனுசு, விருச்சிகம், பத் திரை ரிக்தை, இரண்டு பருவங்கள் இவைகளை நீக்கி மற்ற திதி களில் குரு-சுக்கிர-வார, லக்னம்சங்களிலே 7-மிடத்தில் சுக்கிர னில்லாவிடில் அஷ்டம சுத்தியுண்டான லக்னத்தில் விதை விதைக்க நலம்.



(310) ஆவணி மாதம் பிறந்த முதல் நாழிகை 3-வி 55-க்கு மேல் 30 நாழிகை அக்னி நட்சத்திரம் என்று சொல்லப்படுகிறது அதற்கு நட்டார்று என்று பெயர் அதில் விதை விதைக்கக்கூடாது விதைத்தால் நஷ்டம் வரும்.

## ஆகாச பாதாளங்கள்

(311) நல்ல பிறையில் நவமியும் தசமியும் அல்லது பிறையில் சதுர்த்தியும், பஞ்சமியும், இந்த ஆகாசத்திலும் பாதாளத்திலும் சர்வாரம்பங்களும் நீக்கவும்.

## நூதன வஸ்திரந் தரித்தல்

(312) அஸ்தம் 3 உத்திரங்கள், சுவதி புனர்பூசம், பூசம் அனு ஷம் சித்திரை விசாகம், ரோகிணி சுவாதி ரேவதி இந்த நட்சத் திரங்களில் ரிக்தை மேஷம், விருச்சிகம், சிங்கம், தனுசு, மீனம், சனி, குஜவாரங்களில்லாத மற்ற வாரங்களில் திதிகளில் லக்னங் களில் நூதன வஸ்திரந்தரிக்கக் கடவன்.

## வார பலன்

(313) ஞாயிறு-நோய்ப் பெருக்கு, திங்கள்-துக்கம், செவ் வாய்-அக்னி பயம், புதன் தன தானியலாபம், வியாழன்-ஆரோக சாபவிருத்தி, வெள்ளி-சுக போஜனம் கிடைத்தல், சனி-மகாபயம்.

## நூதன பூஷணந்தரிக்க

(314) பூசம் ரோகிணி, அவிட்டம் அஸ்தம் விசாகம், சித் திரை, அனுஷம், மூன்று உத்திரங்கள் ஸ்வாதி புனர்பூசம், அசு வனி ரேவதி இந்த 14 நட்சத்திரங்களிலும் நூதன வஸ்திரந்தரிக்க, புதுக் கலத்தில் புசிக்க நூதன பூஷணுதி தரிக்க நன்று.

(315) ரோகிணி அசுவனி மிருகசீர்ஷம் ரேவதி அஸ்தம் சித் திரை பூசம் அனுஷம் இந்த எட்டு நட்சத்திரங்களிலே குரு சுக் கிரன் சந்திரன் சனி இவர்கள் வார லக்னமிசங்களில் நந்தைபூர்ணை இந்த திதிகளில் கன்னி, ரிஷபம மிதுனம், மீனம் தனுசு இந்த லக்னங்களிலே நூதன பூஷணங்கள் முதலிய அணியக் கடவன்.

## ஔடத சேவை

(316) அஸ்தம் அசுவனி, சுவாதி, அனுஷம், சதையம் புனர் பூசம், 3 உத்திரங்கள் ரேவதி, சித்திரை, திருவோணம் மிருக

சீர்டம் பூசம் அவிட்டம் ரோகிணி இந்த நட்சத்திரங்களிலே, ஞாயிறு, புதன், குரு, சுக்கிரன், சந்திரன் இவர்களுடையவரா லக்னமிசங்களில் சர ராசியில் 6-7-8-மிடம் சுத்தியான இடத்தில் (லக்கினங்களிலே) மருந்து புசிக்கக்கடவன், கன்னியும் நல்லது.

## அக்னி சஸ்திரம் முதலிய வைத்தியங்களுக்கு

(317) திருவாதிரை கேட்டை ஆயில்யம் மூலம் இந்த நக்ஷத்திரங்களிலே சனி குஜவார உதயங்களில் ரிக்தையிலே, மேஷம், கடகம், கன்னி துலாம் இந்த லக்னங்களில் பாபகிரக பலமுடைய தாய் 8-மிடம் சுத்தியான லக்கினத்தில் சந்திர தாரா பலமுண்டான தினத்தில் அக்கினி வைத்தியம் சஸ்திர வைத்தியம், காரம் வைத்தல் முதலியன செய்ய அனுகூலம்.

## வாஸ்து கரும விதி

(318) சித்திரை, வைகாசி, ஆனி, பங்குனி தை இந்த மாசங்களிலே குரு சுக்கிர மூடமில்லாத பிரகாசத்தில் புனர்பூசம், சதையம் ரோகிணி, மிருகசீர்டம், சித்திரை அவிட்டம், மகம் அனுஷம் அஸ்தம் 3 உத்திரங்கள் ரேவதி அசுவனி, சுவாதி, பூசம், கேட்டை திருவோணம் இந்த 18 நட்சத்திரங்களில் ரிக்தையும், 2 பருவங்களையும் நீக்கி மிகுந்த திதிகளில் குரு புதன் சுக்கிரன், சனி, திங்கள் இவர்களுடைய வார லக்கின அமிசங்களில் வாஸ்து இடவும் கோவில் கட்டவும் அடிமனை கோலவும் நல்லநாளென்றறியவும்.

### கிருக ஆரம்பம்

(319) உத்திரம் மூன்று மிருகசீர்டம் ரோகிணி, அனுஷம், பூசம், ரேவதி அஸ்தம் இந்த 9 நட்சத்திரங்களும் கிரக ஆரம்பத்திற்கு உத்தமங்கள். சுவாதி திருவோணம், புனர்பூசம், சதையம், அவிட்டம், சித்திரை இந்த நட்சத்திரங்களும் மத்திமங்கள்.

(320) மாசி, பங்குனி, ஆனி, புரட்டாசி, மார்கழி இந்த ஆறு மாதங்களிலே வாஸ்து நிர்மாணம் செய்தாலும் கிரகப்பிரவேசம் செய்தாலும் அவன் தரித்திரனாவான்.

(321) பங்குனி, ஆனி, புரட்டாசி மார்கழி இந்த 4 மாதங்களிலே கிரக கருமங்கள் ஒன்றும் செய்யக்கூடாது. செய்தால் குடும்பத்திற்கு நாசம் வரும்.



### கிருகப் பிரவேசம் முதலியன

(322) மகம், மிருகசீர்டம், அஸ்தம் ஸ்வாதி, மூலம் அனுஷம் ரேவதி ரோகிணி 3 உத்திரங்கள் இந்த 11 நட்சத்திரங்களிலே தேவதா பிரதிஷ்டை செய்யவும். விவாகம், கிரகப்பிரவேசம், கிராமப் பிரவேசம் பீஜாவபனம் (விதை விதைத்தல்) கிரகங்கட்ட மண்டபம் முதலியன கட்டவும், வாசக்கால் தூண்கள் நாட்டவும், இவைகளுக்கெல்லாம் நல்லது.

(323) தை, சித்திரை, வைகாசி, ஆவணி, அர்ப்பசி, கார்த்திகை இந்த மாதங்களிலே அஸ்தம் பூசம் புனர்பூசம் சதையம் சுவாதி ரோகிணி ரேவதி 3 உத்திரங்கள் திருவோணம், மிருகசீர்டம், மூலம் அவிட்டம் அசுவனி இந்த நட்சத்திரங்களிலே கன்னி, கும்பம், ரிஷபம், விருச்சிகம் சிங்கம் மிதுனம் இந்த லக்னங்களிலே சனி திங்கள், புதன், வியாழன் வெள்ளி இந்த வாரங்களிலே 2-மிடம் சுத்தியுண்டான லக்கினத்திலே கிருகப்பிரவேசம் செய்யக் கடவன்.

(324) கதவு போடாமல் கூரை கட்டாமல் சுவரும் தரையும் பூசாமல் பஞ்ச (5) மகா யக்கியம், பிராமண போஜனம் செய்யவிடாமல் கிரகப்பிரவேசம் செய்தானுகில் அந்த வீட்டிலே பேய்க் குடிபுகும், களத்திர புத்திர பிராண அர்த்த (செல்வம்) ஆனியும் நேரும், ஆகையால் சுபத்தையும் க்ஷேமத்தையுங் கோரியவன் வீட்டிற்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்யாமுன் அந்த வீட்டில் குடிபுகக்கூடாது.

## வாஸ்து புருஷ லக்ஷணம்

(325) புரட்டாசி அற்பசி கார்த்திகை இந்த மூன்று மாதங்களிலும் கிழக்கே தலையாகவும், மார்கழி, தை, மாசி, இந்த 3 மாதங்களில் தெற்கே தலையாகவும், பங்குனி, சித்திரை, வைகாசி, இந்த 3 மாதங்களில் மேற்கே தலையாகவும், ஆனி, ஆடி, ஆவணி, இந்த 3 மாதங்களில் வடக்கே தலையாகவும் வாஸ்து புருஷன் சயனித்திருப்பார்.

(326) வாஸ்து புருஷன் சூரியன் இருக்கும் ராசியில் காலை நீட்டிக்கொண்டு அதற்கு எதிர் இராசியில் தலையை வைத்துக் கொண்டு இடதுகை கீழும் வலதுகை மேலும் வைத்துக்கொண்டு சயனித்திருப்பார்.

(327) கட்டப்போகும் கிரகத்தை நெடுக்கே அளந்து அதை 9 பங்கு பண்ணி வலது புறத்தில் 5 பங்கு தள்ளி இடது புரத்திலே 3 பங்கு தள்ளி நடு ஒரு பங்கிலே வாசல் வைக்கக் கடவன்.

(328) வீட்டு வாசலுக்கு தன் ராசி வலது புறத்திலே அல்லது முன்னே இருந்தால் அதிக சுபாசுவரியம் பின்னே இடது புறத்திலே இருந்தால் பொருளும் உயிரும் போகும்.

(329) அடிமனை கோலும்போது வாஸ்து புருஷனுக்கு தலையில் வெட்டினால் தனக்கு மரணபயம் பாதத்திலேயாகில் ஸ்திரீ புத்திர நாசம் கை முதுகு இதுகளிலானால் சோரபீடை நடு வயிற்றிலாகில் தன தானிய புத்திராதி சமுரித்தியாகும்.

(330) அடிமனை கோறும்போது பாம்பு, தவளை, தேரை, சாம்பல் எலும்பு காஷ்டம் (கட்டை) ஓட்டாஞ்சில்லி இவைகளைக் கண்டால் அந்தக் கிருகத்தை நீக்கவேணும்.

(331) வெள்ளி, புதவாரத்திலும் 3 உத்திரம் ரோகிணி அமாவாசை சதுர்தசி இவைகளிலும் கோ (பசு) சாலை கொட்டில் கட்டவும், கோ யாத்திரை கோ பிரவேசம் இவை செய்யக்கூடாது.

(332) கிருக கிராமாதி பிரவேசத்திற்கு இடது பக்கத்திலும் எதிரிலும் வெள்ளியானால் தவிர்க்கவேணும்.

(333) தை மாசிகளில் கிழக்கே மனை கோலலாம், சித்திரை வையாசிகளில் தெற்கேயும், ஆடி ஆவணிகளில் மேற்கேயும் அர்ப்பசி கார்த்திகைகளில் வடக்கேயும் மனை கோலலாம், ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி, இந்த 4 மாதங்களில் ஒரு திசையிலும் மனை கோலக்கூடாது.

(334) ரோகிணி, 3 உத்திரங்கள் அஸ்தம், அசுவணி, அனுஷம், மிருகசிரம், திருவோணம், ரேவதி, புனர்பூசம், ரிக்தை, ஷஷ்டி இர்ண்டு பருவங்கள் நீக்கி மற்ற திதிகள் குரு, சுக்கிர, புதன், திங்கள், சனி இவர்கள் வார லக்னாம்சங்கள் கிருகப் பிரவேசத்திற்குச் சுபங்கள்.

## தானியம் சேகரித்தல்

(335) ரோகிணி, புனர்பூசம், பூசம், ரேவதி, அஸ்தம், 3 உத்திரங்கள் ஸ்வாதிமூலம் அனுஷம், பரணி, திருவாதிரை, மகம், திருவோணம் இந்த நட்சத்திரங்களில் ஸ்திர ராசியில் 4-ம்



மிடத்தில் சனி யிருக்கிற லக்கினத்திலே பக்ஷனச் சித்திரை, ரித்தை, அமாவாசை, ஷஷ்டி சகுனி முதலிய 4 கரணங்கள் இவைகளை விட்டு ஸ்திர வாரத்தில் தானியம் சேகரிக்க நலம்.

## தேவதா பிரதிஷ்டை

(336) தை, மாசி, பங்குனி, சித்திரை, வையாசி, ஆனி இந்த ஆறுமாதங்களுள் சுக்ல பக்ஷத்தில் குரு சுக்கிர பிரகாசத்தில் ஆகாயம் நிர்மலமா யிருக்கின்ற காலங்களில், பூசம், புனர்பூசம், மிருகசிர்டம், ரேவதி, சுவாதி, ரோகிணி, அஸ்தம், 3 உத்திரம் இவை உத்தம நட்சத்திரங்கள் திருவோணம் மூலம் அவிட்டம் அனுஷம் இவை மத்திமங்கள், இந்த நட்சத்திரங்களில் ரித்தை பக்ஷச்சித்திரை இரண்டு பருவங்கள் இவை தவிர்த்து மற்ற திதிகளில் குரு, சுக்கிரன், சந்திரன், புதன் இவர் வாராம்ச லக்னங்களில் ஸ்திர ராசியில். கேந்திர திரிகோணங்களில் சுப கிரகங்களிருக்க, அஷ்டம சந்திரன் தவிர அஷ்டம சுத்தியுண்டான லக்னத்தில் தேவதா பிரதிஷ்டை பண்ணக் கடவன். ஸ்ரீ பூமிதேவிகளுக்கு சர ராசியிலும் உபய ராசிகளும், அம்மன் முதலிய க்ஷுத்திர தேவதைகளுக்கு சர ராசியும் உபய ராசியும் அம்மன் பிரதிஷ்டை பண்ணலாம்.

## ரோகம்

(337) பூரம், பூராடம், பூரட்டாதி, அவிட்டம், கேட்டை, சுவாதி, திருவாதிரை இந்த 7 நட்சத்திரங்களில் வியாதி கண்டால் மரணம், அனுஷம் ரேவதி தீர்க்க ரோகம், உத்திராடம் 1 மாதம், மிருகசீர்ஷம், அஸ்தம், விசாகம், அவிட்டம் இவைகளில் ஒரு பட்சம் (15 நாள்கள்) மகம் 20 நாள், சித்திரை சதையம் பரணி, திருவோணம் 11 நாள், அசுவனி கார்த்திகை மூலம் 9 நாள், புனர்ப்பூசம், பூசம், உத்திரம், உத்திரட்டாதி, ரோகிணி 7 நாளிலும் குணமாகும்.

(338) ஆயில்யம், சதையம், திருவாதிரை, ஸ்வாதி, கேட்டை, முப்பூரம், கிருத்திகை, பரணி இவைகளில் ஞாயிறு செவ்வாய் சனி இந்த வாரங்களும், நவமி ஷஷ்டி துவாதசி இரண்டு பருவங்கள் ரித்தை இவை கூடினால் அந்நாளில் ரோகாரம்பமாகில் எத்தனை பரிகாரம் செய்யினும் மரணம் என்றறியவும்.

(339) 3 ஜன்ம நட்சத்திரங்கள், வதத்தாரை, பிரத்தியர, விபத்தாரைகள் இவைகளில் ரோகாரம்பமானால் மரணமாவது நேரும் தப்பிடில் பீடையைச் செய்யும்.

### ஆரோக்கிய ஸ்நானம்

(340) புனர்பூசம், ரோகிணி, மகம், 3 உத்திரம் ஸ்வாதி ரேவதி, ஆயில்யம் மிருகசீர்ஷம் இவைகளில்லாத நட்சத்திரங்களில் வெள்ளி திங்கள் தவிர்த்து மற்ற வாரங்களில் ரித்தை அஷ்டமி பருவதுவயம், தவிர மற்ற திதிகளில் சுப யுக்தமான ராசியில் ஆரோக்கிய ஸ்நானஞ் செய்யக்கடவன்.

(341) மிருத (மரித்த) நட்சத்திரத்தில் ரோகாரம்பமானால் மரணத்தைப்பண்ணும். அர்த்த (½) ஜீவனிலேயாகில் அதிக பீடைகளைப்பட்டு பிழைக்கும் பூர்ண ஜீவனிலேயாகில் சுகத்தை அனுபவிப்பான்.

### தைல ஸ்நானம்

(342) சனி புதன் திங்கள் இந்த வாரங்களில் பருவதுயமும் சதுர்தசியும், பிரதமை ஷஷ்டி, அஷ்டமி, துவாதசி, கேட்டை 3 உத்திரம் திருவோணம் திருவாதிரை 3 ஜன்மங்கள் மாதப்பிறப்பு இவைகளை நீக்கி மற்ற திதிவார நட்சத்திரங்களில் பகலில் தைலமிட்டு ஸ்நானஞ் செய்யக்கடவன். பாலர் விருத்தர் நோயாளி இவர்களுக்கு நாள் பார்க்க வேண்டாம்.

(343) கேட்டை, முப்பூரம், பரணி, திருவாதிரை, ஆயில்யம், கிருத்திகை, விசாகம், மகம் இவை யெல்லாம் ஸாமானியமாக (பொதுவாக) விலக்கத்தக்கன. இதில் சில விசேஷ காரியங்களும் உண்டு.

### மரம், கோடி, சேடி, கிழங்கு போட

(344) ரோகிணில் தோப்புவைக்கவும் ஆயில்பாகத்தில் வெற்றிலைக்கொடி பதிவு போடவும், பரணியில் கத்திரி வைக்கவும், சுவாதியில் நெல்வரகு முதலானது விதைக்கவும் மூலத்தில் கிழங்கு போடவும் உத்தமம்.

(345) அசுவனியில் தென்னை பனை கமுகு மா மரங்கள் வைக்கவும், பரணியில் பயிர் குழிபோடவும், கிருத்திகையில் காடு வளர்க்கவும், ரோகிணி தோப்பு வைக்கவும், மிருக சீர்ஷத்திலும் தோப்பு வைக்கவும், புனர்பூசத்தில் படரும் கிழங்குகள்



நடவும், பூசத்தில் வாழை கரும்பு முதலியனவைக்கவும் ஆயில்யத்தில் வெற்றிலைக்கொடி பதிக்கவும் நன்று.

### குளம், கிணறு முதலியவை தோண்டுதல்

(346) ரோகிணி பூசம், மிருக சீரஷம், பூசம், ஆயிலியம், மகம், 3 உத்திரங்கள், அஸ்தம், அனுஷம், திருவோணம், சதயம், ரேவதி, புதன், வியாழம், வெள்ளி, இடங்களிலும் ரிக்தையும் பக்ஷச் சித்திரையும் நீக்கி மற்ற திதிகளிலும் ரிஷபம், கடகம், மகரம், கும்பம், மீனம் இந்த லக்கினங்களிலும், அஷ்டம சுத்தியான லக்கினத்திலும் குளம், கிணறு முதலியவை தோண்டவும்.

(347) கிழக்கு மேற்கு 4 ரேகையும், தெற்கு வடக்கு 5 ரேகையும் வரைந்தால், 12 அரையாகும் அதில் பிரம ஸ்தானம் நடு 2 அறை. முற்பகலாகில் பிரச்ன லக்னம் துடங்கி பிரம ஸ்தானத்தில் மேற்கு அறை முதலாக பிரதக்ஷிணமாக எண்ணினால் எந்த அறையில் சந்திரனிருந்தானோ அதில் வெகு ஜலமுண்டு சூரியன் நின்ற ராசியில் ஜலமில்லை, கல் காணும். பிற்பகலாகில் பிரச்ன லக்னந் துடங்கி பிரம ஸ்தானத்தில் கிழக்கு முதல் அப்பிரதக்ஷிணமாக எண்ணி பார்க்கையில் சந்திரன் நின்ற ராசியில் மெகு ஜலமுண்டு. அந்த பிரஸ்ன ராசிக்கு கேந்திரத்தில் சந்திரன் அல்லது சுக்கிரன் இருக்கில் அதிக ஜலமுண்டு. கேந்திரங்களில் பாபிகளிருக்கில் ஜலம் சித்திப்பதில்லை. ஜல ராசியில் சந்திரன் அல்லது சுக்கிரனிருந்தால் அதிக ஜலம் உண்டு.

(348) பிரச்ன லக்னத்தில் ஆரூட ராசிக்கு அல்லது உதய ராசிக்கு கேந்திரங்களிலே சந்திர சுக்கிரர் இருந்தால் கிணர் பிரஸ்னை நன்று ஜலம் காணுமென்று சொல்லவும். பின்னும் ஒரு விதமுண்டு. ராசி சக்கிரம் கீரி ஒரு கோடு தொடச்சொல்லி அந்த தொட்ட கோடு ஜல ராசியாய் அதில் சந்திர சுக்கிரரிருந்திடில் அதில் கிணறு தோண்டினால் கிணறு நல்லதாய் அதிக ஜலமுண்டாகும்.

(349) கிருகத்திலாகிலும் க்ஷேத்திரங்களிலாகிலும் கிணறு தோண்டும்போது ஈசானத்தில் வெட்டினால் புஷ்டியுண்டு. கிழக்கு ஐசுவரியம், அக்கினி புத்திரநாசம், தெற்கு ஸ்திரீநாசம், நிருதி மனோதுக்கம், மேற்கு ஐசுவரியம், நிலம் பறியுண்டுபோகும், வாயு சத்ருபீடை, வடக்கு அற்ப சௌக்கியம், நடுவில் ஒருக்காலும் கிணறு தோண்டக்கூடாது.

(350) கிணறு வெட்டப்போகுமிடத்தை 12 பாகஞ்செய்து தற்கால லக்னத்தை நடுவேவைத்து அதுமுதலாக பிரதக்ஷிணமாக எண்ணுகையில் சந்திரன் சுக்கிரன் எந்த ராசியில் நின்றார்களோ அந்த ராசியில் கிணறு வெட்டினால் ஜலமுண்டு மேஷம் பாறை, ரிஷபம் அதிக ஜலம், மிதுனம் அற்பஜலம், கடகம் நல்ல நீர், சிங்கம் பாறை, கன்னி இடிகரை, துலா வெகு ஜலம், விருச்சிகம் அற்பஜலம், தனுசு பாறை, மகரம் இடிகரை குழி குண்டு, கும்பம் அதிக ஜலம், மீனம் வற்றுதஜலம்.

மஹாளய சிரார்த்தம்

(351) புரட்டாசி மாசி மாதங்களில் கிருஷ்ண பக்ஷத்தில் சுக்கிரனுடைய வாரம் லக்கினத்தை நீக்கி தனக்கும் தன் மனைவிக்கும் புத்திரனுக்கும் ஜன்ம திரயங்களை தவிர்த்து நந்தை திரயோதசி சதுர்தசி இல்லாத மற்ற திதிகளில் அவிட்டம், சித்திரை அஸ்தம், சுவாதி பூசம், மகம் அனுஷம், மிருகசீர்ஷம், திருவோணம், பூராடம் இந்த நட்சத்திரங்களில் மஹாளய சிரார்த்தம் செய்யக்கடவன்.

(352) விருத்தி சிரார்த்தம், கிரகண சிரார்த்தம், சங்கிரமண சிரார்த்தம், தீர்த்த யாத்திரை கால சிராத்தம், மாஸ சிராத்தம், அஷ்டகர சிராத்தம் இவைகளுக்கெல்லாம் எல்லாக் காலமும் பிரசஸ்தம், நாள்பார்க்க வேண்டாம்.

பிரேத கார்ய காலம்

(353) நந்தை, பத்திரை, திரயோதசி நீக்கி மற்ற திதிகளில் செவ்வாய் சுக்ரன் குரு இவர்கள் வாரங்கள் தவிர மற்றவர் வார லக்னதிகளில் திரிபாத நட்சத்திரத்தைவிட்டு பாபகிரக பலமுண்டான சமயத்தில் பிரேத காரியங்களைச் செய்யக்கடவன்.

(354) ரோகிணி, தனிஷ்டா பஞ்சகம் அதாவது அவிட்டம் முதல் 5 நட்சத்திரங்கள் திரிபாத நட்சத்திரங்கள் அர்த்த நட்சத்திரங்கள் (2 பாத நட்சத்திரங்கள்) மகம், நந்தை, திரயோதசி, சதுர்தசி, வெள்ளி சனி செவ்வாய் இந்த வாரங்களில் பத்திரை திதிகளில் மரணம் வந்தால் பிரேத சிராத்தம், அஸ்திஸஞ்சயனம், சபிண்டீகரணம், தகனம், திரைபக்ஷிகம், ஊனமாசிக தங்கள் 3 இவைகளைச் செய்தல் வமிச க்ஷயமாம். இதற்கு பரிகாரம்



தானம் பண்ணவேண்டும் (இது அபுத்திர விஷயம் காலாதித விஷயம். புத்திரன் விஷயத்தில் ஒன்றும் பார்க்கவேண்டாம்.

(355) திதிக்கு பூமிதானம் நட்சத்திரத்திற்கு சுவர்ணதானம் வாரத்திற்கு தில தானமும் ஹிரண்ய (பொன்) தானமும் பண்ணிடில் தோஷமில்லை, வேறு கதியில்லாவிடில் தானம் பண்ணி பண்ணுகிறது.

(356) துவி புஷ்கரம், திரிதிஷ்கரம் நந்தை பூர்ணிமை அமாவாசை வெள்ளிக்கிழமை சதுர்தசி இவைகளிலும் கிருத்திகையிலும் ஊன மாசிகங்களை செய்வதற்கும் சகலத்திற்கும் ஆகாது.

(357) துவி புஷ்கரம் திரி புஷ்கரமாவது:-ஞாயிறு செவ்வாய் சனி இந்த வாரங்களிலும் துவிதியை சப்தமி துவாதசி இந்த திதிகளும் திரிபாத நட்சத்திரங்களும் இந்த 3-ம் கூடில் திரி புஷ்கரம் இரண்டு கூடில் துவி புஷ்கரம் என்றறியவும்.

(358) பத்திரை திரிபாத நட்சத்திரங்கள் குரு சுக்கிரவாரங்கள் இவைகளில் மரணமானாலும், தகனமானாலும், அந்த வீட்டில் 3 பேருக்கு கருமம் பண்ணவேண்டியிருக்கும். இது எல்லாருக்கும் பொது. ஆகையால் எல்லாரும் இந்த விஷயத்தில் யதா சக்தி தானஞ்செய்து பின் கிரியைகளை நடத்தக்கடவன்.

(359) நந்தை வெள்ளி சதுர்தசி, 3 ஜன்மம் இவைகளில் புத்திரனில்லாத விஷயத்தில் பிரேத காரியங்களைச் செய்தானாகில் குலக்ஷயம் என்றறிக, புத்திர விஷயத்தில் தோஷமில்லை.

(360) திதியும் நட்சத்திரமும் பொல்லாது இவை இரண்டும் கூடில் கிராமத்திற்கு தோஷம், வாரமும் நட்சத்திரமும் பொல்லாது இவை கூடில் வாடைக்கு (வீதி) தோஷம். திதிவார நட்சத்திரம் பொல்லாதது மூன்றும் கூடினால் கிரகத்திற்கே தோஷம் உண்டுபண்ணும். பொல்லாதது என்ன எனில் முன்சொன்ன புஷ்கரத்தைப் பார்த்துக்கொள்ளவும்.

(361) செவ்வாய் குரு, வியாழன் நந்தை திரிபாத நட்சத்திரங்கள், கண்டம், சூலம், ஸ்திர லக்னம் தியாச்சிய வேளை இவைகளில் பிரபூதம் பண்ணலாகாது குலநாசஞ் செய்யும்.

ஷண்ணவதி சிராத்த காலம்

(362) அசுவனி, பரணி, பூசம், ஆயில்யம், மகம்பூரம், அஸ்தம் சித்திரை சுவாதி அனுஷம், கேட்டை மூலம் பூராடம், திரு

வோணம் அவிட்டம் சதையம் இவைகளில் ஷண்ணவதி கிராத்தம் செய்தால் தனபுத்திர லாபமுண்டு.

பிரதமருது காலம்

(363) அஸ்தம் சித்திரை சுவாதி விசாகம் அனுஷம் 3 உத்திரம் மூலம் ரேவதி, திருவோணம், அவிட்டம், சதையம், அசுவனி பூசம், ரோகிணி, மிருகசிர்டம் இந்த 17 நட்சத்திரங்களில் பிரதம ருதுவானால் மிக உத்தமம், தன தானிய புத்திரலாபமுண்டு, பூரம், பூராடம், பூரட்டாதி, பரணி ஆயில்யம் இந்த 5-ம் வைதவ்வியம் தரும். மகம், திருவாதிரை துக்கம், புனர்பூசம் கேட்டை, விபசாரியாவாள், கிருத்திகை தாரித்திரியம் பண்ணும்.

வார பலன்

(364) ஞாயிறு-வியாதி, திங்கள்-பதிவிரதை, செவ்வாய்-துக்கம், புதன்-பெண்பேறு, வியாழன்-போக பாக்கியம், வெள்ளி-புருஷனுடன் அன்னியோன்யம், சனி-மனஸ்தாபம் செய்யும்.

திதி முதலிய பலம்

(365) பருவதுவயம், ரித்தை அஷ்டமி, ஷஷ்டி துவாதசி, பிரதமை. பரிகத்தில் முன்பாதி, வீதிபாதம் வைதிருதி, ஸந்தியா காலம் கிரகண சமயம் இவைகளில் ருதுவானால் அசுபம்.

## ருது லக்ன பலன்

(366) மேஷம் - விபசாரி, ரிஷபம் - பதிவிருதை, மிதுனம்-ஸம்பத்து, கடகம்-பிரஷ்டை, (சாதிகெடுவாள்) சிம்மம்-புத்திர லாபம், கன்னி - ஐசுவரியவதி, துலாம்-புத்திமதி, விருச்சிகம் - பரஸ்திரி, தனுசு முன்பாதி - பிரஷ்டை, பின்பாதி-பதிவிருதை, மகரம்-ஒழுக்கமில்லாதவள், கும்பம்-தானியமுடையாள், மீனம் - புருஷனுக்கினியாள்.

## ருது கால பலன்

(367) பிராதக் காலத்தில் ருதுவாகில் சுபம். 15 நாழிகைக்குள்-தனதானிய சமுருத்தி, 15 நாழிகைக்கு மேல் அஸ்தமனத்திற்குள் விபசாரி, கோதூளியில் நற்குணமுடையாள், சந்தியா காலத்தில் வேசியாவள், அர்த்த ராத்திரியில் விதவை, பூர்வ ராத்திரியில் மலடி, அபர (பின்னிரவு) ராத்திரியில் கெட்ட நடவடிக்கை யுடையாள்.



## ருது ஆடை பலன்

(368) ஆடை வெள்ளையாகில் நன்று. சிகப்பு-வியாதிபயம், கருப்பு-விதவை, பொன்னிறம் - போகபாக்கியம், பச்சை - பதிவிருதை, கந்தப்புடவை-கெட்ட நடவடிக்கையுடையாள்.

(369) பட்டு ஆடை-பதிவிருதை, எழுத்துப்புடவை-ஸாமர்த்தியம்-மஞ்சள் குணவதி, அழுக்குபுடவை-துக்கம்.

## ருது ஸ்தான பலன்

(370) கோவிலில் குளத்தில் குட்டையில் மந்தைக்கரை, அயல்வீடு இந்த இடங்களில் ருது கண்டால் அசுபம், வழிநடை, ஜாதி பிரஷ்டை.

(371) ருதுபலன் கேட்கும்போது வந்தவன் கிழக்கே நின்று கேட்டால் ருதுப் பெண்ணுக்கு பிள்ளையுண்டாகும் 5 புத்திரர், வெள்ளைப்புடவை. அக்கினி மூலையில் நின்று கேட்டால், புடவை கருப்பு புத்திரன் 1-தெற்கிலாகில் சிப் பிள்ளை 8 கோடிப் புடவை. நிருதியாகிப் மலடி அழுக்குப்புடவை, மேற்காகில் பிள்ளை 6 புடவை வெள்ளை, வாயுவாகில் சக்களத்தியுண்டு புடவை வெள்ளை, வடக்காகில் பிள்ளை 10, புடவை பூறல், ஈசானமாகில் பிள்ளை, 11 புடவை பூறல் இந்தப்படி பார்க்கவும்.

## ருது தரிசன பலன்

(372) தானே கண்டால் வருந்துவாள், சுமங்கலி கண்டால் மாங்கலியம், ஆயுள்விருத்தி. விதவைகண்டால் வைதவியம், தாசி கண்டால் செல்வம், கன்னிப் பெண்கண்டால் போகபாக்கியம், புருஷன் கண்டால் தரித்திரம்.

(373) போஜனம் செய்தும்போது கண்டால் அதிக துக்கம், சயனத்தில் ருதுகண்டால் கணவன் மரணம்.

(374) ருதுவான லக்னத்திற்கு 7-ல் சனியிருந்தால் வைதவியம், செவ்வாய் காவல்கட்டு, குரு தனதானிய நாசம், புதன் மலடி ராகு கேது தரித்திரம், சூரியன் துக்கம், சுக்கிரன் மரணம், சந்திரன் புத்திர நாசம்.

(375) ருது லக்கினத்திற் 7-ல் எந்த கிரகமிருந்தாலும் அசுபம். கிரகமில்லாவிடில் நன்று.

விஷமல மாதங்கள்

(376) ஒரு மாசத்தில் பௌர்ணமியோ அமாவாசையோ இல்லாவிடில் அந்த மாசம் விஷ மாசம் என்று பெயர். எந்த மாதத்தில் 2 பருவம் 2 அமாவாசை வருகிறதோ அதற்கு மலமாசமென்று பெயர். இவை 2-லும் சுபம் செய்யக்கூடாது.

(377) ஒரு மாசத்தில் சங்கிராந்தி இல்லாவிடில் அதற்கு ஸம்ஸ்பர்ச மென்று பெயர். ஒரு மாதத்தில் 2 சங்கிர மணம்வரில் அதற்கு அம்ஹஸ்பதி என்று பெயர். இந்த 2 மாசங்களிலும் சுப கருமங்கள் செய்யக்கூடாது.

ஸம்ஸ்பர்ச அம்ஹஸ்பதி மாதங்கள்

(378) தனுசு, மீனம், கடகம் இவைகளில் குரு பிரசாரமாகில் இந்த 3 மாசங்களிலும் சுப கருமங்கள் செய்யலாம். ஸம்ஸ்பர்சம் அஸம்ஸ்பர்சம் என்னும் தோஷம் இந்த மாதங்களுக்கு கிடையாது.

(379) குரு தன் வர்க்கத்திலிருக்க சூரியன் ஸ்வ, உச்ச, மித்திர க்ஷேத்திரத்திலிருக்க ஸம்ஸ் பரிசாதி தோஷமும், அதிமாச மலமாஸாதி தோஷமுமில்லை. சூரியன் சுபாம்சத்திலிருந்து சுபரால் பார்க்கப்பட்டால் மலமாசாதி தோஷமில்லை.

யாத்திரை

(380) ஆடி கார்த்திகை பங்குனி இந்த மூன்று மாதங்கள் தவிர மற்ற மாசங்களில் சுக்ல பட்சத்தில் சுப கோசாரத்தில் ரிக்தை ஷஷ்டி அஷ்டமி துவாதசி யில்லாத திதிகளில் கிழக்கு நந்தையிலும், தெற்கு பத்திரையிலும், மேற்கு ஜயையிலும் வடக்கு பூரணையிலும் யாத்திரை செய்ய உத்தமம். அஸ்தம், பூசம், அசுவனி, அனுஷம், அவிட்டம், ரேவதி, திருவோணம், மிருகசீர்ஷம் இந்த 8 நட்சத்திரங்களும் உத்தமம். ரோகிணி, புனர்பூசம் மூலம், சதையம், சித்திரை, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இந்த 8-ம் மத்திபம், முப்பூரம், மகம், கேட்டை, பரணி, 3 ஜன்மம் கிருத்திகை சுவரித ஆயில்யம் விசாகம் திருவாதிரை சித்திரை இவை விலக்கத்தக்கவை. திருவாதிரை பரணி விசேஷ தோஷமுடையவை.

(381) புதன், வெள்ளி, சனி, திங்கள் இவர்கள் வார லக்னங்கள் சுபம்.



(382) மிருகசீர்ஷம், அசுவனி, பூசம், புனர்பூசம், அஸ்தம், அனுஷம், திருவோணம் மூலம், அவிட்டம், ரேவதி இந்த பத்து நட்சத்திரங்களில் பிரயாணஞ் செய்தால் க்ஷேம லாபத்துடன் சீக்கிரம் திரும்பி வருவான்.

(383) தனுசில் யாத்திரை ஏற்பட்டால் சத்துரு ஜயமுண்டு. ரிஷபத்தில் சுபம், கன்னியில் ஜுரம், கடகம் பூமி லாபம், சிங்கம் சுகம், விருச்சிகம். தேகத்தில் புண் மேஷ மிதுனங்கள் மரண பயம், துலாம்ஜயம், மகரம் காவல்கட்டு, மீனத்தில் மழை, கும்பத்தில் அடி, ஆகையால் நல்ல லக்னத்தில் 5-மிடம் சுத்தியான வேளையில் யாத்திரை செய்யக்கடவன்.

(384) கேந்திர திரிகோணங்களில் சுபரிருக்க, கேந்திராஷ்டமங்களில் பாபரில்லாமலிருக்க, சர்வ காரிய சித்தியாம், வித்தியாசமாகில் ஹானிவரும்.

(385) லக்னம் 2-3-5-6-8-9-10-11-12-இந்த இடங்களில் சுப கிரகளிருந்தால், சுபயாத்திரை: 7-மிடத்தில் சுக்கிரனகாது, 3-6-11-ல் பாப கிரகங்களிருந்தால் உத்தமம். லக்னத்தில் குரு சுக்கிரர்களிருந்தால் எல்லாவித தோஷங்களையும் போக்கி சுப பலனைத் தருவர்.

யாத்திரை சகுனம்

(386) கன்னிப் பெண், பசு, பூர்ணகும்பம், பழம் தயிர் புஷ்பம், சங்குநாதம், மங்களவாத்திய கோஷம், வாகனம் தண்டகை, பல்லக்கு, இரண்டு பிராமணர், யானை, குதிரை, ரிஷபம், பால் குடம், கொடி, டக்கயம், நல்ல பொருள்கள், கள்பானை, நல்லமண்மச்ச, மாமிசங்கள், கட்டுச்சோறு, சவம் வேசி, மாமிச கண்டங்கள், நற்சொல் இவைகள் எதிரில் கண்டால் கேட்டால் சுபம்.

கெட்ட சகுனம்

(387) மோர் பானை, எண்ணைத் தலையன், பாம்பு, விரிதலையன், ஆடைதரியாத அம்மணமா யிருப்பவன், விதவை, வெரும் பானை, ரத்தம், விறகுகட்டு, பன்றி, சன்னியாசி மூக்கரையன் ஜடாதாரி எண்ணை வாணியன் சிவந்த புஷ்பங்கள், ஈர வஸ்திரம், பேயன் மொட்டைத் தலையன் இவர்களை எதிரில் காணில் காரிய ஹானியும் உபத்திரவங்களும் வரும்.

(388) யாத்திரைக்குப் போகும்போது இடறினாலும் புடவை செரிந்து விழுந்தாலும், அழுதுக்கொண்டு போனாலும், பாம்பை அல்லது முயலைக்கண்டாலும் யாத்திரை செய்யக்கூடாது.

(389) தும்மலுக்கு ஒருநாள் தவிர்க்கவேணும், கௌளி, நரையான் வலியன் முதலியவைகளுக்கு 3 நாள், சர்ப்பத்திற்கும், பூனைக்கும் 6 மாதங்கள், முயலுக்கு சந்திர நட்சத்திரமுள்ளவரை தோஷமுண்டு.

(390) பிரயாண லக்னத்திற்கு கேந்திர திரிகோணங்களில் குரு இருந்தால் காகம் வலமாகும் அவர் சந்திரனுடன் கூடியிருக்கில் 2 பிராமணர் எதிர்ப்படுவர், சுக்கிரனுடன்கூடில் நரையான் வலமாகும் சனியுடன் கூடியிருக்கில் இடது பக்கத்தில் கௌளி சுத்தமுண்டாகும், லக்கினத்திற்கு 5-8-ல் சுக்கிரனிருந்தால் காடை இடமாகும். 3, 7, 10-ல் சந்திரனிருந்தால் கடமாகும். 9-ல் குரு இருந்தால் வலியனிடமாகும் கேந்திர திரிகோணங்களில் புதனிருந்தால் இரட்டை பிராமணர் எதிர்ப்படுவர். அவர் செவ்வாயோடு கூடியிருக்கில் மாமிசகண்டம் எதிராகும் அவர் ராகுவுடன் கூடியிருந்தால், சாரை குறுக்காகும் லக்கினத்தில் கேது இருந்தால் சர்ப்பம் குறுக்கும் குரு சுக்கிரர் லக்கினத்திலிருந்தால் பால்குடம் எதிரில் வரும்.

(391) ஒற்றை பிராமணனைக் கண்டால் அவன் முகத்தில் மிருத்யு இருக்கிறான் இரண்டு பிராமணரைக் கண்டால் காரிய சித்தி.

ஸ்திரி யாத்திரை

(392) ஸ்த்ரீ யாத்திரையில் ஆடி புரட்டாசி மாசி இந்த 3 மாசங்களையும் புதன் வெள்ளி இந்த இரண்டு வாரங்களையும் பிரதமை உத்திரம் 3 தவிர்த்து மற்ற நாளிலும் நன்று.

(393) கேந்திர திரிகோணங்களில் சுப கிரகமிருந்தால் சுப சகுனங்களைச் செய்வர். ராகு கேது குஜ சனிகளிருந்தால் பூனை பாம்பு தும்மல் முதலிய அவசகுனங்களைச் செய்குவர்.

கோ யாத்திரை

(394) கேட்டை அசுவனி, மகம், மிருகசீர்டம், கார்த்திகை, முப்பூரங்கள், ரேவதி, சதையம், திருவோணம், விசாகம், பரணி, ரோகிணி இந்த நக்ஷத்திரங்களில் திங்கள் சனி வாரங்களில் ரிஷபம், தனுசு, மிதுனம், மேஷம், மீனம், மகரம் இவைகளில் அஷ்டம சுத்தியுண்டான லக்னத்தில் கோ யாத்திரை செய்யக் கடவன்.



ஜல யாத்திரை

(395) திருவோணம், அஸ்தம், மிருகசீர்ஷம், அனுஷம், சுவாதி ரேவதி, அசுவனி, அவிட்டம் இந்த 8 நட்சத்திரங்களும் ஜல யாத்திரைக்கு எடுத்தவை இதிலேயும் யாத்திரைக்கு முன் சொன்ன திதிவார லக்கினத்தையும் விசாரித்து வர்த்தகத்திற்கு ஓடம் கப்பல்கட்ட ஓட்டுவிக்க முகூர்த்தம் சொல்லக்கடவன். அனுஷத்தில் பிரஸ்தானம் செய்வித்து கேட்டைமுடிய ஊரில் தங்கி மூலம் பிரயாணப்படில் காரியசித்தி: சுபமான லக்னத்தில் யாத்திரை புறப்படவும் அந்த லக்னத்தில் பரஸ்தானமாவது செய்விக்கவும் அல்லது தனக்கு உபயோகமாகும் பொருளையாவது அனுப்பிவிட்டு பின்புதான் போகலாம், பரஸ்தானஞ் செய்த 3 நாளைக்குமேல் பிரயாணம் செய்யக்கூடாது.

ராஜனது யாத்திரை

(396) அஸ்தம், அசுவனி, 3 உத்திரங்கள் அவிட்டம், திருவோணம், கேட்டை, ரேவதி, சித்திரை, ரோகிணி, மிருகசீர்டம், இந்த நட்சத்திரங்களில் ரித்தை இல்லாத திதிகளில் பஞ்சம சுத்தியுண்டான ஸ்திர லக்னத்திலே திங்கள், புதன், வியாழன், வெள்ளி இவர்கள் வார லக்கினங்களில் ராஜாவானவன் தண்டு யாத்திரை புறப்படக் கடவன்.

யுத்தத்திற்கு யாத்திரை

(397) திருவாதிரை, கிருத்திகை, மகம் மூலம், பரணி முப்பூரம், சதையம், ஆயில்யம், சுவாதி, சித்திரை, அசுவனி இந்த நட்சத்திரங்களில் கிருஷ்ண பட்சத்தில், ஜயை, ரிக்தை, விஷ்டிகளில் செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு இவர்கள் வார லக்னமிசங்களில் யுத்தத்திற்கு புறப்பட்டால் சத்துருக்களையும் ஜயித்து இஷ்டகாமியத்தையும் பெறுவான்.

## திரும்பும் பிரயாணம்

(398) லக்னத்தில் சூரியனும் சந்திரனும் சென்றது ஹோரையாகில் வருஷம் பாகமாகில் மாதம், நவாம்சயாகில் தினம். இவ்வித மறிந்து திரும்பி வருங்காலம் சொல்லவும்.

(399) குரு, சந்திர சுக்கிரர் கேந்திரத்திலிருந்தால் யாத்திரை சென்றவன் ஒரு மாசத்தில் திரும்புவான். அந்த கேந்திர திரிகோண ஸ்தானங்கள் அவர்களுக்கு ஸ்வ க்ஷேத்திரமாகில் 15 நாளையில் திரும்பி வருவன், அந்த கேந்திரங்கள் ஸ்வக்ஷேத்திரமாய் மித்திரராலே பார்க்கப்பட்டால் 8 நாளில் திரும்பிவருவான்.

(400) லக்னத்திற்கு திரிகோணங்களில் பாபரிருந்தால் 9 நாளில் திரும்புவான், 11-மிடத்திலிருந்தால் 8 நாளையில் திரும்புவான், இவ்விதமிருந்து மித்திரரால் பார்க்கப்பட்டால் 10 நாளில் திரும்புவான், 11-ல் சூரியனிருந்தால் போனவிடத்தில் மித்திர லாபமுண்டு.

(401) வக்கிரத்தில் ஒன்னரை மாசத்தில் பலன். பராஜிதராகில் (தோல்வியுறில்) 20 நாளில் பலன். சத்துரு ஸ்தானத்திலிருந்தால் ஒரு மாசத்தில் பலன். நீசராகில் 8 மாசத்தில் பலனும் தருவர்.

(402) சந்திர சூரியர் நீசாஸ்தங்களிருக்கில் ஆறு மாதத்தில் அற்ப பலன். நீசராகாதபக்ஷத்தில் நற்பலனடைந்து க்ஷேமமாய் யாத்திரை சென்றவன் திரும்பி வருவான்.

(403) தன் கிரகம் நீசராகும் சமயம், தன் வாரம், தன் ஹோரை தன் அமிசங்களில் இருந்தால், யாத்திரையில் சுபமாகத் திரும்பிவரச் செய்வர், அப்படி இன்றி விபரீதமாகில் நிஷ்பலன் ஆகும்.

(404) லக்னத்திற் 7-ம் மிடத்தில் சந்திரன் சுக்கிரன் பலிஷ்டமா யிருந்தால் நடுவழியில் பலனடைந்து திரும்பி வருவான்.

(405) சுப கிரகங்கள் கேந்திர திரிகோணங்களில், அல்லது 2-11, அல்லது உச்ச ஸ்தானம் கேந்திர கோணமாயிருந்து அதிலிருந்தால், பாபகிரகங்கள் 3-6-11-ல் இருந்தால் யாத்திரை போனவனுக்குத் தனலாபத்தைத் தருவர். போனவன் சத்துருவை ஜயிப்பான், 1 மாதத்தில் வருவான்.

(406) லக்னத்திற்குக் கேந்திரத்தில் குரு சுக்கிரரிருந்தாலும் பூர்ண சந்திரனிருந்தாலும் பலத்துடன் 10 நாளில் திரும்பி வருவான்.



(407) வக்ரமில்லாமல் சனியும் புதனும் இருந்தாலும், அவர்களுக்கு மித்திர வீக்ஷணமிருந்தாலும் க்ஷேம லாபத்துடன் நல்ல வழியாக 21 நாளில் திரும்புவர்.

## யாத்திரைக்கு 21 (ஏகவிம்சதி,) மகா தோஷங்கள்

(408) (1) பஞ்சாங்க சுத்தியில்லாதது, (2) சந்திர தாரா பலமில்லாதது, (3) லக்கின தோஷம், (4) கிரகபல தோஷம், (5) சாத்வீக வேளை, (6) துர்முகூர்த்தம், (7) ஹோரை, (8) சந்திராவஸ்தை, (9) திரியம்பகம், (10) அடல பிரமணம், (11) பந்தாராகு, (12) சந்திர கண்டம், (13) லலாடம், (14) பரிசம், (15) தண்டம், (16) சகுனம், (17) சந்திரசூலை, (18) யாத்திரா பஞ்சகம், (19) யாத்திரா பணி, (20) குளிகன், (21) யோகினி, இந்த 27 தோஷங்களும் யாத்திரையில் நீக்கவேணும்.

### ரஜஸ், தமஸ், சாத்வீக வேளை

(409) வியாழன், திங்களுக்கு உதயகாலத்தில் 4 நாழிகை சாத்வீக வேளை. அதற்குமேல் 4 நாழிகை ராஜஸவேளை அதற்கு மேல் 4 நாழிகை தாமஸவேளை. இந்தப்படி திருப்பி எண்ணவும். செவ்வாய் வெள்ளி உதய காலத்தில் 4 நாழிகை ராஜஸம், மேல் 4 நாழிகை தாமஸம், மேல் 4 நாழிகை ஸாத்வீகம், ஞாயிறு சனி புதன்களுக்கு உதயத்தில் 4 நாழிகை தாமஸம், மேல் 4 நாழிகை ஸாத்வீகம் மேல் 4 நாழிகை ராஜஸம் இந்தப்படியே எண்ணி அறிந்து கொள்ளவும்.

(410) தனுசு, கடகம், மீனம், கன்னி, இந்த லக்னங்கள் சாத்வீக வேளையுடன் கூடினால், யாத்திரை செல்பவருக்கு மர்ணம். ரிஷபம், துலாம், விருச்சிகம், மேஷம், இவைகளில் ராஜஸம் கூடினால் அதில் யாத்திரை செல்பவருக்கு மரணம். மிதுனம், கும்பம், சிங்கம், மகரம், இவைகளுடன் தாமஸ வேளை கூடினால் அதில் யாத்திரை செல்பவருக்கு மரணம் உண்டாகும்.

### ஹோரை

(411) ஹோரையாவது $2\frac{1}{2}$ நாழிகை. அன்றைய் வாரத்திற்கு 5-வது வாரம் அன்றைய ஹோரை ஆகும். ஞாயிருக்கு உதய காலத்தில் வியாழன் ஹோரை, மேல் செவ்வாய், சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன், சனி, இந்த முறையே திரும்பிவரும்.

திங்களுக்கு உதயகாலத்தில் சுக்கிர ஹோரை, செவ்வாய்க்கு உதய காலத்தில் சனி ஹோரை, புதனுக்கு உதயத்தில் சூரிய ஹோரை, வியாழத்திற்கு உதயத்தில் சந்திர ஹோரை, வெள்ளிக்கு உதயத்தில் செவ்வாய் ஹோரை, சனிக்கு உதயத்தில் புத ஹோரை, இந்த முறையே பார்க்கவும்.

### ஹோரையின் பலன்

(412) குரு ஹோரை-பொருள் லாபம், குஜ ஹோரை-யுத்தம், சூரிய ஹோரை - மரணம், சுக்கிர ஹோரை - சோபனம், புதன் - சந்தோஷம், சந்திர ஹோரை - சவுக்கியம், சனி ஹோரை-கலகம், இம்முறைப்படி பலனறியவும்.

### குளிகன்

(413) குளிகனாவது $3\frac{3}{4}$ நாழிகை. ஞாயிறு $7\frac{1}{2}$ யாமம்-குளிகன், $5\frac{1}{2}$ யாமம்-யமகண்டன், $4\frac{1}{2}$ யாமம் அர்த்தப் பிரகான், $8\frac{1}{2}$ யாமம் காலன், இந்தப்படி எழுத்தை எண்ணி அந்தந்த வாரத்திற்கு 4-4 எழுத்தாக எண்ணி, குளிகன் யமகண்டன் அர்த்தப் பிரகூரன் காலன் இவைகளை அறியவும்.

### குளிகளில் செய்யும் காரியங்கள்

(414) தானியம் சேகரிக்க, தான்யக் கூடிலே தானியம் கொட்ட, எண்ணெயிட்டுக்கொள்ள, அறும்பு அறுக்க, கொள்ள, கொடுக்க; கண் திறக்க, ஆபரணம் பூண, கடன் தீர்க்க, யாகாரம் பஞ்செய்ய, கிரகப்பிரவேசம், கிராமப் பிரவேசம், ராஜ்ய பிரவேசம், ராஜாபிஷேகம் செய்ய, கந்தம்பூச, ஔடதம்கொள்ள, யானை-குதிரை முதலிய வாகனங்கள் ஏற, மந்திர உபதேசம் பெற, அபிசார ஹோமம் செய்ய, மகா தானஞ்செய்ய, வேதாரம்பஞ் செய்ய, தூண்கள், வாசற்கால், யூபஸ்தம்பம் இவைகள் நாட்ட, யானை குதிரை கட்ட, இவைகளெல்லாம் குளிகனில் செய்ய உத்தமமென்றறிக. சுபத்தை விரும்புகிறவன் யமகண்டத்தில் எல்லா காரியங்களையும் விலக்கக் கடவன்.

### நக்ஷத்திர விஷகடிகை அல்லது தியாஜ்யம்

(415) விஷ நாழிகை கிருத்திகைக்கு-30 நாழிகை, ரோகிணி-40, மிருகசீர்டத்திற்கு-14, திருவாதிரைக்கு-21, புனர்பூசத்திற்கு-30, பூசத்திற்கு-20, ஆயில்யத்திற்கு-32, மகம்-30, பூரம்-20, உத்திரம்-18, அஸ்தம்-21, சித்திரை-20, சுவாதி-14, விசாகம்-14, அனுடம்-10, கேட்டை-14, மூலம்-20 க்கு மேலும், 56 க்கு மேலும், பூராடம்-24, உத்திராடம்-20, திருவோணம்-10, அவிட்டம்-10, சதையம்-18, பூரட்டாதி-16, உத்திரட்டாதி-24, ரேவதி-30, அசுவனி-50, பரணி-24, இந்த நக்ஷத்திரங்களுக்கு மேற்சொன்ன நாழிகைக்குமேல் தியாஜ்ஜியம் வரும்.



### விஷகடிகையில் விலக்க வேண்டியவை

(416) ஸ்திரீ சம்யோகம், போஜனம், தேவபூஜை, எண்ணெயிட்டுக்கொள்ளல், க்ஷௌரம், உபநயனம், பிரயாணம், அக்னி சந்தானம், புதியவை ஆரம்பிக்க, மரவேலை, இவைகளை தியாஜ்ய காலத்தில் விலக்கக் கடவன்.

### திதி விஷநாழிகை அல்லது தியாஜ்யம்

(417) சுக்கில பக்ஷத்துப் பிரதமை முதலாக திதி விஷநாழிகைகள் பிரதமை-24 க்கு மேல், துவிதியை-12 க்கு மேல், திருதியை-55, சதுர்த்தி-55, பஞ்சமி-54, ஷஷ்டி-25, சப்தமி-33, அஷ்டமி-10, நவமி-21, தசமி-7, ஏகாதசி-9, துவாதசி-10, திரயோதசி-30, சதுர்தசி-10, பூர்ணிமை அமாவாசை இவைகளுக்கு-32, மேற்சொன்ன நாழிகைகளுக்கு மேல் 4 நாழிகை விஷகடிகை என்றறிக.

### வாரத் தியாக்கியம்

(418) ஞாயிறுக்கு-32 க்கு மேல், திங்கள்-24 க்கு மேல், செவ்வாய்-51 க்கு மேல், புதன்-41 க்கு மேல், வியாழன்-31 க்கு மேல், வெள்ளி-21 க்கு மேல், சனி-14 க்கு மேல், 4 நாழிகை விஷ நாழிகை ஆகும்.

### வேறு மதம்

(419) புதனுக்கும் சனிக்கும் ஆதியில் 4 நாழிகை விஷ நாழிகையும், திங்களுக்கும் வெள்ளிக்கும் நடுவில் 4 நாழிகை விஷ நாழிகை என்றும், செவ்வாய்-வியாழன் - ஞாயிறுக்கு முடிவில் 4 நாழிகை விஷநாழிகை என்றும் சிலர் கொள்கை.

### தியாஜ்ய பலன்

(420) எல்லா விஷகடிகைகளுக்கும் நாழிகை பலன்:—முதல் நாழிகை கர்ம நாசம், 2-வது நாழிகை கர்த்துரு நாசம், 3-வது நாழிகை சகல நாசம், 4-வது நாழிகை குலநாசமுமாகும்.

## ராசிகளின் விஷம்

(421) மேஷம், ரிஷபம், தனுசு, கன்னி, இந்த 4 ராசிக்கும் ஆதியில் புஜங்கம் என்னும் (விஷம்) ¾ நாழிகை. மீனம், மகரம், கடகம், விருச்சிகம், இந்த 4 ராசிகளுக்கும் முடிவில் வராகம் என்னும் விஷம் ¾ நாழிகை, துலாம், மிதுனம், கும்பம், சிங்கம் இந்த 4-க்கும் நடுபாகத்தில் கிருத்திரம் என்னும் விஷம் ¾ நாழிகை, இதுகளில் காரியங்கள் செய்யில் சர்வ நாசமாகும்.

## திதி சூலை

(422) பிரதமை நவமி கிழக்கே திதி சூலை, துவிதியை தசமி வடக்கே திதி சூலம், ஏகாதசி அக்னி திசை, சதுர்த்தி, துவாதசி, நிருதி திசை, பஞ்சமி திரயோதசி தெற்கு, ஷஷ்டி சதுர்தசி மேற்கே சூலை, சப்தமி பௌர்ணமி வாயுதிசையில் சூலை, அஷ்டமி அமாவாசை ஈசான திசையில் சூலை, என்றறியவும், இந்த சூலையில் யாத்திரை போனால் மரணம் நேரிடும்.

## வார சூலை

(423) திங்கள் சனி கிழக்கே சூலை, செவ்வாய் புதன் வடக்கே சூலை, ஞாயிறு வெள்ளி மேற்கே சூலை, வியாழன் தெற்கே சூலை, என்றறியவும்.

## வாரசூலை அபவாதம்

(424) வியாழனுக்கு 22 நாழிகை தோஷம், புதனுக்கும் செவ்வாய்க்கும் 12 நாழிகை தோஷம், வெள்ளிக்கும் ஞாயிறுக்கும் 15 நாழிகை, சனிக்கும் திங்களுக்கும் 8 நாழிகை தள்ளி மீதி நாழிகை தோஷமில்லை.

## வார பலன்

(425) செவ்வாயில் கிழக்கிலும், திங்கள் சனியில் தெற்கிலும், புதன் வியாழன் மேற்கிலும், ஞாயிறும் வெள்ளியும் வடக்கிலும், பிரயாணஞ் செய்ய, காரியம் சித்தியும் அர்த்த லாபமும் என்றறியவும்.

## நக்ஷத்திர சூலம்

(426) கேட்டையும் அவிட்டமும் கிழக்கில் சூலை, திருவோணம் அசுவனி தெற்கே சூலம், ரோகிணி பூசம், மேற்கு, 3 உத்



திரம் அஸ்தம் வடக்கே சூலை, இந்த நக்ஷத்திர சூலையில் யாத்திரை செய்தல் மரணபய முண்டாகும்.

## நட்சத்திர சூலை அபவாதம்

(427) கிருத்திகை சூல-13 நாழிகையும், பரணிக்கு-7 நாழிகையும், மகத்திற்கு-11 நாழிகையும், முப்பூரத்திற்கு-16 நாழிகையும் தோஷம், மேற்சொன்ன நக்ஷத்திரங்களுக்கு மேற்சொன்ன நாழிகை கழித்து பிரயாணஞ் செய்யில் தோஷமில்லை.

(428) கேட்டையும் திருவோணமும் கிழக்கு சூலை, மகமும் அசுவனியும் தெற்கே சூலை, ரோகிணியும் பூசமும் மேற்கே சூலை, அஸ்தம், 3 உத்திரம் வடக்கே சூலை, இந்த சூலையில் யாத்திரை செய்யக்கூடாது.

(429) 3 உத்திரங்களில் வடக்கே யாத்திரை சென்றால் அவன் பிரமாவானாலும் திரும்பி வரமாட்டான்.

## சந்திர கண்டகம்

(430) மேஷமும் ரிஷபமும் மேற்கு, மிதுனம் வாயு, கடகம் சிங்கம் வடக்கு, கன்னி ஈசானம், துலாம் விருச்சிகம் கிழக்கு, தனுசு அக்னி, மகரம் கும்பம் தெற்கு, மீனம் நிருதி, இவ்விதம் கண்டறிந்து சந்திரன் எந்த ராசியிலிருக்கிறாரோ அந்த ராசி திக்கில் யாத்திரை செய்யக்கூடாது இதுதான் சந்திர கண்டகம்.

## மஹா சூலை

(431) கிருத்திகை முதல் அபிஜித்தும் கூட்டி 28 நக்ஷத்திரங்களையும்-கிழக்கு முதல் 7-7 ஆக வைத்து எந்த திக்கிலே எந்த நக்ஷத்திரமிருக்கிறதோ அந்த நக்ஷத்திரத்தில் அத்திசையில் யாத்திரை செய்யக்கூடாது. அது மகா சூலை என்றறியவும். அதில் யாத்திரை சென்றால் மனஸ்தாபத்தையும் கெடுதலையுஞ் செய்யும்.

## அடல பிரமணம்

(432) சூரியனிருக்கிற நக்ஷத்திரம் முதல் சந்திரனிருக்கும் நக்ஷத்திரம் வரையில் அபிஜித்தும் கூட்டி எண்ணி 7-ல் கழித்தால், 2-6 அடலம் சுற்றித்திரிதல், 3-7-பிரமணம் அடிபடும், 1-5-4 அதிக லாபந்தரும்; இதற்கு அடல பிரமண மென்று பெயர். அடலம்-2 நாழிகை, பிரமணம் 5 நாழி போக மற்றவை சுபம்.

### யாத்திரை பஞ்சகம்

(433) பிரயாண தினத்தில் திதி, வாரம், நக்ஷத்திரம், லக்னம், இந்த 4-ம் கூட்டி, அத்தொகையை 15-ஆல் பெருக்கி 9-ஆல் வகுக்க 5 மிகுந்தால், ரோக பஞ்சம். 12-ஆல் பெருக்கி 9-ஆல் கழிக்க 5 மிகுந்தால் அக்னி பஞ்சகம். 10-ஆல் பெருக்கி 9 ஆல் கழிக்க 5 மிகுந்தால் சோரபஞ்சகம். 4-ஆல் பெருக்கி 9-ஆல் வகுக்க 5 மிகுந்தால் மிருத்யுபஞ்சகம். ரோக பஞ்சகமாகில்-வியாதி, அக்னி-அக்னிபயம், ராஜ பஞ்சகம்-ரரஜ்யம், சோர பஞ்சகம்-திருடர்பயம், மிருத்யு பஞ்சகம்-மரணபயம், இவைகளை யாத்திரையில் நீக்கவேண்டும்.

### மிருத நட்சத்திரங்கள்

(434) சூரியன் விட்டது, இருப்பது, வரப்போவது, இந்த 3 நக்ஷத்திரங்கள்-மிருதங்கள் (மரித்தவை.) மேல் 7 நக்ஷத்திரங்கள் அர்த்த (பாதி) ஜீவன், மேல் 1 நக்ஷத்திரம் மிருதம், மேல் 8 நக்ஷத்திரங்கள் பூர்ண ஜீவன், மேல் 1 நக்ஷத்திரம் மிருதம், மேல் 7 நக்ஷத்திரங்கள் அர்த்த (பாதி) ஜீவன் என்றறியவும்.

### 1 கண், 2 கண், குருட்டு நட்சத்திரங்கள்

(435) ஞாயிறு முதல் அன்றைய வாரம் வரையில் எண்ணி அதை 3-ஆல் பெருக்கி அசுவனி முதல் அன்றைய நக்ஷத்திரம் வரை தள்ளி மிகுந்ததில் 9 நக்ஷத்திரங்கள் ஒற்றைக்கண், 12 இரட்டைக்கண் மற்ற 6 நக்ஷத்திரங்கள் குருடு என்றறியவும்.

### 1 கண், 2 கண், குரு, குருட்டுத் திதிகள்

(436) துதியை திருதியை பஞ்சமி, சப்தமி, திரயோதசி, சதுர்த்தி, இந்த 6 திதிகள் இரட்டைக்கண் பிரதமை இரண்டு பருவங்கள் அஷ்டமி ஏகாதசி தசமி துவாதசி இந்த 7 திதிகள் ஒற்றைக்கண். சதுர்த்தி ஷஷ்டி நவமி இந்த 3 திதிகள் குருடு.

### ஊர்த்துவோதய பிருஷ்டோதய ராசிகள்

(437) மிதுனம், விருச்சிகம், கும்பம், சிங்கம், கன்னி துலாம் இந்த 6 ராசிகள் ஊர்த்வோதய ராசிகள் மீனம் உபயோதய ராசி. மேஷம், ரிஷபம், கடகம், தனுசு, மகரம் இந்த 5-ம் பிரஷ்டோதய ராசி. இந்த பிரஷ்டோதய ராசிகளில் சுபகருமங்கள் நீக்கவும்.



### லக்கின தியாஜ்யம்

(438) லக்னத்திற்கு முதலில் தியாச்சியம் வந்தால் அதை விட்டு மேல் பாகத்தில் சுபகருமங்களைச் செய்யவும். முடிவில் தியாச்சியம் வந்தால் அந்த லக்னம் எல்லாம் விலக்கவும்.

### பகல் குருடு, ராக் குருடு ராசிகள்

(439) மேஷம், ரிஷபம், சிங்கம் இந்த 3-ம் பகல் குருடு, மிதுனம் கடகம் கன்னி இந்த 3-ம் இராக் குருடு.

(440) அந்த (குருடு) ராசியில் காரியநாசம், காணங்களிலும் அப்படியே, இரண்டு கண்களுள்ள ராசிகளில் சுபம் செய்யலாம். சுபப்பல முண்டாகில் ஒற்றைக் கண்ணிலும் சுப கருமங்கள் செய்யலாம்.

(441) துலாம் விருச்சிகம் முற்பகலில் செவிடு, தனுசு, மகரம் பிற்பகலில் செவிடு, கன்னி கடகம் நடுப்பகலில் குருடு, கும்பமும் மீனமும் முன் மாலையிலும் பின் மாலையிலும் நொண்டியாகும்.

(442) குருடு காரிய நாசம், செவிடு அர்த்த (பொருள்) நாசம் நொண்டி ஆயுள் நாசம் என்றறியவும்.

### யோகினி

(443) சுக்லபக்ஷ பிரதமை முதல் முறையே எண்ணி கிழக்கு, வடக்கு, அக்கினி, ராக்ஷஸ (நிருதி) தெற்கு, மேற்கு, வாயு, ஈசான்யம், ஆகாயம், பூமி இவ்விதம் தசமி வரையில் எண்ணி மருபடி சுக்லபக்ஷ ஏகாதசி முதல் கிருஷ்ணபக்ஷத்து பஞ்சமி வரையிலும் மறுபடி கிருஷ்ணபக்ஷ ஷஷ்டி முதல் அமாவாசை வரையிலும் மேற்சொன்ன 10 திசைகளையே கணக்கிட்டு அறியவும்.

(444) வாரத்துக்கும் உதயாதியாக $3\frac{3}{4}$ நாழிகை-வீதம் இந்த 8 திசைகளுக்கும் சரயோகினி இருக்கும். அந்த சரயோகினி இருக்கும் வேளையில் யாரும் அந்த திக்கில் போகலாகாது.

### ஏகார்க்களை

(445) நெடுக்காக 1 கோடும் குறுக்காக 13 கோடுகளும் கீறி ஒற்றை ரேகை முனையிலிருந்து பிரதக்ஷிணமாக எண்ணுகிற கிரமம் வியாகாத யோகமானல் புனர்ப்பூசம் முதல் எண்ணவும் சூலமானல் மிருகசீர்ஷம் முதலும், பரிகமானல் மகம் முதலும்

வியதீபாதமானால் ஆயில்யம் முதலும், விஷ்கம்பமானால் அசுவனி முதலும் கண்டமானால் மூலம். முதலும் அதிகண்டமானால் அனுஷம் முதலும், வஜ்ரமானால் பூசம் முதலும், வைதிருதியானால் சித்திரை முதலும், இவ்விதம் எண்ணி வரும்போது சூரியனும் சந்திரனும் ஒரே சோடில் கூடினால் இது ஏகார்க்களை இதில் சுப கருமங்கள் செய்யலாகாது விக்கவும்.

(446) அந்த ஏகார்க்களைக்கு பகலில் தோஷமுண்டு, இரவில் தோஷமில்லை.

(447) நெடுக்கே ஒரு ரேகையும் குறுக்கே 13 ரேகைகளும் வரைந்திடில் ஈச்சம் இலைபோல் ரேகைகளிருக்கும், இதில் நுனியிலிருந்து வியர்காதம் முதலியவைகளுக்கு புனர்ப்பூசம் முதலாக எண்ணும்போறு ஒரு கோட்டில் சூரியனும் சந்திரனும் கூடில் அது ஏகார்களை.

## தத்தம், ஜ்வாலை, தூமம்

(448) பாபகிரகங்கள் விட்ட நக்ஷத்திரமும் விட்ட ராசியும் தக்தம் (எறிந்து) எனப்படும், நிற்கும் ராசியும் நக்ஷத்திரமும் ஜ்வாலை எனப்படும் மேலவர்போகும் ராசியும் நக்ஷத்திரமும் தூபம் (புகை) எனப்படும். இந்த 3-ம மகா தோஷங்கள் இவைகளில் சுப கர்ம்ங்களையும் தவிர்க்கக் கடவன்.

(449) சந்திரன் அந்த லக்கினத்திற்கு திரிகோணத்திலாவது வர்க்கோத்தமத்திலாவது மித்திர ஸ்தானத்திலாவது இருந்தாலும் சுபரால் பார்க்கப்பட்டாலும் தக்த, ஜ்வாலா, தூம தோஷங்களைப் போக்கும். இந்த தோஷம் லக்னங்களைக் காட்டிலும் நக்ஷத்திரங்களுக்கு அதிகம்.

## மாச சூன்ய தோஷம்

(450) சித்திரை மாசத்தில் அஷ்டமி, ஏகாதசி, ரோகிணி, அசுவனியும் கும்பம் சூன்யங்கள், வைகாசியில் துவாதசி, மீனம், சுவாதி, சித்திரை உத்திராடம் இவை சூன்யங்கள், ஆனியில் புனர்பூசம் ரிஷபம் திரயோதசி இவை சூன்னியங்கள் ஆடியில் மிதுனம் ஷஷ்டி அவிட்டம் பூரம் இவை சூனியங்கள், ஆவணியில் மேஷம் 2 பருவங்கள் பூராடம் இவை சூன்யங்கள், புரட்டாசியில் ரேவதி, சதையம் கன்னி பூரட்டாதி ஸப்தமி இவை சூன்யங்கள் ஐப்பசில் நவமி உத்திரட்டாதி விருச்சிகம் இவை சூனியங்கள் கார்த்திகையில் பஞ்சமி துலாம் மகரம்-பூசம், மிருகசீர்ஷம் கிருத்திகை இவை சூனியங்கள், மார்கழியில் அனுஷம் பூரட்டாதி விசாகம் துவிதியை நவமி இவை சூனியங்கள், தையில், பிரதமை அஸ்தம் ஆயில்யம் திருவாதிரை கடகம் இவை சூனியங்கள் மாசியில் திருவோணம் மூலம், சதுர்தசி தசமி மிருகசீர்ஷம் இவை சூனியங்கள், பங்குனியில் பரணி கேட்டை சிங்கம் சதுர்தசி இவை சூனியங்கள், இந்த மாதங்களில் இவைகளுக்குச் சொன்ன திதி நக்ஷத்திரங்களில் சுப கருமங்களை தவிர்க்கக் கடவன்.



## ஆஷாட சுக்கில பஞ்சமி வார பலன்

(451) ஆடிமாதத்தில் சுக்ல பக்ஷத்தில் பஞ்சமி ஞாயற்றுக் கிழமையுடன் கூடில் மழையில்லை, திங்களாகில் பெருமழை, செவ்வாயாகில் யுத்தமாம், புதனாகில் காற்று, வியாழனாகில் சுபிக்ஷம், வெள்ளியாகில் பெரு வெள்ளம் சனியாகில் கலகம் அனாவிருஷ்டி என்றறியவும்.

## ஆடி உத்திராடக் காற்று

(452) ஆடிமாதம் பௌர்ணமியில் உதயகாலத்தில் உத்திராடக் காற்றுபார்க்கும் கிரமம். கீழ்காற்று நெல் விளையும், அக்கினி மூலைகாற்று கிரை விளையும், தென்காற்று அதிக நெல், நிருதி வரகு, மேற்கு நெல் வாயு சாவி, வடக்கு அதிகமழை, ஈசானம் மழையில்லை.

## ஆஷாட ரோகிணி குறி

(453) ஆடி மாஸத்தில் ரோகிணியில் சாயங்காலத்தில் ஊர் மாட்டுக்கு முன்பு சிவந்த நிறமுள்ள பசு வந்தால் நல்ல மழையுண்டு.

## ஆஷாட கிருஷ்ண துவாதசி மழைக் குறி

(454) ஆடிமாசத்தில் கிருஷ்ணபக்ஷ துவாதசியில் பகலில் மந்தாரமானாலும் இரவில் மின்னினாலும் மழையுண்டு.

## ஆஷாட பௌர்ணமி மழைக் குறி

(455) ஆடிமாத பௌர்ணமியில் 10 நாழிகைக்குள் மேகம் கிளம்பி சூரியனை மறைத்தால் அற்பசியில் மழையுண்டு நடு 10

நாழிகையில் மறைத்தால் கார்த்திகை மாதத்தில் மழையுண்டு, 20 நாழிகைக்குமேல் மறைத்தால் மார்கழி மாதத்திலே மழையுண்டு.

## சுவாதி பார்த்தல்

(456) ஆடிமாதத்தில் பூர்வபக்ஷ நவமியுடன் ஸ்வாதிகூடினுல் காற்றுமில்லை மழையுமில்லை பஞ்சமென்றறியவும்.

## பெருங் காற்று கிரக யோகம்

(457) ஒரு லக்னத்தில் சந்திரனும் புதனும் சுக்கிரனும் குஜனுமிருக்க அவர்களுக்கு 12-ல் சூரியனும் 7-ல் சனியும் இருந்தால் பெருங் காற்றடிக்கும்.

(458) சூரியனும் புதனும் சுக்கிரனும் சந்திரனும்கூடி தனுசிலிருக்க, விருச்சிகத்தில் செவ்வாயிருந்தால் பெருங்காற்று யோகம்.

(459) கார்த்திகை மாஸத்தில் முதலில் அமாவாஸையுடன் ஞாயிறு செவ்வாய் சனிகூடி சுவாதியில் சுக்கிரனும் புதனும் குருவு மிருந்தால் பெருங் காற்றினுலாவது பெரு வெள்ளத்தாலாவது மனிதர் முதலிய சகல பிராணிகளும் மரணமடைவர்.

(460) சுக்கிரனும் புதனும் குருவும் ஒரே ராசியிலிருக்க, 2-ல் சூரியனிருந்தால் பெருங் காற்றுலாகிலும், பஞ்சத்தாலாகிலும் உலகத்திற்குப் பெருங் கெடுதி உண்டாகும்.

## கிரகண பலன்

(461) பங்குனி புரட்டாசி மாசங்களில் சந்திர சூரிய கிரகணம் பிடித்தால் பெரு மழைவும் பெருவெள்ளமு முண்டாகும்.

## வக்கிர நிர்ணயம்

(462) சனிக்கும் குருவுக்கும் குஜனுக்கும் 5-ஆ மிடத்தில் சூரியன் வந்தால் வக்ரம் 9-ஆ மிடத்தில் வக்ர நிவர்த்தி.

(463) ஒரு வருஷத்தில் குரு 3 ராசிகளில் பிரவேசித்தால் பூமியில் 7 கோடி பிணம் விழும்.

(464) எல்லா கிரகங்களும் அதிசாரத்திலேயும் வக்கிரத்திலேயும் அந்தந்த ராசியில் இருக்கும் பலன், குருவுக்கு முந்திய ராசிபலன்.



(465) ஸ்வாதி விசாகம் அஸ்தம் ரேவதிமூலம் மகம் உத்திரம் இந்த 7 நக்ஷத்திரங்களில் செவ்வாய் இருக்கும் வரையில் மழை இல்லை.

(466) செவ்வாயும் சனியும் ஒரே ராசியிலிருந்தாலும் ஒருவருக்கொருவர் 7-லிருந்தாலும் ஒருவருக்கு 3-5-6-ம் மிடத்தில் மற்றவரிருந்தாலும் அவ்வருஷம் அவ்வளவும் கண்ட வருஷமும் (மழை) பஞ்சமும் ஜனங்களுக்கு உண்டாகும் பயமுமுண்டாகும்.

(467) வால் நக்ஷத்திரம் கிழக்கே கண்டால் ராஜ்யத்திற்கு தோஷம், மேற்கே கண்டால் சுபிக்ஷம்.

(468) உத்திராயணத்தில் வால் நக்ஷத்திரம் காணப்பட்டால் மனித வர்க்கத்திற்கு பீடை, தக்ஷிணுயனத்தில் காணப்பட்டால் பிராணி (பசு முதலிய) வர்க்கத்திற்குப் பீடை.

(469) இரவில் வால் நக்ஷத்திரம் தோன்றி சீக்கிரம் மறைந்து போனுல் சுபிக்ஷம், அதிநேரம் இருந்தால் பஞ்சம்.

(470) யாதொரு சமயம் சனியாவது செவ்வாயாவது அல்லது இருவருமாவது குருவுடன்கூடி ஒரு ராசியிலிருந்தாலும் ஸமஸப்தமம் (ஒருவர்க்கொருவர் 7) ஆக இருந்தாலும் பூமியை இமயபர்வத முதல் இலங்கைவரைப் மூன்றில் ஒரு பாகம் மிச்சமுள்ளதாக செய்யும் இரண்டு பாகம் அழியும்.

(471) குரு-மகரம், மிதுனம்-சிம்மம், இவைகளிருந்தால் யானை குதிரை ஆடுமாடுகள் நாசமும், பயிர் முதலிய நாசமும், யுத்தமுமுண்டாகும். அக்னி பயம் ஜனமரணம் விருக்ஷநாசம் அரசருக்குப் படை பயம் திருடர் பயம் இவைகளெல்லா முண்டாகும்.

(472) மேஷம் தனுசு மீனம் ரிஷபம் விருச்சிகம் சிம்மம் இவைகளில் சனியும் செவ்வாயும்கூடி வக்கரித்தால் புவி முழுதும் யானை, குதிரை, மனிதர் பசு இவையெல்லாம் மூன்றில் இரண்டு பங்கு அழிந்து மூன்றிலொரு பங்கு தப்பும்.

(473) மேஷம்-ரிஷபம், துலாம்-கும்பம், தனுசு-மீனம், மிதுனம் இவைகளில் குரு, சனி செவ்வாய் கூடில் பூமி முழுவதும், பஞ்சமும், ஜ்வரம் முதலிய பயமும் மரண பயமும் ராஜாவுக்கு நாசமும் நேரிடும்.

(474) ஒரே ராசியில் சனியும் பாம்பும் கூடியிருக்கில் பூமி முழுவதும் யுத்தத்தில் ரத்தத்தால் நனையச் செய்வர்.

(475) ஒரு ராசியில் 5 கிரகங்கள் கூடினுல் பஞ்சம், 6 கிரகங்கள் கூடில் ராஜபயம், 7 கிரகங்கள்கூடில் உலகப் பிரளயம்.

(476) துலாம் முதல் மேஷம் வரையிலாவது மேஷம் முதல் துலாம் வரையிலுமாவது அடவில் கிரகங்களிருந்தால் அதற்கு கிரகமாலை என்று பெயர், அக்கிரகமாலை கூடில் உலகிற்கு அழிவு ஏற்படும். அரச நாசத்தைச்செய்யும் அந்த பலன் கௌட, மாகத தேசங்களுக்கு மாத்திரந்தான், மற்ற தேசங்களுக்கில்லை.

(477) ஒரு நக்ஷத்திரத்தில் குரு சுக்கிரர் இருந்தால் சதுரங்க பலத்துடன் அரசனுக்குப் பீடையைச் செய்யும், உலகிற்கும் பயத்தைத் தரும்.

(478) சுக்கிரனும் செவ்வாயும் கூடியிருப்பினும் ஆறுகளில் எதிராக வெள்ள மோடினுலும் கிணர் வாவி தடாகம் முதலிய ஜலங்களில் வித்தியாச மேற்படினும் ஜனங்களுக்கு பயமும் அரசனுக்குப் பயத்தையுந் தரும்.

(479) தை மாசியில் பங்குனியில் புதன் பிரகாசமானுலும் பசு முதலிய பிராணிகள் அழிவு, சித்திரை வையாசி ஆனியிலாகில் பஞ்சம், ஆடி ஆவணி புரட்டாசியாகில் அதிக மழை அற்பசி கார்த்திகை மார்கழியாகில் சுபிக்ஷம்.

(480) வெள்ளிடி குரைக்கொள்ளி ஆகாய வெளிச்சம் பூமி அதிர்ச்சி கந்தர்வநகரம் காணல் தூமகேது (வால் நக்ஷத்திரம்) கிரக வக்கிரம் சூரிய பூர்ண கிராஸம் இவைகள் தோன்றிடில் துர்பிக்ஷமும் வியாதியும் பூபதி நாசத்தையும் செய்யும்.

(481) சூரியனுக்கு பிரதி சூரியனுல் தெற்கு காற்று, வடக்கு கலகம், இருபக்கமும் மழை, மேலே ராஜபயம், கீழே ஜனஹானி.

(482) இரவில் இந்திர தனுசு இட்டால் முன்மாலையில் ஜன நாசம், பின் மாலையில் தானிய நாசம், நடு இரவில் ராஜபயம்.

(483) இரவில் கிழக்கு மேற்கு இரண்டு திசைகளிலும் தனுசு இட்டாலும் ஒரே திசையிலிட்டாலும் பூபதி நாசம்.

(484) மழை இல்லாத காலத்தில் பகலில் கிழக்கில் இந்திர தனுசு தோன்றிடில் மழையுண்டு, மழையில் கிழக்கே வில் தோன்றில் மழைவிடும், மேற்கே வில் காணில் சர்வ காலமும் மழை உண்டாகும்.



(485) வால் மீன், வால் தவளை வெள்ளைக் காகம் இரவில் இந்திர தனுசு இவைகளைக் கண்டால் அந்த தேசத்தைவிடக் கடவன்.

(486) இரவில் கிழக்கே வில் விட்டால் பூபதி நாசம், தெற்கே சேனதிபதி நாசம், மேற்கே ராஜாவுக்கு தோஷம், வடக்கே மந்திரிக்கு தோஷம்.

(487) முதல் யாமத்தில் சூரிய மண்டலமிட்டால் ராஜாக்களுக்கு பயம், இரண்டாஞ் சாமத்திலிட்டால் அதிவிருஷ்டி, மூன்றாஞ் சாமத்திலிட்டால் மகா யுத்தமுண்டு, நான்காஞ் சாமத்திலிட்டால் எல்லா லோகங்களுக்கும் பயம்.

(488) சனி-மேஷம், ரிஷபம்-தனுசு, விருச்சிகம்-மீனம், சிம்மம் இவைகளின் அந்தங்களில் குருவோடாகிலும் குஜனேடாகிலும் கூடி இருக்குமளவும் தேசங்களுக்கு பஞ்சம், பீடை, ராஜ மரணம், பசிபயம், உண்டாகி நாடெல்லாம் காடாக மாறிவிடும்.

## மகோதயம் அர்த்தோதயம்

(489) புஷ்ய மாதத்திலாவது மாக மாசத்திலாவது அமாவாசை வியதீபாதம் சிரவணம் திங்கள்கிழமை அல்லது புதன் கிழமை உதயகாலத்தில் கூடில் மகோதயம், ஞாயிறுகூடில் அர்த்தோதயம்.

## மழை லக்ஷணம்

(490) ஆவணி மாதப்பிறப்பு தூறினுல் சாதாரணமாய் மழையில்லை, ஆடி மாதத்தில் மழையுண்டு, புரட்டாசி மாதப்பிறப்பில் தூறினுல் மழையுண்டு, காலையில் தூத்தலும், நடுப்பகலில் மந்தாரமும் இரவில் நிர்மலமாயும் இருந்தால் மழை தாமஸம்.

(491) மிருக சீர்ஷத்தில் சூரியன் வந்தால் அப்போது மழை தூறினுல் அந்த நக்ஷத்திரத்தில் இருக்குமளவும் மழையுண்டு. அன்று முதல் 5 நாள் தூறினுல் ஆயில்யமளவும் என்றறியவும். மகத்தில் சூரியன் வந்தநாள் முதல் ஆகாயம் அதிர்ந்தால் அதற்கு சிம்ம முழக்கமென்று பெயர். அன்று முதல் 5 நாளும் இடித்தால் சித்திரை யளவும் மழையுண்டு, ஸ்வாதியில் வந்தநாள் மின்னி

னால் அதற்கு சோதிமின்னல் என்று பெயர் அன்று முதல் 5 நாள் மின்னிடில் மூலமளவும் மழையுண்டு.

(492) மேகம் தெற்கடைந்தாலும் கீழ் காற்றடித்தாலும் வடக்கே மின்னினாலும் மேற்கே வில் விட்டாலும் தப்பாமல் மழையுண்டு.

### பாநுமத்திமம், புத சுக்கிர சாமீப்பியம்

(493) புத சுக்கிர சாமீப்பியமாகில் அதிக மழை அவர்கள் நடுவில் சூரியனிருந்தால் பானுமத்திம மென்று பெயர். அப்போது மழை இல்லை. கடலை நிகர்த்த குளமும் வற்றும்.

(494) புத சுக்ர ஸமீப்பியம் அசுவனி முதலாக 3-3-3-7-9-2 லே பலம், முதல் மூன்றில் அதிவிருஷ்டி இரண்டாவது மூன்றில் அனுவிருஷ்டி மூன்றாவது மூன்றில் ஸுவிருஷ்டி 7-க் குள்ளாகில் பிரளய வருஷம் (மழை), அதற்குமேல் 9-க்குள் மஹாக்ஷேமம் மழையில்லை, அதற்குமேல் இரண்டுக்குள் ஸுபிட்சம்.

(495) மேற்கே மக பஞ்சகத்திலும் கிழக்கே சுவாதித்திரயத்திலு மிருந்தால் அதிக மழையில்லை. கிழக்கே மக பஞ்சகத்திலும் மேற்கே ஸ்வாதி திரயத்திலும் இருந்தால் அதிக மழையுண்டு.

(496) ஆடி முதல் பூர்வ பட்சத்திலே சுவாதியும் நவமியும் கூடிய நாளில் மழை காற்றில்லாவிடில் அந்த வருஷம் மழையில்லை.

(497) மீனம், கடகம், மகரம், ரிஷபம், துலாம் விருச்சிகம் இவைகள் ஜல ராசிகள். இந்த ஜல ராசிக்காரர்களுக்கெல்லாம் எருமாடு விருத்திவரும் கோசாரம் நல்லதான சமயத்தில் முந்தி பயிர் செய்யக் கடவன்.

(498) மேஷம் முதல் ஒத்தைப்பட்ட மாதப்பிறப்பில் தூரினால் அம்மாதத்தில் மழை இல்லை ரிஷபம் முதல் இரட்டித்த மாதப்பிறப்பில் தூரிடில் அம்மாதத்தில் மழையுண்டு என்றறியவும்.

(499) கற்பிணி பெயரெழுத்தை எண்ணி அத்துடன் 25 கூட்டி ஒண்பதில் கழிக்க இரட்டை எண்ணுகில் பெண் என்றும் ஒற்றை எண்ணுகில் பிள்ளை என்றும் சொல்லவும்.



(500) சந்திரன் சுக்லபக்ஷத்தில் ஸ்வக்ஷேத்திரத்திலாகிலும் ஜலராசியிலாகிலும் ஸ்வக்ஷேத்திரத்திற்கு கேந்திரங்களிலாகிலும் இருந்து சுப கிரகங்களால் பார்க்கப்பட்டாலும் சுக்கிரன் ஜல ராசியிலிருந்து சுபகிரகங்களால் பார்க்கப்பட்டாலும் அதிக மழை. மழை காலத்தில் பாபரால் காணப்படில் அற்பவிருஷ்டியுண்டாகும்.

(501) சுக்கிரன் வடதி சை யடைந்தால் மழையுண்டு, சுக்கிரன் உதிக்குங்காலம் அதிக மழை, தென்திசை சென்றாலும் அஸ்தமன காலத்திலும் மழையில்லை.

(502) பகலில் ஆருத்திரா பிரவேசமானால் பயிர் நாசம், சந்தியா காலத்தில் பயிர் விருத்தி, இரவிலாகில் சுபிக்ஷம்.

(503) ஆருத்திரா பிரவேசத்தில் இரவிலாவது பகலிலாவது தூரினால் அற்பமழை, அர்ககம் குறையும்.

(504) மார்கழி மாசத்தில் பூராடத்தில் சூரியன் பிரவேசித்தால் கற்போட்டம், 13௳ முதல் 27௳ வரையில் மேக சஞ்சாரமுண்டானால் அதற்கு மேல் வருஷத்தில் திருவாதிரையில் சூரியன் பிரவேசித்த நாள் கேட்டவரை மழையுண்டு, மார்கழி மாதத்தில் 13௳ க்குமேல் ஆனிக்கு கற்போட்டம் முக்கால் நாள், ஆடிமுதல் கார்த்திகை வரையில் மாதம் ஒன்றுக்கு நாள் இரண்டேகால் வீதம் 5 மாதத்திற்கு $11\frac{1}{4}$ மார்கழிக்கு $1\frac{1}{4}$, ஆக $13\frac{1}{4}$ கால்.

(505) சந்திர சூரியர்களைச்சுற்றி பரிவேஷ மிட்டாலும் வடக்கே மின்னினாலும் வானம் குமுறிடினும் தரையில் தவளை கத்தினாலும் மழையின் அடையாளங்கள்.

(506) அதிக மாசத்தில் எந்த கிரகம் உச்சமாக இருந்தாலும் அம்மாதத்திற்கு குற்றமில்லை, சுபகர்மங்கள் செய்யலாம்.

### நட்சத்திர கண்டம்

(507) உத்திரத்தில் முதல் பாதம் பூசத்தில் இரண்டாவது பாதம் 3-வது பாதங்கள் பூராடத்தில் 3-வது பாதம் சித்திரையில் முன்பாதி இவைகளில் பிள்ளை பிறந்தால் பிதாவுக்கு கண்டம், பெண்ணாகில் தாய்க்கு கண்டம்.

(508) ஆயில்யத்தில் கடைசிபாதமும் மகத்தில் முதல் பாதமும் கேட்டையில் கடைசி பாதமும் மூலத்தில் ஆதியும் ரேவ

திக்கு கடைசி பாதமும் அசுவனிக்கு ஆதியிலும் 4 நாழிகை கண்ட நக்ஷத்திரம்.

(509) பூராடத்திற்கு முதல் பாதம் பிதுரு கண்டம் 2-வது பாதுரு கண்டம் 3-வது பிரஜை கண்டம் 4-வது பாதம் அம்மானுக்கு கண்டம்.

(510) பூசம் முதல் பாதம் பிதுருகண்டம் 2-வது பாதம் தாய் கண்டம் 3-வது பாதம் தன் கண்டம் 4-வது பாதம் நலமென்பார்.

(511) அஸ்தத்திற்கும் பரணிக்கும் 3-வது பாதம் பிதுரு கண்டம் பூராடத்திற்கும் பூசத்திற்கும் மூலம் முதல் பாதம் சித்திரை முன் பாதியும் பிதுருகண்டம் உத்திரம் முதல் பாதம் பிதுருகண்டம் மூலம் மகம் அசுவனி இம்மூன்று க்ஷேத்திரங்களிலும் முதலில் 4 நாழிகை கண்டம் ஆயில்யம் கேட்டை ரேவதி இம்மூன்றுக்கும் முடிவில் 4 நாழிகை கண்டம்.

(512) பூர்ண திதி மூன்றுக்கும் அந்தத்திலே கண்டம், மீனம் விருச்சிகம் கடகம் இம்மூன்றுக்கும் முடிவில் 9-ல் 1 பாகம் கண்டம். மேஷ, சிம்ம, தனுசுக்கும் முதலில் 9-ல் 1 பாகம் கண்டம், மீதி ஆறு ராசிக்கும் நடுவில் 9-ல் 1 பாகம் கண்டம்.

(513) சூரியன் முதலிய கிரகங்கள் திரிகோணத்தில் நீச ராசியிலிருந்தால் பலம் சூரியன் பிதா, சந்திரன் மாதா, செவ்வாய் அம்மான், புதன் சகோதரர்களுக்கும், குரு தாயைப்பெற்ற பாட்டனுக்கும் சுக்கிரன் பாட்டிக்கும், சனி சிசுவுக்கும் கண்டம்.

(514) திதி நக்ஷத்திர கண்டத்தில் மாதா பிதா நாசம். லக்னந்த கண்டத்தில் சிசுவுக்கு நாசம், எல்லாங்கூடினால் சிசுவுக்கும் வமிசத்திற்கும் கண்டம் இவைகள் தப்பிப்பிழைத்தால் ஆனை குதிரை முதலிய பரிவாரங்களுடன் கூடியிருப்பான்.

(515) லக்னதிபனாவது குருவாவது சுக்கிரனாவது கேந்திர ஸ்தானங்களிலிருந்தால் தீர்காயுளுடையவனாயுந் தனவானாயும் அரசாங்க சம்பந்தம் பெற்றவனாயுமிருப்பான்.

(516) லக்னத்தில் சூரியன் மாதாவுக்கு தோஷம், சந்திரன் பிதாவுக்கு தோஷம், குஜன் சிசுவுக்கு கேது ராகுக்களும் சிசுவுக்கு தோஷம், 2-ல் சனியும் சூரியனும் குஜனும் இருக்கில் மாதாவுக்கு, 3-ல் புதன் மாதாவுக்கு, 4-ல் ராகு சிசுவுக்கு, 5-ல் சூரியன் சந்திரன் சனி செவ்வாய் இந்நால்வர் தகப்பன் தாய் மகன் சகோதரர்களுக்கு பீடை, 6-ல் சந்திரன் பாபரோடுகூடில் தாய்க்கும் பிள்ளைக்கும் தோஷம், 7-ல் பாபர் தாய்க்கு தோஷம், 8-9-ல் சந்திரனிருக்கில் பிள்ளைக்கு, 10 லிருக்கில் 5-ல் சொல்லிய பலன், 11-ல் இருக்கில் எல்லோரும் நல்லோர், 12-ல் ரவி, சனி. குஜன், தாயுடன் பிள்ளைக்கு கண்டம், இவ்விதம் அறியவும்.



## ஜாதகர் குருடு

(517) 12-ம் மிடத்தில் சனி இருந்தால் வலது கண் குருடாகும், செவ்வாயாகில் இடக்கண், சூரியன் 7-ம் மிடத்திலிருக்க ராகு ஹோரையில் பிறந்தால் முழுக் குருடு, 6-8-லாவது சந்திரன் பாபரோடு கூடியிருந்தாலும் குருடு, 8-ல் சூரியனும் சந்திரனுமிருந்தாலுங் குருடு ஆகும்.

## பர ஜாதகம்

(518) லக்னத்தை யாகிலும் சந்திர லக்னத்தை யாகிலும் குரு பாராமல் ஹோராதிபனும் சுக்ராம்சத்திலிருந்தால் அயலாருக்குப் பிறந்தவன்.

(519) சந்திரனும் சூரியனும் பர க்ஷேத்திரத்திலிருந்தால் (கூடியிருக்கில்) லக்னத்தையும் பாராதிருக்கில் அயலாருக்குப் பிறந்தவன் என்றறிக.

(520) திரிபாத நக்ஷத்திரம் அந்நக்ஷத்திரத்துடன் துவிதியை, சப்தமி, துவாதசி இந்த திதிகூடி ஞாயிறு செவ்வாய் சனி வாரங்களும் கூடினால் அயலாருக்கு பிறந்தவன்.

(521) சரராசியில் பிள்ளை பிறந்தால் பிதா தேசாந்தரத்திலிருப்பான், ஸ்திர ராசியில் பிறந்தால் தகப்பன் கிராமத்தின் நடுவில் இருப்பான், உபய ராசியாலும் அங்கேயே இருப்பான்.

(522) 5-7-9-12-லக்னம் 8-ம் மிடம் இவைகளில் சந்திரன் பாபருடன் கூடியிருந்து சுபகிருகத்துடன் கூடாமலும் பார்க்கப்படாமலு மிருந்தால் சிசுவுக்கு மரணத்தைச் செய்வன்.

(523) கேந்திரம் திரிகோணம் 3-11-2 இவைகளில் சுபரும் 3-6-11-ல் பாபரும், 9-8-4-12-7 லக்னம் இவைகளில் சந்திரனும் இருந்தால் நன்று.

(524) 8-ல் சந்திரன், 7-ல் செவ்வாய், 9-ல் ராகு, ஜன்மத்தில் சனி, 3-ல் குரு, 6-ல் சுக்கிரன், 7-ல் புதன், ஜன்மத்தில் கேது, 12-ல் சூரியன், இவ்வித மிருக்கின் சிசுவுக்கு மரணம்.

(525) லக்னத்திற்கு 8-லாவது லக்னத்திலாவது சந்திர னிருந்து பாபகிரகங்களால் பார்க்கப்பட்டால் சிசுவிற்கு நிச்சயம் மரணம் நேரிடும்.

(526) 12-ம் மிடத்தில் சந்திரனாவது சூரியனாவது சனியா வது இருந்தால் வரிசைக் கிரமமாக தாய், தந்தை, சிசுவுக்கு வியாதிவரும்.

(527) சந்திரனுக்கு 7-ல் சனியாவது குஜனாவது இருந்தால் 7 அல்லது 8 மாசத்தில் தாய் மரணம்.

(528) லக்ன சந்திரன் சூரியனால் பார்க்கப்பட்டால் பிதா வைக் காட்டிலும் பிரசித்தனாய் தீர்க்காயுளு முண்டாயிருக்கும்.

(529) அஷ்டமாதிபன் கேந்திரத்திலிருந்து லக்னாதிபனும் பலவீனனாயிருந்தால் 30 வருஷங்கள் ஆயுள், தவறில் 32 வயது.

(530) குஜன் சூரியனுடன்கூடி சனியால் பார்க்கப்பட்டால் அந்த செவ்வாயின் தினக் கணக்கில் பிதா மரணம்.

(531) சூரியனும் சனியும் செவ்வாயும் ஒருவருக்கொருவர் கேந்திரத்திலிருந்து குருவால் பார்க்கப்படாவிட்டால் 10 நாள் 10 மாதம் 10 வருஷம் சிசுவுக்கு ஆயுள் பிறகு சிசு மரணம்.

(532) சுக்கில பக்ஷத்தில் இரவிலாவது கிருஷ்ணபக்ஷத்துப் பகலிலாவது பிறந்தவனுக்கு லக்னம் சுபகிரகங்களால் பார்க்கப் பட்டு சந்திரன் 6-8-12 லிருந்தாலும் சிசுவை எத்தனை ஆபத்து வந்தாலும் தகப்பனைப்போல் காப்பார், 10-ல் செவ்வாயில்லா விடில் நன்மையில்லை.

## கிரக உச்சம் நீச்சம்

(533) சூரியனுக்கு மேஷம் உச்சம், சந்திரனுக்கு ரிஷபம், செவ்வாய்க்கு மகரம், புதனுக்கு கன்னி, குருவுக்கு கடகம், சுக் கிரனுக்கு மீனம், சனிக்கு துலாம். உச்சஸ்தானத்திற்கு 7-மிடம் நீசஸ்தானம். ஒரு ராசியை 30 பங்காக்கி அதில் சூரியனுக்கு 10 பாகம் அதியுச்சம், சந்திரனுக்கு 3, செவ்வாய்க்கு 28, புத



னுக்கு 15; குருவுக்கு 5, சுக்கிரனுக்கு 27, சனிக்கு 20-க்கும் பாகம் அதியுச்சம். இவ்விதமே அதிநீச்சமும் அறியவும்.

## கிரக உச்ச பலன்

(534) ஜனனகாலத்தில் சூரியன் உச்சராசில் உக்கிரனும் தன வானும் இம்ஸிப்பவனுமாவான், சந்திரனுச்சமாகில் நல்ல ஆடை அலங்காரம் ஆபரணம் போஜன சுகமுடையவனாவான், செவ்வாய் உச்சனாகில் பார்க்கிரமம முடையவனும் குரூரனும் கர்வியுமா வான்.

(535) புதனுச்சமாகில் கலைகளில் வல்லவனும் சாமர்த்தியம் வாய்ந்தவனும் நல்ல அறிவுடையோனும் பிரசித்தி பெற்றவனா யிருப்பான். குரு உச்சராகில் வித்துவானும் பிரசங்கத்தில் பிரிய முடையவனும் ஆவான். சுக்கிரன் உச்சமாகில் கானம் கேளிக் கை இவைகளில் ஆஸக்தியுடையவனாயும் ஸ்திரீகளுக்கினியனும் செல்வவானுமாவான், சனியுச்சமாகில் புகழ்பெற்ற சேனைத் தலைவ னாயும் லோபியும் நல்ல புகழுடையவனுமாவான் இவ்விதமறியவும்.

(536) ஜனன லக்னம் உச்சனுடன் கூடில் எல்லா தோஷத் தையும் போக்கும். 2 கிரகங்கள் உச்சமாகில் சிற்றரசன், 3 கிரகங் கள் உச்சமாகில் அரசன், 4 கிரகங்கள் உச்சராசில் சக்ரவர்த்தி, 5 கிரகங்கள் உச்சராசில் உலகநாயகனாவான்.

## சரம் கேந்திரம் முதலியன

(537) மேஷம்-சரம், ரிஷபம்-ஸ்திரம், மிதுனம் உபயம் இவ் விதமே கடகமுதலாக மும்மூன்றுக்காம், ஸ்திரம உபயம எண் ணிக் கொள்ளவும், ஜன்மலக்னம் கேந்திரம், லக்னத்திற்கு 2-ம் வீடு பணமரம், 3 ஆபோக்லீமம், மறுபடி 4 கேந்திரம் 5 பண மரம், 6 ஆபோகிலீமம், 7 கேந்திரம், 8 பணபரம், 9 ஆபோகி லீமம், 10 கேந்திரம, 11 பணபரம், 12 ஆபோகிலீமம் என்றிவ் விதம் கணக்கிட்டறியவும்.

## உபஜெய, அபஜெய ராசிகள்

(538) லக்னத்திற்கு 3-6-10-11 இவை 4 வீடுகளும் உப சயங்கள், மற்ற எட்டும் தனித்தனியே அபசயங்கள் என்றறியவும்.

(539) லக்னம், 4-ம் மிடம், 7-மிடம், 10-மிடம் இவை கேந் திரங்களென்று சொல்லப்படும லக்னத்திற்கு 5-ம் மிடமும்

9-ம் மிடமும் திரிகோணமென்று சொல்லப்படும், லக்னத்திற்கு 4-ம் மிடமும் எட்டாமிடமும் சதுரஸ்ரமென்று சொல்லப்படும்.

### கிரக நட்பு பகை

(540) சூரியனுக்கு :—சுக்கிரன் சனி சத்துருக்கள், புதன் சமம், மற்ற கிரகங்கள் மித்துரு.

சந்திரனுக்கு :—சூரியன் புதன் மித்திரர், மற்றவர் சமம்.

செவ்வாய்க்கு :—குரு சந்திரன் சூரியன் மித்திரர், புதன் சத்துரு. சுக்கிரன் சனி சமம்.

புதனுக்கு :—சூரியன் சுக்கிரன் மித்திரர், சந்திரன் சத்துரு, மற்றவர் சமம்.

குருவுக்கு :—புதன் சுக்கிரன் சத்துரு, சனி சமம், மற்றவர் மித்திரர்.

சுக்கிரனுக்கு :—புதன் சனி மித்திரர், குஜன் குரு சமம், மற்றவர் சத்துரு.

சனிக்கு :—சுக்கிரன் புதன் மித்திரர், குரு சமம், மற்றவர் சத்துரு.

(541) ஒருவருக்கொருவர் 2-12-11-3-4-10-ல் இருக்கும் கிரகங்கள் தற்கால மித்திரர், மற்றவர் தற்கால சத்துரு. உச்சநீ கிரகங்களுக்கும் தற்கால மித்ர சத்துரு பார்ப்பதுண்டு.

(542) ஸ்வபாவதத்தால் ஹித சம ரிபு எண்ணும் கிரகங்கள் ஜன்மகாலத்தில் தற்கால மித்திரருடன் சேர்ந்தால் அவை முறையே. ஹிதகிரகம் அதிக நன்மை செய்வதாயும், சமகிரகம் மித்ரமாயும், ரிபு கிரகம் மத்தியமமாகவும் ஆகிறது. அவ்விதமே சத்துரு சம சுஹிருது என்னும் கிரகங்கள் ஜன்மகாலத்தில் தற்கால சத்துரு கிரகங்களுடன்கூடில் சத்துரு, அதி சத்துருவாகவும், சமகிரகம் சத்துருவாகவும், மித்திரகிரகம் மத்திமமாகவும் ஆகிறது.

சூரிய நக்ஷத்திரம் முதல் ஜன்ம நக்ஷத்திரம்வரை எண்ணி புருஷன் உருவம் எழுதி, சிரசில் சூரிய நக்ஷத்திரம்முதல் 3 நக்ஷத்திரங்கள், முகத்தில் 3, தோள்களிலும் 2, 2 கக்ஷங்களில் 2, 2 கைகளிலும் 2, வயிற்றில் 5, தொப்பூழில் 1, குஹ்யத்தில் 1,



முட்டியில் 2, கால்களில் 6, நக்ஷத்திரம். இவ்விதம் புருஷாகரா சக்ரத்தில் எழுதவேண்டியது.

(543) ஜன்ம நட்சத்திரம் பாதங்களில் வந்தால்-அற்பாயுள், முட்டியில் - ஸ்தான பிரஷ்டம், குஹ்யத்தில்-பரஸ்திரீலோலன், தொப்புளில்-அற்ப சுகம், வயிற்றில்-செல்வம், கைகளில்-திருடன், கக்ஷங்களில் - சூரன், தோள்களில் - அதிக ஐசுவரியம், முகத்தில்-பண்டிதன், சிரஸில்-பட்டங்கட்டுதல் நேரிடும்.

(544) 10-ம் மதிபர், 8-ம் மதிபர் இவருடன் கூடியவர், இவர்கள் தசை வந்தால் அதில் அதி சத்துரு புத்தி வருகையில் அவனும் பாபாம்சத்திலிருந்தால் தகாசசித்ரம் (தசை கேடு) வரும்.

(545) அப்போது மரணத்தையாவது அதி செல்வத்தையாவது தருவன்.

(546) சர ராசிகளில் முதல் பாகம் வர்க்கோத்தமம், ஸ்திர ராசிகளுக்கு 5-வது அம்சம் வர்க்கோத்தமம், உபய ராசிகளில் கடைபாகம் வர்க்கோத்தமமென்று பெயர். மேஷத்திற்கு-மேஷாம்சம்-ரிஷபத்திற்கு ரிஷபாம்சம்-மிதுனத்திற்கு-மிதுனம்சம், இந்தப்படி அந்தந்த ராசிகளுக்கு அந்தந்த அம்சங்கள் வர்க்கோத்தம மென்றறியவும், மூலதிரிகோணம்-சூரியனுக்கு சிம்மம், சந்திரனுக்கு ரிஷபம்-செவ்வாய்க்கு மேஷம், புதனுக்கு-கன்னி, குருவுக்கு தனுசு, சுக்ரனுக்கு துலாம் சனிக்கு கும்பம். சூரியன் முதல் 7 கிரகங்களுக்கும் இந்த 7 ராசிகளும் மூலதிரிகோணங்கள் எனப்படும்.

(547, 10-ம் மிடம் 3-மிடம் கால் பார்வை, 9-ம் மிடம் 5-ம் மிடம் அரை பார்வை, 4-ம் மிடம் 8-ம் மிடம் முக்கால் பார்வை, 7-ம் மிடம் எல்லாருக்கும் முழுப் பார்வை.

(548) சனிக்கு 3-10 முழுப்பார்வை, குருவுக்கு 5-9 முழுப்பார்வை, குஜனுக்கு 4-8ம், மற்ற கிரகங்களுக்கு 7-ம் மிடம் முழுப் பார்வை.

(549) 4-10-5-2-1 இவைகளில் சுபரிருக்கவேண்டும் 6-ஆம் மிடத்தில் பாபரிருக்கவேண்டும். 2-ல் சந்திரனிருக்கவேண்டும். 11-ல் சமஸ்த கிரகங்களும் 7-ம் மிடம் சுத்தமாக இருக்கவேண்டும்,

6-ம் மிடத்தில் சுக்கிரனும் 8-ல் செவ்வாயும் விலக்கத்தக்கது, இவ் வித மிருக்கில் (விலக்கினால்) யாத்திரையிலும் ஜாதகத்திலும் விவாகத்திலும் சுபம்.

## கஜகேசரி யோகம்

(550) கஜகேஸரி யோகமாவது சந்திரனுக்கு கேந்திரத்தில் குரு இருந்தால் கஜகேஸரி யோகமெனப்படும். யானைக் கூட்டத்தை ஒரு சிங்கம் துரத்துவதுபோல் சகல தோஷத்தையும் போக்குவர்.

(551) சுக்கிரனைக் குரு பார்த்தால் வெகு பெயருக்கு நாயகனாய் ராஜ்யாதிபதியா யிருப்பான்.

(552) சிங்கம், ரிஷபம், கன்னி, கடகம் இவைகளில் ராகு இருந்தால் அதி விசாலமான செல்வம் நிறைந்தபூமிக் கதிபதியாகவாவது குதிரை, யானை, சேனையுடன்கூடிய பூமிக்கு மண்டலாதிபதியாய் எதிரிக்கூட்டத்தை அழிப்பவனாய் பிரசஸ்த ராஜயோகமுடையவனாவான்.

(553) மேஷம், ரிஷபம், கடகம் இவைகளில் இராகு இருந்தால் எல்லா பீடைகளையும் நீக்கிக் காப்பான்.

## மங்கள யோகம்

(554) சந்திரனுக்கு கேந்திரத்தில் குஜனிருந்தால் மங்கள யோகம் இதில் பிறந்தவனுக்கு குறையாச் செல்வமும் மங்களமுமுண்டாகும்.

## சந்திர மங்கள யோகம்

(555) லக்னத்தில் சந்திரனும் செவ்வாயும் கூடியிருக்கில் சந்திர மங்களயோகம். இவ்வித மிருந்திடில் குலஸ்திரீ வெட்கத்தை விடாமலிருபதுபோல லக்ஷ்மீ (செல்வம்) ஒருநாளும் விடாது.

(556) ஜன்ம காலத்தில் சந்திரனுக்கு 10-ல் சுபகிரக மிருந்தால் அமலயோகம், இதில் பிறந்தவனுக்கு மரணம்வரை செல்வமும் புகழும் நிலைத்திருக்கும்.

(557) ஜன்ம லக்னத்தில் நீச கிரகமிருந்து அந்த ராசி நாதனாவது அதன் உச்சாதிபனாவது சந்திர லக்னத்திற்கு கேந்திரத்திலிருந்தால் தார்மிகனும் ராஜ ராஜர்களுக்கு நாயகனாய் சக்ரவர்த்தியாவான்.



(558) சந்திரனுக்கு 2-ம் மிடத்தில் சூரியனை நீக்கி மற்ற எந்த கிரகமிருந்தால் சுனபாயோகம், 12-ல் இருந்தால் அனபா யோகம், 2-12 இரண்டிலும் இருந்தால் துருதுரா யோகம், இம் மூன்றும் ஜாதகனுக்குத் தீர்க்காயுளைத்தரும்.

## வாசி, வேசி, யோகங்கள்

(559) சூரியனுக்கு 12-ல் சந்திரன் தவிர மற்ற கிரகமிருந்தால் வாசியோகம், 2-ல் இருந்தால் வேசியோகம், 12, 2லுமிருந்தால் உபயசரியோகம், இவ்விதமிருக்கில் ஆயுள் ஆரோக்யம் புத்ர அபிவிருத்தி உண்டு.

(560) ஜனன காலத்தில் லக்னத்திற்குக் கேந்திர திரிகோணங்களில் புதன், குரு, சுக்கிரன் இவர்கள் இருப்பின், தர்மா அர்த்திமென்னும் புருஷார்த்தங்களுடன் கூடியவராய் புண்யவானாய், வித்வானாய், தீர்க்காயுடையவனா யிருப்பார்.

## ஸூர்யாம்சம்

(561) சூரியாம்சத்தின் குணம் நீண்டகாலம் பிரதாப குணவானாய், மெல்லிய தலைமயிருடையவனாய், பரந்த கண்களுடையவனாய், பித்த குணமுடையவனாய், கஜபோகியாய், புத்திமானாய், பரஸ்திரீஸ்கதனாய், ஸர்வ களத்ர போஷகனுமாய், தாதாவாய், இருப்பான்.

## சந்திராம்சம்

(562) நடுத்தர தேக அமைப்புடையவனும், இனிமையாய் பேசுபவனும், நியாய வழியில் செல்பவனும், ஸ்திரீகளுக்கினியனும், நோயற்று க்ஷேமமாயிருப்பவனும், சமர்த்தனும், நல்லுபதேசம் செய்பவனும், நெய் ஷட்ரசங்கள்கூடிய அன்னம் புசிப்பவனும், தாய்க்கு இனியனும், எதிரிக்கும் தீங்கு நினையாதவனுமாவான்.

## பௌமாம்சம்

(563) கொடியவனும், நன்றிகெட்டவனும், மெல்லிய தேகமுடையவனும், பெருந் தன்மையான குணமுடையவனும், தன்னைத்தான் புகழுகிறவனும், குணவானும், நல்லவனும், அற்பர்களான அதிக திருட்டுக் கூட்டங்களுடன் கூடியவனும், சமதத்துடன் கூடியவனும், (ஸத்தியம் செயபவனும்), பந்துக்களை விலக்கியவனுமாவான்.

## புதாம்சம்

(564) கருத்த மேனியுடையவனும், இனிமையான சொல்லுடையவனும், அழகிய மந்தஹாச முடையவனும், பந்துக்களிடம் அன்புடையவனும், அயலாருக்கு நன்மை செய்பவனும், பராக்கிரமத்தில் சாமர்த்தியம் வாய்ந்தவனும், விடனும், எல்லாருக்கும் ஞானோபதேசம் செய்யவல்லவனுமாவான்.

## குரு அம்சம்

(565) அறிவாளியும், பரந்து திரண்ட தேக அமைப்பு வாய்ந்தவனும், அதிக குணவானும், நன்மார்க்கத்தை உபதேசிப்பதில் சமர்த்தனும், அண்டியவரை ஆதரிப்பவனும், ஞானவானும் எல்லாக் கலைகளிலும் கெட்டிக்காரனும், உண்மையை வெளியிடுபவனும், பிரபஞ்சம் (உலக) விளையாட்டை விளக்குபவனுமாவான்.

## சுக்ராம்சம்

(566) எல்லாவற்றையும் கேட்ட உடனே கொடுப்பவனும், வினோத மார்க்கத்தில் பற்றுடையவனும், தானத்தில் பிரியனும், தோழர், தோழி, பந்து, பணியாள், இவர்கள் நிறைந்தவனும், செல்வவானும், தேர்ந்த அறிவுடையவனும், புராணம், காவியம், நாடகம், முதலிய கலைகளில் பற்றுடையவனும், ஸ்திரீலோலனுமாவான்.

## சனி அம்சம்

(567) வெட்கங்கெட்ட சொல் பேசுபவனும், லோபியும், தரித்திரனும், அதிக தூக்கமுள்ளவனும், எப்போதும் கோணலான புத்தியுடையவனும், கெட்டவனும், பருத்த எலும்பு, மயிர், நகம், பற்கள், பெற்று விகாரமானவனும், அசத்தியத்திலேயே ஊக்கமுடையுவனயு மிருப்பான்.

## ராஜா, மந்திரி முதலிய நிர்ணயம்

(568) பங்குனி மாசத்தில் பூர்வபக்ஷ பிரதமையில் வரும் வாராதிபதி ராஜா, சித்திரை மாதப்பிறப்பு வாராதிபதி மந்திரி, ஆவணிப் பிறப்பு வாராதிபதி சேனுதிபதி, ஆடிப்பிறப்பு வாராதிபதி ஸஸ்யாதிபதி, மார்கழிப் பிறப்பு வாராதிபதி தானியாதிபதி, ஆனிப்பிறப்பு வாராதிபதி அர்க்காதிபதி, சூரியன் ஆருத்திராவில் பிரவேச வாராதிபதி மேகாதிபதி, அற்பசிப் பிறப்பு வாராதிபதி ரசாதிபதி, தைப்பிறப்பு வாராதிபதி நீரஸாதிபதி என்றறியவும்.



## ஆதாயம் விரையம் நிர்ணயம்

(569) சூரியனுக்கு துருவம் 6, சந்திரனுக்கு 2, செவ்வாய்க்கு 8, புதனுக்கு 17, குருவுக்கு 19, சுக்கிரனுக்கு 21, சனிக்கு 10, தன் ராசி அதிபதியின் துருவத்தையும் ராஜாவின் துருவத்தையும் கூட்டி அதை 15-ஆல் கழிக்க மிகுந்தது ஆதாயம்.

(570) மேற்சொன்னபடி கழித்து மிகுந்த ஆதாயத்தை 3 ஆல் பெருக்கி அத்துகையை மறுபடியும் 3 ஆல் பெருக்கி 5 கூட்டி 15 ஆல் வகுக்க மீதி விரையம் ஆகும்.

## கந்தாயம்

(571) யுகாதி தினத்தில் திதி, வார, நக்ஷத்திர, யோக, கரணங்களைக்கூட்டி, அத்துடன் ஜன்ம நக்ஷத்திரத்தையுங்கூட்டி, முதல் கந்தாயத்திற்கு 3 ஆல் பெருக்கி 8 ஆல் வகுக்க, இரண்டாங் கந்தாயத்திற்கு 7 ஆல் பெருக்கி 3 ஆல் வகுக்க, 3 ஆம் கந்தாயத்திற்கு 3 ஆல் பெருக்கி 5-ஆல் வகுக்க, அவைகளில் மிகுந்தது கந்தாய பலன் ஆகும்.

(572) பங்குனி மாசத்தில் இரண்டு அமாவாசை வந்தால் முதலமாவாசை கழிந்த பிரதமை வாராதிபதி ராஜா ஆகும்.

## கிரக பலன்

(573) சூரியனும் செவ்வாயும் முதல் பாகத்தில் (பிரவேசிக்கும் சமயம்) பலன் தருவர். குருவும் சுக்கிரனும் நடுபாகத்தில் பலன் தருவர். சனியும் ராகுவும் முடிவில் பலன் தருவர். புதனும் சந்திரனும் எப்போதும் பலன் தருவர்.

## கிரக ராசி சஞ்சார காலம்

(574) சூரியன், புதன், சுக்கிரன் இவர்கள் ஒரு ராசியில் ஒரு மாதஞ் சஞ்சரிப்பார். செவ்வாய் $1\frac{1}{2}$ மாதம், குரு 1 வருஷம், சனி $2\frac{1}{2}$ வருஷம், ராகு கேது $1\frac{1}{2}$ வருடம், சந்திரன் $2\frac{1}{4}$ நாள்கள், ஸஞ்சரிப்பர்.

(575) சூரியன் ராசியில் பிரவேசித்த 5 நாள்களில் பலன் தருவர், சந்திரன் 3 நாழிகையில், செவ்வாய் 8 நாளில், புதன் சுக்கிரன் 7 நாளில், குரு 2 மாதத்தில், சனி 6 மாதத்தில் ராகு கேது 3 மாதத்தில் நல்ல கெட்டபலனைத் தருவர்.

## கோசார பலன்

(576) சூரிய பலன் :—சந்திர லக்னம் முதல் எண்ண 1-ல் ஸ்தான நாசம், 2-ல் தனம், 3-ல் செல்வம், 4-ல் மான அனி 5-ல்

மனோவியாதி, 6-ல் சத்துரு நாசம், 7-ல் யாத்திரை, 8-ல் பீடை, 9-ல் துவேஷம், 10-ல் காரியசித்தி, 11-ல் தனலாபம், 12-ல் தன நாசம் செய்வர்.

(577) சந்திர பலன் :—(1) ல் நிறைந்த போஜனம், 2 தன லாபம், 3 திரவியம் வரவு, 4 வயிர் குடல் முதலிய வலி, 5 காரிய நாசம், 6 தன வரவு, 7 ஸ்திரீ லாபம், 8 மரணபயம், 9 மனோ பீடை, 10 சௌக்கியம், 11 தனலாபம், 12 நஷ்டம்.

(578) செவ்வாய் :—(1)ல் சத்ருபீடை, 2 தனநாசம், 3 தன வரவு, 4 சத்துருபயம், 5 பொருள் நாசம், 6 தனம், 7 கோசம், 8 மரணம், 9 தேகபீடை, 10 துக்கம், 11 பூபலிதம், 12 பல உபத் திரவம்.

(579) புதன் :—(1)ல் பந்தனம் (கட்டுப்படல்), 2 தனம், 3 செல்வம், 4 புத்தி, 5 சுகம், 6 நிலைபெறல், 7 வியாதி, 8 ஆதா யம், 9 பீடை, 10 சுபம், 11 தனலாபம், 12 தனவிரயம்.

(580) குரு பலன் :—1 ல் பாபம் ஸ்தான சலனம், 2 பூஜை, 3 நோய், 4 பொருள் நஷ்டம், 5 சுகம், 6 மனஸ்தாபம், 7 செல் வம், 8 ஆபத்து, 9 தனலாபம், 10 ஸ்தான நாசம், நிலை அழிவு, 11 தன தானியவிருத்தி, 12 தேகபீடை.

(581) சுக்கிரன் :—(1)ல் சந்தோஷம், 2 தனம், 3 சுகம், 4 தனம், 5 சந்தோஷம், 6 சத்ருபயம், 7 சுபம், 8 தனலாபம், 9 வஸ்திரலாபம், 10 மனோதுக்கம், 11 லாபம், 12 நல்லதுநேரும்.

(582) சனி :—(1)ல் ஆபத்து, 2 கெடுதி, 3 செல்வம், 4 வயிற்றுவலி, 5 புத்திர நாசம், 6 லக்ஷ்மீகரம், 7 தரித்திரம், 8 மர ணம், 9 தேகமெலிவு, 10 பீடை, 11 லாபம், 12 நஷ்டம்.

(583) ராகு கேது :—1 ல் பயம், 2 நோய், 3 சுகம், 4 நாசம், 5 கெடுதி, 6 சௌக்கியம், 7 அரசரிடம் பயம், 8 ஆரோக்கியம் 9 தாபம், 10 கலவரம், 11 தனம், 12 நாசம்.

(584) சந்திர லக்னத்திற்கு 12-8-1 (ஜன்மம்) இந்த இடங் களில் சனி, சூரியன், செவ்வாய், குரு, இவர்கள் நிற்கில் பிராண பத்து, ஸ்தானநிலை பேருதல், தனவிரயம், இவைகளைச் செய்வர்.

(585) பொதுவாக எல்லா கிரகங்களும், அதிசாரத் திலும் (தானிருக்கும் ராசியை கடந்து செல்லுகையிலும்), வக்கி ரத்திலும் (பின் செல்லுகையிலும்) தான் நிற்கும் ராசி பலனைத் தருவர். குருவுக்கு மாத்திரம் அவ்விதமில்லை, இவர்தான் முன் நின்ற ராசி பலனையே தருவர் என்று அறியவும்.



(586) மாச பலன் :—ஜனன நக்ஷத்திரம் முதல் ஆரம்பித்து மாதப்பிறப்பு நக்ஷத்திரம் வரையில் எண்ணி 7 ஆல் பெருக்கி, 8 ஆல் வகுத்தால், மீதி, 1 வந்தால் ரோகம், 2 லாபம், 3 வழி நடை, 4 பந்தனம், (கட்டுப்படல்), 5 தனம், 6 ஐசுவரியம், 7 பொருள் நாசம், 8 அவமிருத்தியு என்றறியவும்.

(587) நித்திய பலன் : ஜன்ம நக்ஷத்திரம் முதல் அன்று சந்திரன் நிற்கும் நக்ஷத்திரம்வரை எண்ணி, 4 ஆல் பெருக்கி, அத்துடன் அன்றைய திதி வாரங்களைக்கூட்டி, 9 ஆல் வகுக்க மீதி நித்ய கிரகபலன் ஆகும். அதாவது மீதி 1 ஆனால் தாபம், 2 காந்தி, 3 மரணம், 4 லாபம், 5 தானியலாபம், 6 நிலை, 7 ஸ்தான நிலை நாசம், 8 மரணம், 9 மனஸ்தாபம். இது நித்திய கிரகபலன் ஆகும்.

(588) ஜனன நக்ஷத்திர நாழிகை சங்கவ காலத்தில் கூடில் விருத்தியில் 12 நாழிகையும், க்ஷயத்தில் 9 நாழிகையும், சமத்தில் 10 நாழிகையும் இருந்தால் அதில் ஜன்ம நக்ஷத்திரபலன் நேரும்

## வரப்போகும் நக்ஷத்திரம்

(589) இந்த மாதத்தில் ஜன்ம நக்ஷத்திரம் எத்தனை நாழிகை உண்டோ அத்துடன் 20 கூட்டினால் 60 நாழிகைக்கு மேற்பட் டால், மிகுந்த நாழிகை அந்த வாரத்தில்வரும் குறைந்தால், வரு கிற நக்ஷத்திரம் முதல் நாளில் வரும்.

(590) ஜனன நக்ஷத்திரம் ஞாயிறில் வந்தால் வழிநடை, திங்கள்-சுக போஜனம், செவ்வாய்-ஆலசியம், புதன்-வித்தை, வியாழன் - வஸ்திரலாபம், வெள்ளி-ஸ்திரீ லாபம், சனி-வியாதி பீடை.

## கோசாரங்களில் கிரக பலாபலம், வேதை முதலியன

(591) சூரியன் :—3-6-10-11 ல் நின்றால் சுப பலன். அப் போது 4-5-9-12 ல் சனி தவிர எந்த கிரகமிருப்பினும் வேதை உண்டு, அதனால் சூரியன் தனது சுப பலன் கொடுக்கமாட்டார்.

(592) சந்திரன் :—1-3-6-7-11 ல் சுபபலனைத் தருவர், அப் போது 2-5-4-6-8-12 ல் புதன் தவிர மற்ற கிரகம் இருப்பின் வேதை உண்டு, அப்போது தனது பலனில்லை.

(593) செவ்வாய் :—3-6-11 ல் சுபபலன் தருவர். அப்போது 5-9-12ல் சனி சூரியன் நிற்கில் வேதை, பயனில்லை.

(594) புதன் :—2-4-6-8-10-11 ல் சுபன். 1-3-5-8-9-12 ல் சந்திரன் தவிர மற்றவர் இருந்தால் வேதை உண்டு.

(595) வியாழன் :—குரு 2-5-7-9-11 ல் சுபபலன் தருவர். அப்போது 3-4-8-10-12 ல் ஒருவரும் கூடாது, இருந்தால் வேதை, பலனில்லை.

(596) சுக்கிரன் :—5-8-11-12 ல் சுபபலன் தருவர். அப்போது 1-5-8-6-10-9-11-12 கிரகமிருக்ககூடாது, இருந்தால் வேதை, பலனில்லை.

(597) ராகு, கேது, சனிக்கு :—இவைகளுக்குச் செவ்வாயைப்போல் பலன் பார்த்துக்கொள்ளவும். ஆகையால் நவகிரகங்களுக்கு இப்பொழுது சொல்லிய சுப ஸ்தானங்களில் இருந்து அந்தந்த வேதை ஸ்தானங்களில் முன் சொல்லிய வேதை கிரகமிருந்தால் பலனில்லை. வேதை கிரகம் நீக்கி மற்ற கிரகம் இருக்கலாம்.

## வேதை நட்சத்திரங்கள்

(598) கிருத்திகைக்கும் விசாகத்திற்கும் வேதை உண்டு. இவ்விதமாகவே பரணி-அனுஷம், திருவோணம்-மகம், அவிட்டம்-ஆயில்யம், அசுவனி-பூரம், ரேவதி-உத்திரம், உத்திரட்டாதி-அஸ்தம், சித்திரை-பூரட்டாதி, சதையம்-சுவாதி, கேட்டை-பூசம், மூலம்-புனர்பூசம், பூராடம் - திருவாதிரை, உத்திராடம் - மிருகசீர்ஷம், ரோகிணி-அபிஜித்து, ஆகிய இவ்விரண்டு, இரண்டு நட்சத்திரங்களும் ஒன்றுக்கொன்று வேதையாகும்.

(599) கிழக்கு மேற்காக 5 கோடுகள், தெற்கு வடக்காக 5 கோடுகள், வரைந்து மூலைகளில் 2-2 கோடுகள் வரைந்து, கிழக்கு முதல் ரோகிணி முதலாக எண்ணினால் கிரகமிருக்கும் நக்ஷத்திரத்திற்கு எதிர் நக்ஷத்திரம் அந்த கிரகத்திற்கு வேதையாகும். ரோகிணி முதல் 5-க்கு அபிஜித் முதல் தலைகீழாக 5-ம், சதையம் முதல் 5-க்குச் சுவாதி முதலாக தலைகீழாக 5-ம் எண்ணவும்.

## லத்தை

(600) சூரியன் நிற்கும் நக்ஷத்திரத்திற்கு முன் 12 நக்ஷத்திரம் சூரிய லத்தை ஆகும். செவ்வாய்க்கு 3 நக்ஷத்திரங்கள், குருவுக்கு 6-வது நட்சத்திரம், சனிக்கு 8-வது நட்சத்திரம், ஆகும். இந்த 4 பேருக்கும் முன்னாக லத்தை. புதனுக்கு



பின்பு 7-வது நட்சத்திரம், ராகு, கேதுவுக்கு பின்பு 9-வது சுக்ரனுக்கு பின்பு 5-வது, சந்திரனுக்குப் பின்பு 22-வது நட்சத்திரம் லத்தை ஆகும். பாபக்கிரக லத்தையில் எல்லா கருமங்களையும் நீக்கவும்.

## கிராந்தம்

(601) பாபகிரகங்கள் விட்ட ராசி, நட்சத்திரங்கள், இனி பிரவேசிக்குமவை, தற்காலத்தில் இருக்கப்பட்ட ராசி நட்சத்திரங்கள் பாபகிரக வேதை ஆகும். உத்பாதங்கள், கண்ட நட்சத்திரம், பாபகிரக லத்தை இவைகளில் சுப கருமங்கள் விலக்கவும்.

(602) ஜன்ம நட்சத்திரம் முதல் சூரியனிருக்கும் நட்சத்திரம் வரையில் சிரசு முதல் எண்ணி எவ்விடமிருக்கிறதோ அதன் பலன். தலையில்-3 லாபம், கழுத்தில்-3 சோகம், கைகளில் 6 பொருளழிவு, வயிற்றில்-5 தனலாபம், லிங்கத்தில்-2 நாசம்,

(603) கால்களில்-8 சுபம். இவ்விதமே குஜன், சுக்ரன், புதன், சந்திரன், இவர்களுக்கும் பார்த்துக்கொள்ளவும்.

## அங்க பிருஹஸ்பதி

(604) ஜன்ம நட்சத்திரம் முதல் குரு இருக்கும் நட்சத்திரமளவு சிரசு முதல் எண்ணி, சிரசு-4 நட்சத்திரம் ராஜ்யசுகம், வலதுகை-4 ஐசுவரியம், கழுத்தில்-1 தனலாபம், மார்பில்-5 சந்தோஷம், கால்களில்-6 தேகபீடை, இடக்கை-4 மரணபயம், கண்களில்-3 ராஜ்யசுகம் உண்டு.

## அங்க சனி

(605) ஜன்ம நட்சத்திரம் முதல் சனி இருக்கும் நட்சத்திரம் வரை சிரசுமுதல் எண்ணி சிரசு-1 மரணம், நெற்றி-3 ராஜ்யசுகம், குஹ்யம்-2 வியாதி, கண்களில்-2 ஐசுவரியம், வயிற்றில்-5 போஜன சுகம், இடதுகை-4 துக்கம், கால்கள்-6 அலைச்சல், வலதுகை-4 நற்பலன் உண்டு.

(606) ஜன்ம நட்சத்திரம் முதல் சனி நிற்கும் நட்சத்திரம் வரை எண்ணி. முகத்தில்-1 மரணம், வலதுகை-4 தனலாபம், காலில்-6 திரிச்சல், இடதுகை-4 பயம், வயிற்றில்-5 செல்வம், கண்களில்-2 சந்தோஷம், குஹ்யம்-1 மரணபயம், கால்கள்-4 சுகம் உண்டு.

## அங்க ராகு, கேது

(607) ஜன்ம நட்சத்திரம் முதல் ராகு கேது இருக்கும் நட்சத்திரம் வரை முகம் மூதலாக எண்ணி, முகத்தில்-3 மரணம், சிரசு-3 செல்வாக்கு, மார்பு-4 பீடை, வலதுகை-5 சுபம், இடதுகை-5 மரணம், கழுத்தில்-1 ராஜ்யசுகம், கால்கள்-6 சுகம் உண்டு.

## கிராமப் பொருத்தம்

(608) கிராம நட்சத்திரம் முதலாக மனித நட்சத்திரம் வரை எண்ண, சிரசு-5 பொருள் லாபம், முகம்-3 தரித்திரம், இருதயம்-5 சுகம், கால்கள்-6 திரிச்சல், முதுகு-1 விபத்து, நாபி-4 ஐசுவரியம், குஹ்யம்-1 துக்கம், இடதுகை-1 நஷ்டம், வலதுகை-1 பொருள் லாபம் உண்டு.

(609) 108-ல் குறைய மூன்றுதரம் கேட்டால் 1-1-1 சூரியன், 2-1-3 சந்திரன், 2-2-2 குஜன், 3-1-2 புதன், 3-3-3 குரு, 3-2-1 சுக்ரன், 1-2-3 சனி, 1-3-2 ராகு, 2-3-1 கேது உதயமாகும்.

## சூரியோதய பலன்

(610) சூரியன் உதயமாகில், ராஜ விஜயம், நாற்கால் ஜீவனுக்கு நன்மை, யுத்தம் சமாதானம், பயிர் விளையும், விவாக காரியமும் பயணமும் தாமஸத்தில் கூடும், நிலைக்கும் நன்று, அகவிலை குறையும், ஸந்தானமுண்டு, சுகம் அற்பம்.

## சந்திரோதய பலன்

(611) சந்திரோதயமானுல் ராஜாவுக்கு ஜயம், சத்ரு நாசம், விவாகலாபம், புத்திரலாபம், பயிர்விளையும், ஸ்திரீலாபம், பயணம் கூடும், மழைக்கு நல்லது.

## செவ்வாய் உதய பலன்

(612) செவ்வாய் உதயமாகில், பூமிலாபம், ஸ்திர காரிய விக்கினம், வியாதிக்கு மரணம் வரும், விவாகம் சுபம், மழையில்லை, பயிர் விளையாது, வியாபாரத்தில் நஷ்டம்.

## புதன் உதய பலன்

(613) ராஜாக்களுக்கு நன்மை, சத்ருநாசம், விவாகம், மழை பயிர் இவைகளுக்கு நன்மை, ஸ்திரீ லாபம், தானியத்துக்கு ஜயம், பெருங் காற்றடிக்கும், பெண்ணைப் பெருவாள்.



## குரு உதய பலன்

(614) ராஜகாரியம் நன்மை, எல்லா காரியங்களும் கூடும், வியாதியானுல் அதிக சுகம், புத்திரலாபம், விவாகம்கூடும், பயிர் விளையும், மழையுண்டு, நினைத்த காரியமெல்லாம் சித்திக்கும்.

## சுக்கிர உதய பலன்

(615) ராஜகாரியம் ஜெயம், மனஸ்தாப நாசம், விவாகம், ஸ்திரீ லாபம், புத்திரலாபம் உண்டு, வியாதி பயம், யுத்தத்தில் ஜயம், நினைத்த காரியங்கள் கூடும்.

## சனி உதய பலன்

(616) ராஜாக்களுக்கு ஜயமில்லை, சத்துருபீடை பயம், நினைத்தகாரியம் கூடாது, விவாகம், விதவை, மழையில்லை, பிரயாணத்தில் பலனில்லை, காரிய தாமஸம், திருடர் பீடை.

## ராகு உதய பலன்

(617) ராஜாவுக்கு அபிஷேகம்வரும், வஸ்திர ஆபரண சித்தி, வியாதி குணம், நினைத்தகாரியம் கூடும், உத்தியோகமும் பலன் தரும், ராஜாவைக் கண்டால் நன்மையுண்டு.

## கேது உதய பலன்

(618) ராஜாவுக்கு கலக்கம், யுத்தத்தில் அபஜயம் வரும், வியாதி திண்டாடி மரணந்தரும், நினைத்தகாரியம் கூடாது.

## கிரக ஜாதி முதலியன

(619) சூரியனும் செவ்வாயும் இராஜகிரகம், சந்திரனும், குருவும், பிராமண கிரகம், புதன் வைசியகிரகம், சுக்கிரன், சூத்திரகிருகம், சனி ராகு கேதுக்கள் நீச கிரகங்கள் ஆகும்.

(620) சூரியன், குஜன், குரு புருஷ கிரகங்கள், சந்திரனும் சுக்கிரனும் ஸ்திரீ கிரகங்கள், புதன் சனி ராகு கேதுக்கள் அலி கிரகங்கள் ஆகும்.

(621) சூரியன் செவ்வாய் சிகப்பு நிறம், சந்திரன் சுக்கிரன் வெளுப்பு, குரு மஞ்சள், புதன், கருப்பு, சனி ராகு கேதுக்கள் சுத்த கருப்புநிறம் ஆகும்.

(622) குரு, புதன், சந்திரன் ஜீவகிரகங்கள், சனி ராகு கேது தாது கிரகம், சூரியன் சுக்கிரன் மூலகிரகம் ஆகும்.

(623) குரு, புதன், ராகு, கேது, உயரமான கிரகங்கள், சூரியன், சுக்கிரன், சம கிரகங்கள், சந்திரன், குஜன் சனி, குட்டை கிரகங்கள் ஆகும்.

## நக்ஷத்ர நிகண்டு

(624) 1. அசுவனி, தஸ்ரம், துரங்கம், ஆத்யம், துரங்கமம், துரகம், அச்வி, வாஜி, ஹயம், ஹரி, அச்வம் இந்த 11-ம் அசுவனி யின் பெயர்.

2. பரணி, யமம், யாம்யம், அந்தகம், யமசம்ஞகம் இந்த 5-ம் பரணியின் பெயர்.

3. கிருத்திகை, பஹுளம், ஆக்னேயம், ஷண் நக்ஷத்ரம் ஹுதாசனம் இந்த 5-ம் கிருத்திகையின் பெயர்.

4. ரோகிணி, பங்கஜம், கார்யம், சகடம், வனஜம், விதி, பிராஜாபத்யம், பிரஜேசம், சும், வைதாத்மியம், பங்கஜாஸனம் இந்த 11-ம் ரோகிணியின் பெயர்.

5. மிருக சீர்ஷம், விதி ஸாம்யம், நிசாநாதன், நிசாகரன், இந்த 5-ம் மிருகசீர்ஷத்தின் பெயர்.

6. ஆருத்ரா, ரௌத்ரம், ஹரம், சார்வம், சாங்கரம், சர்வம், இந்த 6-ம் திருவாதிரையின் பெயர்.

7. புனர்வசு, ஆதித்யம், அஷ்டதிக், அதிதி, இந்த 4-ம் புனர் வசுக்குப் பெயர்.

8. புஷ்யம், ஆங்கிரஸம், திஷ்யம், வாசஸ்யத்யம், பிரகஸ்பதி, இந்த 5-ம் புஷ்யத்தின் பெயர்.

9. ஆயில்யம், உரகம், ரஜ்ஜு, ஸர்ப்பம், அஹி, பணி, இந்த 6-ம் ஆயில்யத்தின் பெயர்.

10. மகம், பைதுருபம், பிதுருபம், மகம், மிருதி, மாரணம், இந்த 6-ம் மகத்தின் பெயர்.

11. பகணம், பகம், பூர்வபல்குனி, பூர்வயி, தேவவஸுந்தரி இவை 5-ம் பூரகத்திற்குப் பெயர்.

12. அர்யமா, உத்தர பல்குனி, துவஷ்டா, உத்தரம், பகம், இந்த 5-ம் உத்திரத்தின் பெயர்.

13. அஸ்தம், ஸவிதா, ஸாவித்ரம், அர்க்கம், ஸூர்யன், திவாகரன், இந்த 6-ம் அஸ்தம்.

14. சித்ரா, துவரஷ்டதேவத்யம், துவஷ்டா, ஸுரவர்த்தகி, இந்த 4-ம் சித்திரை.

15. ஸ்வாதி, ஸமீரணம், வாயு, ஸ்வஸநம், அநலம், மாருதம். இந்த 6-ம் ஸ்வாதி.

16. வைசாகம், சூர்ப்பம், ஐந்திராக்னி, இந்திராக்னி, துவி தைவதம், இந்த 5-ம் விசாகம்.



17. மைத்ரம், மித்ரம், அனுராதை, தாலம், இந்த 4-ம் அனுடம்.

18. இந்த்ரா, ஜ்யேஷ்டா, ஹரி, அலக்ஷ்மீ, தரித்திரதா, இந்த 5-ம் கேட்டை.

19. மூலம், நிசாசரம், நைருதம், பிசிதாசனம், இந்த 4-ம் மூலம்.

20. பூர்வாஷாடம், ஜலம், பாத; உதகம், ஆப்யம், இந்த 5-ம் பூராடம்.

21. உத்திராஷாடம், ஆப்யம், விசுவம், விசுவேசம், இந்த 4-ம் உத்திராடம்.

22. சிரவணம், வைஷ்ணவம், ஸ்ரீசம், ஸ்ரீகாந்தம், முரஜித், ஹரி, இந்த 6-ம் திருவோணம்.

23. சிரவிஷ்டா, தனிஷ்டா, வஸு, வஸவம், இந்த 4-ம் அவிட்டம்.

24. சததாரா, சதபிஷக், பிராசேத, வருண, அம்புவம், இந்த 5-ம் சதையம்.

25. அஜைசுபாத், அஹிர்ப்பு, த்நியம், பத்ரம், பாத்ரபதம், இந்த 5-ம் பூரட்டாதி.

26. உத்ரப்ரோஷ்டபதம், அஹிர்ப்புத்நி, இந்த இரண்டும் உத்திரட்டாதி.

27. உபாந்தியம், பௌஷ்ணம், அந்தியம், பூஷா, ரேவதி இந்த 5-ம் ரேவதியின் பெயர் ஆகும்.

## இராசி நிகண்டு

(625) 1. மேஷம், பஸ்தம், க்ரியா, ச்சாக, விரஜம், இந்த 5-ம் மேஷத்தின் பெயர்.

2. விருஷப, தாபுரு, கௌ, இந்த 3-ம் ரிஷபம்.

3. மிதுனம், ந்ருயுகம், யம, ந்ருயுக்மம், யுக்மம், இந்த 5-ம் மிதுனம்.

4. கர்க்கி, கட, கர்க்டக, குளீரம், சந்திரபவனம், இந்த 5-ம் கடகம்.

5. சிம்மம், லேயம், ஹரி, இந்த 3-ம் சிங்கம்.

6. கந்யா, ஸ்த்ரி, வநிதா-நாரி, த்யூந:, பார்த் மீதானம், அங்கனு, இந்த 7-ம் கன்னி.

7. துலாம், தௌலி, வணிக், ஜுகா, இந்த 4-ம் துலாம்.

8. விருச்சிகம், அளி, சி[illegible] இந்த 3-ம் விருக்கிகம்

9. தனு, தளக்ஷிகம், ஹயாங்கம், சாபம், கார்முகம், அசுவம், அசுவஜகனம், இந்த 7-ம் தனசு.

10. மகரம், நக்ரம், மிருகம், ஆகோரகம், இந்த 4-ம் மகரம்.

11. கடம், கும்பம், ஹிக்த்ரோகம், இந்த 3-ம் கும்பம்.

12. மீனம், ஜஷம், மத்ஸ்யம், அநிமிஷம், சபரம், அந்தியம், இந்த 6-ம் மீனத்துக்கு பெயர் ஆகும்.

## ஸ்தான நிகண்டு

(626) 1. கல்யம், தேகம், விலக்னம், லக்னம், ஹோரணி, உதயம், இந்த 6-ம் லக்கனத்திற்குப் பெயர்.

2. துவிதீயம், திரவிணம், வாக்கு, குடும்பம், இந்த 4-ம் இரண்டாமிடம்.

3. ஸஹஜம், துஸ்சிக்யம், திருதீயம், விக்ரம், இந்த 4-ம் மூன்றாமிடம்.

4. ஹ்புகம், வெச்ம, பந்து, ஸுகம், ரஸாதயம், அம்பு, இந்த 6-ம் நான்காமிடம்.

5. திரிகோணம், ஸுதம், புத்தி, பஞ்சமம், இந்த 4-ம் 5-ஆமிடம்.

6. அரி, ஷஷ்டம், க்ஷதம், இந்த 3-ம் ஆறாமிடம்.

7. ஜாமித்ரம், ஜுகம், அஸ்தம், காமம், பார்யா, ஸப்தமம், இவை ஏழாமிடம்.

8. ரந்திரம், நியநம், ஆயுஷ்யம், அஷ்டமம், இந்த 4- எட்டாமிடம்.

9. திரிகோணம், சுபம், தர்மம், நவமம், குருதபஸ், இந்த 5-ம் ஒன்பதாமிடம்.

10. தசமம், கர்மம், ஆக்ஞ, மாநம், அகம், ஆஸ்பதம், இவை 6-ம் பத்தாமிடம்.

11. ஆயம், லாபம், ஏகாதசம், இது 3-ம் பதினோராமிடம்.

12. ரிப்பம், வியம், ஹரநி, துவாதசம், இவை 4-ம் பன்னிரண்டாமிடம் ஆகும்.

(627) லக்னம், 4-வது வீடு 10-ஆவது வீடு இந்த 4-ம் கேந்திரங்கள் ஆகும்.

4-ஆமிடமும் 8-ஆமிடமும் - சதுரஸ்ரம் என்று பெயர்.
5-ஆமிடமும் 9-ஆமிடமும் - திருக்கோணமென்று பெயர்.

4-மிடம் கண்டகமென்று பெயர். இந்த 4-ஆமிடம் கீழ் மீனத்திலும் விருக்கிகத்திலும் பாபியிருப்பதால் ஜுரபீடை தநுகிலும் மேஷத்திலும் பாபியிருந்தால் பிதாவுக்கும் பந்துகளுக்கும் மரணம், [illegible]ரியிலும் கடகத்திலுமாகில் மாதா மரணம், கடகத்திலும், சிம்மத்திலுமாகில் இரணபீடை, சிம்மத்திலும் மிதுனத்திலும் பாபரிருந்தால் ஸ்திரி பீடை, மேஷத்திலும், தனுசிலும் பாயிருந்தால் ஜுரபீடை, விருச்சிகத்திலும் மீனத்திலும் பாபியிருந்தால் பிதா-பந்து மரணம்,



மிதுனத்திலும் சிம்மத்திலும்-மாதா மரணம்,
சிம்மத்திலும் கடகத்திலுமாகில் இரணம்,
கடகத்திலும் கன்னியிலுமிருந்தால் ஸ்திரி வியாதி, மரணம்.

(628) கடகத்திலும் கன்னியிலும் ஸ்திரீ மரணம், மீனத்திலும் விருச்சிகமே வந்தாலும்,-சாபத்திலும் மேஷமே வந்தாலும் மேஷத்திலும சாபமே வந்தாலும்- அதுதான் சிம்மாவலோகனமென்று பெயர்.

மீனத்திலும்- சிம்மமே போயி, சிம்மத்திலும் கடகமே வந்து கடகத்திலும் கன்னியே வந்தால்- மண்டூககதி.

(629) 1. திரேக்காணம் 2. ஹோரை 3. திரிம்சாம்சம் 4. நவாம்சம் 5. துவாதசாம்சம் 6. க்ஷேத்திரம் (லக்னம்) இந்த 6-ம் ஷட்வர்க்கம்.

## திரேக்காணமாவது

ஒரு ராசியை மூன்று பங்காக்கினல் அதற்கு திரேக்காணமென்று பெயர். சரராசியாகில்-முதல் பாகத்தை அந்த ராசிக்காரன் புசியான்,-2-வது பாகத்தை 5-ஆம் ராசி யதிபன், 3-வது பாகத்தை 9-ஆம் ராசி யதிபன் புசியான்.

ஸ்திர ராசியாகில் 1-வது பாகத்தை 9-வது ராசியதிபனும், 2-வது பாகத்தை-அந்த ராசியதிபனும், 3-வது பாகத்தை 5-வது ராசியதிபனும் புசிப்பர்.

உபய ராசியாகில் 1-வது பாகத்தை 5-வது ராசியதிபனும், 2-வது பா[illegible] ராசியதிபனும், 3-வது பாகத்தை அந்த ராசிய[illegible]

[illegible] இருகூறாக்கினல் ஹோரை, ஒற்றை ரா[illegible]ன், இரண்டாம்கூறு சந்திரன் புசியா[illegible]தல் பாதி சந்திரன், இரண்டாம் கூறு[illegible]

(6[illegible]சியை முப்பது கூராக்கினல் திரிம்சா[illegible]கில், முதல்-முதல் 5-பாகம் செவ்[illegible]மேல் 8 பாகம் குரு, மேல் 7 பாக[illegible]ன், ஆகும். இரட்டை ராசி

யாகில் முதல் 5, சுக்ரன், மேல் 7 புதன், மேல் 8 குரு, மேல் 5 சனி, மேல் 5 குஜன், புசியான்.

## மகா மகம்

சிம்மத்தில் குரு இருக்கும் வருஷத்தில்-மாசி மாசத்தில் பௌர்ணமியில் மகநக்ஷத்திரத்தில் சிம்ம லக்கனத்தில் கும்பகோணத்தில் 12 வருஷங்களுக்கு ஒரு முறை கங்கை நதி பிரவேசிக்கும் அப்போது அதில் ஸ்தானஞ் செய்யில் கங்கா ஸ்தான பலன், கோடி யாகஞ் செய்த பலன் உண்டு.

## கிரஹண தோஷம்

சூரிய கிரகணத்திற்கு முன்பு நான்கு ஜாமங்களும், சந்திர கிரகணத்திற்கு முன் மூன்று ஜாமமும் புசிக்கக் கூடாது பாலர், விருத்தர் நோயாளி இவர்களுக்கு தோஷமில்லை.

(631) சூரிய கிரகணத்தில் பிடிக்கும் காலத்திலும்-சந்திர கிரகணத்தில் விடுங்காலத்திலும் புண்ணிய காலம், ஸ்தானதர்பணம் செய்ய வேண்டியது.

சுத்த மண்டலஸ்தானம் விட்ட பிறகு செய்ய வேணும். கிரகண காலத்தில் சமுத்திர ஸ்நானம் உத்தமம், கிட்டாவிடில் குளம் நதி, கிணறு முதலியவைகளில் செய்யலாம், ஆனாலும கங்கை யிருப்பாள் ஆகையால் எந்த ஜலத்தில் ஸ்நானஞ் செய்தாலும் கங்கா ஸ்நான பலனுண்டு.

(632) சந்திரன் கிரஸ்தோதயனால் அன்று பகல் பூராவும் போஜனஞ் செய்யக் கூடாது கிரஸ்தாஸ்த மனமாகில் மறுநாள் பகல் பூராக போஜனஞ் செய்யகூடாது.

(633) சூரியனாகிலும் சந்திரனாகிலும்-கிரஸ்தாஸ்தமனமானால், மறுபடி உதயம் கண்ட பிறகு ஸ்நானஞ் செய்ய வேண்டியது.

## கௌளி-கிழமை

(634) சனி-ராத்திரி 30 நாழிகை, ஞா[illegible] நாழிகை ஆக 60 நாழிகையும் அருகன்-தெற்கே[illegible]

ஞாயறு ராத்திரி 30 நாழிகையும் [illegible] க 90 நாழிகை நிருதி முதல் செவ்வாய் 50[illegible] மீதி 10 நாழிகை புதன் 30 நாழி[illegible] ல் புதன் ராத்திரி 30 நாழிகை விய[illegible] ாழிகை வடக்கு. வியாழன் மீதி 1[illegible] ழிகை ஆக 70 நாழிகை சனிமுதல். [illegible] கிழக்கு. யாழ் முதல் அக்னி முதல் இ[illegible] அறிந்து அதற்கு பலன் சொல்லவும் அ[illegible] வ்— 50 புதன்—40 வியாழன்—80 [illegible] ந்த



படி முந்தி சொன்னபடி அறிந்துக்கொள்ளவும். அருக்கனிப் பல்லி—சினத்தது ஆகாது. திங்கள்-கிழக்கு முன்னே நன்மை. செவ்வாய்-கெட்ட சேதி புதன்-தூரத்தில் நல்ல விசேஷம் வியாழன்-பொருள் லாபம் வெள்ளி-உண்மை வரும் சனி-சண்டை பாழ்மூலை-நன்மை இந்தபடி அறியவும்.

(635) பொருள், சர்பம், புதையல் இட்டுதல், வியாபரம் கைகிட்டும் கைகிட்டாது, நோல் தீர்தல், ஜெயில், ஸ்மசானம்-பயம் இச்சமயங்களில் கௌளி, வலது இடது பக்கத்தில் சொன்னால் நன்மை.

(636) பிரமஸ்தானத்தில் கிழக்கு, வடக்கு, மேற்கு, திசையில் கௌளி சொன்னால் ஐசுவரியம் விருத்தி. அக்கினி முதல் தெற்கு அர்த்த லாபம், வாயு தூரதேசம் பிரயானம், நிருதி-சண்டை, ஈசானம்-பயம், இதில் பார்த்துச் சொல்லும் பலன் அருக்கனில் தேவையில்லை.

(637) அருக்கனில்-பயம், திங்கள்-பிரஹாரம் அடி, செவ்வாய்-லாபம், புதன்- நல்ல சேதி, வியாழன்-எல்லா காரியமும் ஜெயம், வெள்ளி-நன்மை, சனி-மனஸ்தாபம், அக்னி-கலகம், இது நரிகூவினாலும்-தும்பினாலும்- கௌளி சொன்னாலும் பலன்.

(638) சூரியோதயம் முதல் கிழக்கில் அரை ஜாமத்துள்ளும், இரண்டாம் அரை ஜாமம் அக்கினியிலும், மூன்ருவது அரைஜாமத்துக்கு தெற்கு முதல் இவ்விதமே கிழக்கு முதல் அரை அரை ஜாமமாக காகம் கூவும் பலன் கண்டறியவும் கிழக்கு-லாபம், அக்னி-சத்துருநாசம், தெற்கு-மித்திர லாபம், நிருதி-தனலாபம், மேற்கு-மழையுண்டு, வாயு-சண்டை சிலவு வரும், வடக்கு-மாரணபயம், ஈசானம்-விரயம், இவ்விதமறியவும், ஜாமபேதமறிந்து சொல்லவும்.

## இரவில் நாழிகை அறிய

(639) [illegible] நக்ஷத்திரத்திற்கு எட்டாம் நக்ஷத்திரம் உதய நக்ஷ[illegible] தய நக்ஷத்திரம் முதல் சூரிய நக்ஷத்திரமளவா[illegible] ட்டித்தால், அவ்வளவு நாழிகை என்றறிய[illegible]

## [illegible] குஹூ

(640) [illegible] அம்மாவாசை அந்தமும், ஜன்ம ந[illegible] ல் முழு குஹூ என்று பெயர். [illegible] த்திரை, கேட்டை, மூயூரம், விசாகம் [illegible] ஜன்ம பாதத்தில் குஹூ வரும். [illegible] சாந்தி செய்தால் தோஷ பரிகா[illegible]

(641) அசுவனி, ரேவதி, கார்த்திகை, அஸ்தம், பூசம், உத்தி கரங்ள், திருவாதிரை இந்த 9 நக்ஷத்திரங்களுககும் ஷ்ட தோஷ மில்லே.

## அவமாகம், திரிதினஸ் பிருக்

(642) ஒரு தினத்தில் 3 திதி கூடினுல் அது அவமாகம் என்று பெயர் ஒரு திதி 3 தினத்தில் சம்மந்தப்பட்டால் அது திரி தினஸ்ப்ருக். இந்த'இரண்டிலும் சுபகருமங்கள் நீக்கவும்.

## கத்திரி யோகம்

(643) பரணி பின்பாதி, கிருத்திகை முழுவதும், ரோகணி முதல் பாதம், இதில் சூரியனிருக்க கத்திரி என்று பெயர் அதில், மனேவேலே, மரவேலே, கல்வேலே, வீடு கட்டல் இவை முதலிய காரி யங்கள் எல்லாம் செய்யலாம்.

## குரு சுக்கிர அஸ்தமனம்

(644) சுக்கிரன் கிழக்கில் அஸ்தமித்தால் 70 நாளில் மேற்கில் உதிப்பார், மேற்கில் அஸ்தமிக்கில் 10 நாளில் கிழக்கே உதயம், இரண்டு திக்கிலும் 8 மாதங்கள் இருப்பர் விருத்த குருவுக்கு 15 நாள் நீக்கவும், பால குருவுக்கு 8 நாள் நீக்கவும். விருத்த சுக்கிர னுக்கு 10 நாள், விருத்த சந்திரனுக்கு 7 நாள், பால சந்திரனுக்கு ஒரு நாள், நீக்கவும். மற்றொரு வகையில் குரு சுக்கிரர்களின் -பால் யத்திலும் விருத்தத்திலும் 7 நாள் நீக்குதல் போதுமானது.

(645) குரு பலவானுக லக்கினத்திலே இருந்து பாப கிரகம்-3-6-11-ல் இருந்தால்-சுக்ர அஸ்தமன தோஷமில்லே. சுக்கிர உத யமான பின்பு குரு அஸ்தமித்தால் தோஷமில்லே இருவரும்கூடி அஸ்தமித்தால் தோஷமுண்டு, சூத்திராதிகளுக்கு ஒருத்தர் அஸ்த மனம் தோஷமில்லே.

(646) மாசி, பங்குனி வைகாசி, ஆனி, ஆவணி, கார்த்திகை, இந்த மாதங்களில் சுக்கில பக்ஷத்தில்-சுக்கிரன் உதயமாளுலும் அஸ்தமித்தாலும் மகா யுத்தத்திற்கு கா...

(647) சுக்கிராஸ்தமனத்தில் ... மர
ணம், குரு அஸ்தமனத்தில் விவாகம் ... ணம்,
இரண்டு பேர் அஸ்தமனத்திலும் ... மர
ணம் நேரிடும்.

(648) வருஷா காலத் ... யில் வந்
தால் க்ஷம், ரோகினியில் ... சமுத்
திரம், திருவாதிரையா ... பூசம்
க்ஷம், ஆயில்யமாகில் ... முதலாக
ஏழும், அனுஷம் முதல் எ ... ண்ணிப்
பார்த்துக்கொண்டு இதுபோல ...



த்திலும் நல்ல மழை, சமுத்திரத்தில்-அதிவிருஷ்டி, பருவத்தில்-விருஷ்டி நாசம், திரிசூலத்தில்-மகாவிருஷ்டி என்றறியவும்.

## கத்தரி யோகம்

(649) லக்னத்திற்கு முன்னும் பின்னும் பாப கிரகமிருந் தாலும், அதிசாரவக்கிரகதியாளுலும், அதற்குக் கத்தரி யோக மென்று பெயர் (தம்பதிகளுக்கு களகத்தரி).

(650) கர்த்திரியாயிருக்கும் லக்னம், லக்ஷகுணத்தோடுகூடி யிருந்தாலும், காகம் தீண்டிய புரோபிசம் (பலி) போல் நீக்கத் தக்கது.

## சந்திரா பலம் தாரா பலம்

(651) கிரக பலங்கள் எத்தனே உண்டாளுலும் சந்திர தாரா பலமில்லாவிடில் சிறகொடிந்த பறவைபோலாகும்.

## 8-விஷ்டிகள்

(652) 8 விஷ்டிக்கும் அம்சகம் கழிக்கவும், முதலாவது விஷ் டிக்கு முதல் சாமம் விலக்கவும், 2-வது விஷ்டிக்கு இரண்டு ஜாமம், 3-வது விஷ்டிக்கு 3-வது ஜாமம், 4-வதுக்கு 4-ஆம் ஜாமம், 5-வதுக்கு 2 ஜாமம், 6-வதுக்கு 3 ஜாமம், 7வதுக்கு 4ஆம் ஜாமம், 8-வதுக்கு முதல் ஜாமம் நீக்கவும்.

## கிரஹண தோஷ சுத்தி

(653) காடி, மோர், கட்டு சோறு, நெய், பால், தயிர், பாய ஸம், பணியாரம், இவைகளுக்கெல்லாம் கிரகண வேளேயில் தர்ப்பை போட்டு வைக்க சுத்தி என்றவாறு.

## அர்த்தோதயம், மகோதயம்

(654) தை, மாசி, மாதத்திலே அமாவாசை நாள் உதயகால த்தில், ஞாயற்றுக்கிழமையும், வியதீபாதமும், சிரவணமும் கூடி ளுல், இது அர்த்தோதயம். இதில் சமுத்திர ஸ்நானஞ் செய்யில் கோடி சூரிய கிரகண புண்ணியகால பலன் உண்டு.

(655) தை மாசி மாதங்களில், ஞாயற்றுக் கிழமையில் அமா வாசை பூர்வபாகமும், வியதீபாதத்தின் கடைசியும், திருவோணம் 2-ஆம் பாதமும், ஸூரிய உதய காலத்தில் கூடிளுல் அர்த்தோ தயமுண்டு, திங்கட்கிழமை கூடில் மகோதயம்.

## முகூர்த்தகால அளவு

(656) நாரதர்-பகலே-5, 10, 15, 2, 3 பங்காக்குகிறுர்கள் இவ்விதம் 5 விதமாக 5 பக்ஷமுண்டாக்கி இதில் 15 ஆக பிரிக் கிறதும் 5 ஆக பிரிக்கிறதும் நாரதருக்குச் சம்மதம்.

## புண்ணிய காலம்

(657) சித்திரை, ஆடி, அப்பசி, இந்த 3-ம் தவிர மிகுந்த மாத ங்கள் 7 பகலில் பிறந்தால் பகலெல்லாம் புண்ணிய காலம், இரவில் பிரந்தால் இரவெல்லாம் புண்ணிய காலம் ஆகும். அர்த்த ராத்தி

ரிக்குமுன் பிறந்தால் முதல் நாள் பகலுக்குமேல் புண்ணியகாலம், அர்த்த ராத்திரிக்குமேல் பிறந்தால், மத்தியானமளவும் புண்ணிய காலம். அர்த்த ராத்திரியில் பிறந்தால் முதல் நாளும், மறுநாளும், இரண்டு நாளும் புண்ணியகாலம். அயனங்களுக்கும் விஷுக்களுக்கும் விசேஷமுண்டு.

## அயன புண்ணியகாலம்

(658) (1) ஆடி மாதப்பிறப்பு விடியற்காலம் பிறந்தாலும், முதல் நாளெல்லாம் உதயாதியாக புண்ணியகாலம். தை மாதப் பிறப்பு சாயங்காலத்திலானாலும் அர்த்த ராத்திரியிலானாலும் மறுநாள் அஸ்தமனம் வரையில் புண்ணியகாலம். (2) ஆடி மாதம் விடியற் காலையில் பிறந்தாலும்-முன்பு 60 நாழிகை புண்ணியகாலம், தை மாதம் முன் மாலையில் பிறந்தாலும், மேல் 60 நாழிகை புண்ணிய காலம். (3) தக்ஷிணாயனத்திற்கு முன்னே 20 நாழிகை புண்ணிய காலம். உத்தராயணத்திற்குப் பின் 20 நாழிகை புண்ணியகாலம். சித்திரை விஷுவுக்கும், அற்பசி விஷுவுக்கும், முன்னே 10 நாழிகையும், பின்னே 10 நாழிகையும் புண்ணியகாலம். அயன விஷு காலங்கள் தவிர மற்ற ஸங்கிரமணங்களுக் கெல்லாம் முன்பு 60 நாழிகையும் பின்பு 60 நாழிகையும் புண்ணியகாலம்.

விஷய அட்டவணை 2-வது பக்கம் தொடர்ச்சி


| | | | |
|---|---|---|---|
| பௌமாம்சம் | 81 | கிரக ஜாதி முதலியன | 89 |
| புதாம்சம் | 82 | நட்சத்திர நிகண்டு | 90 |
| குரு அம்சம் | 82 | இராசி நிகண்டு | 91 |
| சுக்ராம்சம் | 82 | ஸ்தான நிகண்டு | 92 |
| சனி அம்சம் | 82 | கேந்திர கோணம் | 92 |
| ராஜா, மந்திரி, நிர்ணயம | 82 | திரேக்காணம் | 93 |
| ஆதாயம் விரையம் நிர்ணயம் | 83 | மகாமகம் | 94 |
| கந்தாயம் | 83 | கிரஹண தோஷம் | 94,79 |
| கிரக பலன் | 83 | கௌளி-கிழமை | 94 |
| கிரக ராசி சஞ்சார காலம் | 83 | இரவில் நாழிகை அறிய | 95 |
| கோசார பலன் | 83 | முழுகுஹு | 95 |
| வரப்போகும் நக்ஷத்திரம் | 85 | அவமாகம் | 96 |
| வேதை நட்சத்திரங்கள் | 86 | திரிதினஸ் பிருக் | 96 |
| லத்தை | 86 | கத்தரி யோகம் | 96 |
| கிராந்தம் | 87 | குரு சுக்கிர அஸ்தமனம் | 96 |
| அங்க பிருஹஸ்பதி | 87 | கத்தரி யோகம் | 97 |
| அங்க சனி | 87 | சந்திரா பலன் தரா பலன் | 97 |
| அங்க, ராகு, கேது | 88 | விஷ்டிகள் | 97 |
| கிராமப் பொருத்தம் | 88 | மாத சங்கராந்தி புண்ய காலம் | 98 |
| ஆரூட சூரியாதி நவக்கிரக உதய பலன் | 88 | | |


முற்றிற்று.

# நாமகள் திருக்கணித

## சர்வ முகூர்த்த பஞ்சாங்கம்.

இந்தத் தமிழ் பஞ்சாங்கம் சுமார் 27-வருஷங்களாகப் பஞ்சாங்க கணிதத்தில் பழக்கமுள்ளவரும் (1) ஜாதக கணிதம் முதல் பாகம் என்னும் ஜோதிட கிரக சட்பலம், ஆயுள் கணிதம், (2) ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்னும் ஜாதகப் பலாபலன்கள் நிர்ணயம், (3) ஜாதக கணிதம் மூன்றாம் பாகம், நான்காம் பாகம் என்னும் ஜாதக மனோரஞ்சிதம் மலர் 1, 2, (4) ஜாதக சிரோன்மணி என்னும் வராஹமிஹிரருடைய பிருஹத் ஜாதகம், (5) நவக்கிரக ஸ்புட கணனம், (6) லக்கினஸ்புட பாவஸ்புட கணனம், (7) ஜாதக பாவ இருவாக்ஷி-ஆயுள், ஜீவன, களத்திர பாவம்: (8) ஜாதக ஜம்புநாதீயம், (9) ஜாதக சர்வார்த்த சிந்தாமணி; (10) சென்ற 63 வருஷத்திய கிரகங்களின் கிராந்தி, (11) சுகப்பிரம்ம ரிஷி வாக்கியம் என்னும் சுகர்நாடி, (12) தெசாபுக்தி சிந்தாமணி, (13) தெசாரிஷ்ட நிவாரணி ஆகிய முதலிய ஜோதிடப் புத்தகங்களின் ஆசிரியர்கள் முதலியனவாகிய C. கோவிந்த ராஜன், B. A., (Mathematics), C. S. மணியம் என்னும் சி. சுப்பிரமணியம், B. A. (Honours) இவர்களால் தயாரிக்கப் பட்டது. இப்பஞ்சாங்கத்தை எல்லா வர்ணத்தாரும், மதஸ்தரும், எல்லா கொள்கையுடையவரும் உபயோகப்படுத்தும்படியாய் விரதாதி; உற்சவாதி, ஸ்ராத்தாதி முதலிய விஷயங்கள் அவரவர்கள் கொள்கை பிரகாரம் தயாரிக்கப் பட்டிருக்கிறது. வைஷ்ணவ, சைவ, ஸ்மார்த்த, மத்வ, மதாச்சாரம், பரம்பரை வழக்கம் ஆகிய இவைகளை அனுசரித்து விரதாதி, உபவாசம், பண்டிகை முதலியவைகளை அவாளவாள் அனுஷ்டித்து வருகிற தர்ம சாஸ்திரம் ஆகிய இவைகள் பிரகாரம் நிர்ணயிக்கப் பட்டிருப்பதால் இதை எல்லா மதஸ்தரும் உபயோகப்படுத்தலாம். மேலும் இதில் ஜோதிடர்களுக்கும், மற்றவர்களுக்குங்கூட மிகவும் உபயோகமாய் இருக்கும் படியாய் அனேக ஜோதிட பொது விஷயங்கள் கூட மிகவும் விவரிசையாகவும் தெளிவாய் இருக்கும்படியாயும், சுலபமாய்த் தெரியும்படியாயும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் நவக்கிரக ஸ்புடம் தினந்தோறும் கொடுக்கப்பட்டிருப்பதால் நமக்கு தேவையான மணி, நிமிஷத்திற்குக் கிரகஸ்புடம் துல்லியமாய்க் கணித்துக்கொள்ளலாம். இதில் அனேக ஜோதிட விஷயங்கள் சுலபமாய் அறிந்துக்கொள்ளும்படியாய்க் கொடுத்திருப்பதால் ஜோதிடந் தெரியாதவர்கள்கூட இவ்விஷயங்களைச் சுலபமாய்த் தாமே தெரிந்துகொள்ளலாம். இதில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள கிரஹணம், கிரஹஸ்புடம் முதலிய கணன விதிகள் தற்காலத்தில் உன்னத நிலையிலிருக்கின்ற கணன விதிகள் பிரகாரம் கணிக்கப்பட்டு உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றன. இது ஜோதிடர்களுக்குக் கூட மிகவும் உபயோகமானது. இப்பஞ்சாங்கத்தை எல்லோரும் உபயோகப் படுத்துமாறு கோரப்படுகிறது.

# தென்னாட்டு பஞ்சாங்கம்

## வாக்கியம்.



பஞ்சாங்க ஆசிரியர்
C. G ராஜன் B.A., என்னும்
C. கோவிந்த ராஜன், B.A.,
(Mathematics)

இது தென்னாட்டிற்கென்றே பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட தமிழ் வாக்கிய பஞ்சாங்கம். இதைத் தென்னாட்டு ஆஸ்திகர்களும், வைதீகர்களும், தங்கள் வீடுகளிலும், கோயில்களிலும் தங்கள் தங்கள் பூர்வீக தர்ம சாஸ்திரம், நிபந்தனக் கிரந்தம், பரம்பரை வழக்கம் முதலிய கொள்கைகளைக் கைவிடாமல் அனுஷ்டிக்க வேண்டும் என்ற ஆசையை உடையவர்களும் அனுஷ்டிக்குமாறு தயார் செய்திருக்கிறது. இது பூர்வீக கணித முறைப்படி தயார் செய்யப்பட்ட (பஞ்சாங்கத்தின் பஞ்ச அங்கங்களாகிய) 1-வாரம், 2-திதி, 3 நட்சத்திரம், 4-யோகம், 5-கரணம் ஆகிய இந்த ஐந்து அங்கங்களை அநுசரித்து இப்பஞ்சாங்கத்தில் விரதாதி, உற்சவாதி, ஸ்ராத்தாதி, விஷயங்கள் வைஷ்ணவ, சைவ, ஸ்மார்த்த, மத்வ, மதாச்சார பரம்பரை வழக்கம் பிரகாரம் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன. ஆகையால் இது ஆஸ்தீகர்களுக்கும், வைதீகர்களுக்கும், தங்கள் குடும்ப தர்ம சாஸ்திரங்களையும், ஆச்சாரங்களையும் அனுசரித்து வருபவர்களுக்கும், கோயில்களி லுள்ளவர்களுக்கும் மிகவும் உபயோகமானது. இதில் அனேக பொது விஷயங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது நாமகள் திருக்கணித பஞ்சாங்கத்தின் ஆசிரியர்களாகிய (1) C. கோவிந்த ராஜன், B.A. (Mathematics), (2) C. S. மணியம் என்னும் C. சுப்பிரமணியம், B.A (Honours) இவர்களால் கணிக்கப்பட்டு தயார் செய்யப்பட்டனவாகும். இப் பஞ்சாங்கத்தில் கிரகஸ்புடங்களும், கிரஹணங்களும் தற்காலத்திற்குச் சரியாயும், துல்லிபமாயும் இருக்கும்படியாகச் செய்யப்பட்டிருக்கின்றன. இப் பஞ்சாங்கத்தை உபயோகப்படுத்தி நன்மையை அடையுமாறு கோரப்படுகின்றது.